கல்கி



கைவிடப்பட்ட கன்னியாகுமரி

KALKI
8.6.86
ரூ.1.50



டூரிஸ்டுகள் தவிக்கிறார்கள்


"எனக்குப் பிடித்த
சக-நடிகரா?
ஸின்த்தால்!
மூன்று ஷி:ப்ட்களில்
நடித்த பிறகும்
அது என்னை
புத்துணர்ச்சியுடனும்
எழிலுடனும் வைக்கிறது."
Godrej
CINTHOL
LUXURY
TOILET POWDER
CINTHOL FOR FRESHNESS ALL DAY LONG
PROTECTIVE • SOOTHING • FRAGRANT
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
இப்பொழுது
புதிய பேக்கில்
CHAITRA-B-C-4037AM
கோத்ரெஜ்
தயாரிப்பு
ஸின்த்தால் — நாள்முழுதும் புத்துணர்ச்சியூட்டும் நறுமணம்



இந்த சமுத்திரக் கன்னிக்குக் கல்யாணம் எப்போது?

பரபரப்பான சரித்திர நிகழ்ச்சி ஒன்றைச் சொல்கிறோம், கேளுங்கள்!


திருவிதாங்கூர் சமஸ்தானத்து மன்னர் மார்த்தாண்ட வர்மா மகாராஜாவிற்கு செய்தி பறந்தது: குளச்சல் துறைமுகத்தை வசப்படுத்த டச்சுக்காரர்கள் கப்பல் படையுடன் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்! மஹாராஜா யோசித்தார். அவசர அவசரமாக கட்டை வண்டிகளைக் கொண்டு வந்து கடற்கரையோரம் வரிசையாக நிறுத்தினார். அவற்றில் கறுப்பு வண்ணம் பூசப்பட்ட பனை மரங்களைப் படுக்க வைத்தார். தூரத்திலிருந்து அவற்றைப் பார்த்த டச்சுப் படை வீரர்கள், 'அடேயப்பா, இவ்வளவு பீரங்கிகளா, நம்மைத் தாக்க?' என்று பீதி அடைந்து அதிர்ந்து போனார்கள். நிலைகுலைந்து போன அந்த டச்சுப் படையை மார்த்தாண்ட வர்மா வெகு எளிதில் போரில் வென்றார். மக்கள் 'மார்த்தாண்ட வர்மா மஹாராஜாவிற்கு ஜே!' என்றார்கள். இந்த நிகழ்ச்சிக்கு ஆதாரமாக அந்தக் கடற்கரையோரத்தில் ஒரு நினைவு ஸ்தூபியையும் எழுப்பினார்கள்.

எதற்கு இத்தனை பீடிகை என்றால், கன்னியாகுமரி மாவட்டத்தில் இயற்கையாக அமைந்துள்ள இந்தக் குளச்சல் துறைமுகத்தின் முக்கியத்துவம் உணர்ந்து, இதை வசப்படுத்த அன்னிய நாட்டினர் ஆசைப்பட்டார்கள். ஆனால் அதற்கு இடம் தராமல் அன்றைய மஹாராஜா வீரத்தாலும், தந்திரத்தாலும் துறைமுகத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். இந்த நிகழ்ச்சிக்கு முன்பும் பின்பும் சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு அதைப் பெரிய வியாபாரத் துறைமுகமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

அத்தகைய துறைமுகம் இன்று எப்படி இருக்கிறது?

ஏகப்பட்ட கடிதங்கள் வந்தன, அந்தத் துறைமுகம் வளர்ச்சியின்றி வாழ்விழந்து கிடப்பதாக. எனவே நேரில் ஒரு விசிட் கொடுத்தோம்.

குளச்சல் சென்று அந்த ஊர் நகர் மன்றத் தலைவர் ஜேசையாவை அழைத்துக் கொண்டு



* மகாராஜா மார்த்தாண்ட வர்மா நினைவாக ஸ்தூபி.



* கிடங்கு கிடையாது. எனவே வானம் எங்கள் கூரை.

நடந்தோம். 'ஹோ' 'ஹோ' என்று ஆர்ப்பரிக்கும் அலைஓசை காதில் கேட்டுக்கொண்டேயிருக்க, அந்த சமுத்திரக் கன்னியை மட்டும் பார்க்க முடியவில்லை! மீனவர் இல்லங்கள், துறைமுக அலுவலகம் ஆகியவற்றை மறைப்பாய் வைத்துக் கொண்டு அவற்றின் பின்னால் அவள் மறைந்திருந்தாள். ஒரு கருங்கல் தடுப்புச்சுவர் அவளுக்குத் திரை போட்டிருந்தது! அந்தச் சுவரைக் கடந்து மெல்ல எட்டிப் பார்த்தோம்.

ஆஹா! என்ன ஒரு காட்சி! அதில்தான் எத்தனை கவர்ச்சி? நீலநீரில் வெள்ளை நுரைக் கொண்டைகளோடு அலைஅலையாய் எழுந்து வரவேற்றாள் கடல் கன்னி. வரவேற்பில் தான் ஆர்ப்பாட்டம். மற்றபடி பின்னணியில் அமைதி. அதில் சோகம் கலந்திருப்பதாக எங்களுக்கு ஒரு பிரமை. அந்தக் கடலில் கொஞ்ச தூரத்தில் ஒரு ராட்சதக் கப்பல் நின்றிருக்க, அந்தக் கப்பலை நோக்கி ஓர் ஊர்வலம் சென்றது. பள்ளிக்குப் போகும் சின்னப் பையன்களை ஆயா கைபிடித்து அழைத்துப், போகிறாற்போல ஒரு ஐந்து ஆறு சிறு படகுகளை விசைப் படகு ஒன்று இழுத்துக் கொண்டு போனது.

கரையில் ஈரம் தோய்ந்த மணல். அதில் பதிந்த ஆயிரக்கணக்கான கால் தடங்கள், சிறு அலைகளைக் கொஞ்சிக் கொண்டு தோணிகள் நின்றிருக்க, ஏராளமான தொழிலாளிகள் சிறுசிறு மணல் மூட்டைகளை முதுகில் சுமந்து தோணி நோக்கி ஓடினார்கள். அவர்கள் சுமந்த மணல் மூட்டைகள் கடற்கரை திறந்தவெளியிலேயே குவிந்து இருந்தன. ஒரு பக்கம் திரும்பி வந்த மீனவர்கள், வலையில் அகப்பட்ட மீன்களைக் கூடைகளில் போட்டுக் கொண்டிருந்தார்கள். தூரத்தில் கடலை நோக்கித் தென்னைகள் சாய்ந்தன.

எங்களுடன் வந்த ஜோசையா ஒருமுறை குளிர்கண்ணாடியை அகற்றிப் போட்டுக் கொண்டார். "எவ்வளவு அழகான எடம் பார்த்தீங்க இல்லே?"

தலையாட்டினோம்.


"அரபுக் கடல்லயே இதான் சார் முதல் துறைமுகம். அதுவும் இயற்கைத் துறைமுகம். தூத்துக்குடியெல்லாம் செயற்கைத் துறைமுகம். ஆனா இங்கே, கரையிலிருந்து இருநூறு மீட்டர் தூரத்திலேயே கப்பல் வந்து நிக்க வசதி இருக்கு. இயற்கையாவே அமைஞ்சிருக்கிற இந்தத் துறைமுகத்தை கவர்ன்மெண்ட் கவனிக்கறதேயில்லே...

அவர் குரலில் ஆதங்கம் இருந்தது.

"இந்தத் துறைமுகத்திலிருந்து இப்போது என்ன ஏற்றுமதி ஆகிறது?

"வெறும் மணல் சார். மணவாளக் குறிச்சி மணல் ஆலையிலேர்ந்து எடுக்கற மணல்தான் ஏற்றுமதி ஆகுது. அதுக்கும் ஒரு கதை இருக்கு. மொதல்லே இந்தத் துறைமுகத்திலேர்ந்து கயிறு ஏற்றுமதியாகிக்கிட்டிருந்தது. அந்தக் கயிறுல எல்லாம் ஒட்டிக்கிட்டிருந்த மணலை ஃபாரின்ல பார்த்து, 'அட, இந்த மணல் விசேஷமான மணலாச்சே... இதிலேர்ந்து அபூர்வமான மூலப்பொருள் கிடைக்குமே, அது கிடைக்குமே, இது கிடைக்குமே'ன்னு இந்த உலோக மணலை ஏற்றுமதி பண்ணச் சொன்னாங்க.. அதை இப்ப பண்ணிக்கிட்டிருக்காங்க...

மத்தபடி இந்த மாவட்டத்தில கிடைக்கற ரப்பர், தேங்காய், கயிறு, முந்திரிப் பருப்பு, அகில், தேக்கு, சந்தனம், நல்ல மிளகு இதெல்லாம் கேரளா போய் கொச்சின் ஹார்பர்லேர்ந்து ஏற்றுமதியாகுது... அவ்வளவு ஏன் சார்... எறால்மீன்... ஃபர்ஸ்ட் கிளாஸ் மீன், கிலோ 120 ரூவா விலை போகக்



கூடியது... இந்தக் கன்னியாகுமரி மாவட்டத்தில ஏராளமாகக் கிடைக்கிறது. அதுவும் கொச்சின்லேர்ந்துதான் ஏற்றுமதி ஆவுது...''

''ஏன் அப்படி... இந்தத் துறைமுகத்திலேர்ந்தே ஏற்றுமதி செய்ய முடியாதா?

'என்ன கேள்வி கேக்கான்?' என்பது போல் ஒரு பாவம் காட்டினார் ஜேசையா.

''ஏன் சார்... ஹார்பரை இம்ப்ரூவ் பண்ணுத்தானே சார் நிறையக் கப்பல் வரும் போகும்... இப்ப வருஷத்தில அஞ்சு இல்ல, ஆறு கப்பல் வருது... மணல் லோட் ஏத்திக்கிட்டு போவுது...

''என்ன மாதிரி அபிவிருத்தி பண்ணனும்?''

''அதாவது சார்... இங்க முந்நூறு மோட்டார் போட்டோ என்னவோ இருக்கு. அந்த மோட்டார் போட் வந்து நிக்கறதுக்கு ஒரு



• ''லோ. அது அப்படித்தான்!'' கே. மோகன்ராஜ், துறைமுகப் பாதுகாப்பாளர்.

படகுத்துறை இல்லாததாலே அத்தனையும் தூத்துக்குடிக்கும் கொச்சினுக்கும் போய்டுது. ஒரு ஜெட்டி (படகுத்துறை) கட்டினா கப்பலுக்கு டைரக்டா மோட்டார் போட் போகும். மோட்டார் போட், பார்ஜ் எல்லாம் நிறைய அளவில் சரக்கு ஏத்திக்கிட்டு போகும். துறையே இல்லே. அப்புறம் போட் எங்கேர்ந்து வரும்? அந்த மாதிரி ஒரு ஜெட்டி வந்தா அப்புறம் இங்க ஐஸ் ப்ளான்ட், கோல்ட் ஸ்டோரேஜ் எல்லாம் கட்டி மீன்களை எல்லாம் பாதுகாத்து வெச்சு அனுப்பலாம். இப்ப எந்த வசதியும் இல்ல... இந்த உலோக மணல் மூட்டைங்களை இப்படி திறந்தவெளியில் போட்டிருக்காங்க. உப்புத் தண்ணி கலந்தா அந்த மணல் கெட்டுப் போய்டும். அந்த மணலை வாங்கின ஃபாரின் கம்பெனிக்காரன் அப்புறம் அதை வேண்டாம்னு சொல்லிடுவான். அதுக்கு ஒரு கோடவுன் இருக்கா பார்த்தீங்களா...?''

அவர் சொன்னது நிஜமான விஷயம். மணல் மூட்டைகளை கடற்காற்று தழுவிக் கொண்டிருந்தது.

''இந்த வளர்ச்சித் திட்டமெல்லாம் யார் செய்யணும்?''

''நம்ப தமிழ்நாடு அரசாங்க...'' என்று மாரில் தட்டிக் கொண்டார். ''நாகர்கோவில் இ. காங்கிரஸ் எம். பி. டென்னிஸ், குளச்சல் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய பத்து கோடி ரூபாய் அனுமதி ஆகியிருக்கிறது என்று அனௌன்ஸ் பண்ணுரு. இந்த நியூஸ் 10.1.85 குமரி முரசு பத்திரிகையிலும், 11.1.85 மாலைமுரசிலேயும் வந்தது. (பேப்பர் கட்டிங்குகளைக் காண்பித்தார்) எங்க பத்து கோடி? ஒண்ணுமே இல்லேயே? அப்புறம் இந்தத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யறதுக்காக தமிழ்நாடு அரசு 2.45 கோடி பட்ஜெட்ல ஒதுக்கியிருக்கோம்னு சொன்னுங்க. அதில முதல் கட்டமா கடல்ல பாலம் கட்டணும்னு ஒரு திட்டம் போட்டாங்க. அதுக்கு 24 லட்ச ரூபா ஆகும்னு எஸ்டிமேட் போட்டாங்க. மணவாளக்குறிச்சி மணல் ஆலைக்காரங்க அந்த பணத்தில அம்பது சதவீதம் 'நாங்க அட்வான்ஸா கொடுக்கறோம். அப்புறம் துறைமுகத்துக்கு ஒவ்வொரு லோடிங்குக்கும் கொடுக்க வேண்டிய பணத்தில கழிச்சிக்கறோம்'னு சொன்னுங்க...

• 'என்ன கேள்வி கேக்கான்' என்பது போல் ஒரு பாவம் — குளச்சல் நகர மன்றத் தலைவர் ஜே. ஜேசையா.





தேசிக வினாயகம் பிள்ளை, ஆறுமுக நாவலர், நாடக மன்னர் டி.கே.எஸ். சகோதரர்கள் ஆகியோரை ஈந்தது, நாஞ்சில் நாடு என்று பெருமையுடன் அழைக்கப் பெறும் கன்னியாகுமரி மாவட்டமே.

பெங்களூர் டாக்டர் கிருஷ்ணசுவாமி.

எஸ்டிமேட் எல்லாம் தயாரிச்சு தமிழ்நாடு கவர்ன்மெண்ட்டுக்கு அனுப்பினாங்க. அந்த ஃபைல் அங்க சுமார் ஒன்றரை வருஷம் தூங்கிடிச்சு. இப்ப என்ன ஆச்சு? பாலம் கட்ற வேலையோட எஸ்டிமேட் 24 லட்சத்திலேர்ந்து 48 லட்சம் ஆய்டிச்சு. மணவாளக்குறிச்சி மணல் ஆலைக்காரங்க 'நாங்க கூடுதல் அட்வான்ஸ் தரமாட்டோம்'னு கையை விரிச்சிட்டாங்க... இப்ப இந்தத் துறைமுகம் இன்னும் அப்படியே, போட்டது போட்டபடி இருக்கு... இதை இம்ப்ரூவ் பண்ணா எவ்வளவு பேருக்கு வேலை கெடைக்கும்! இந்த மாநிலம் எவ்வளவு தூரம் மேல போகும்...!''

ஜில்லென்று ஒரு அலை அடித்துச் சாரலை மேலே பன்னீர் போலத்தூவ, ஒரே ஒரு துளி உதட்டில் பட்டது. உப்புக் கரித்தது. "நீங்க எல்லாம் உப்புப் போட்டு சாப்பிடறவங்கதானா?'' என்று ஸிம்பாலிக்காக சமுத்திரக்கன்னி கேட்கிறாளோ?

பக்கத்திலேயே மணவாளக்குறிச்சி மணல் ஆலையின் ஏற்றுமதி அலுவலகம் இருந்தது. அதில் நுழைந்தோம். ஒரு கரும் பலகை, துறைமுகத்தில் வந்து நிற்கும் கப்பல் எங்கே போகப் போகிறது என்ற விவரமெல்லாம் எழுதப்பட்டு நின்று கொண்டிருந்தது. கண்ணாடி ஜன்னல் வழியே கப்பல் தெரிந்தது. இரண்டு ஆசாமிகள் இருந்தார்கள். வாயைத் திறக்கப் பயந்தார்கள். பொதுவாகச் சில விஷயங்களைப் பற்றிச் சொன்னார்கள்: ஒரு கப்பலில் சரக்குகளை ஏற்ற பத்து நாட்கள் ஆகலாம். க்ளைமேட் மோசமாக இருந்தால் 31 நாட்கள். இந்தக் கப்பல் ஏற்றுமதியால் ஆயிரம் பேருக்கு வேலை. ஒரு நாளைக்கு 35/– ரூபாயிலிருந்து 40/– ரூபாய் வரை கூலி. இப்போது இந்தக் கப்பல் ஹாலந்திலுள்ள ராட்டர்டாம் போகிறது.

''அதெல்லாம் சரி. இந்த மணல் மூட்டைகளைச் சரியானபடி பாதுகாக்கலையே...''

''வாட்ச்மேன் இருக்கார் சார்... தார்ப்பாலின் கவர் போட்டு மூடி வைப்போம்.''

அதற்கு மேல் அங்கே விஷயம் ஒன்றுமில்லை. புறப்பட்டோம். பக்கத்திலேயே துறைமுகப் பாதுகாப்பாளர் வீடு இருந்தது. உள்ளே நுழைந்தோம்.

''ஹலோ ஐ'ம் மோஹன்ராவ்'' என்றார். கைகுலுக்கினார். சிரித்த முகத்துடன் இருந்தார். நகர்மன்றத் தலைவர் ஜேஸையாவின் மனக்குமுறல்களை அவரிடம் சொன்னோம். சிரிப்பு மாறவில்லை.

''சர்வே ஆசாமிகள் வந்து இந்த இடத்தை சர்வே செய்தார்கள். இந்தத் துறைமுகத்தை டெவலப் செய்ய வசதியான துறைமுகம் தான் என்று நான்கு லட்சம் வாங்கிக் கொண்டு சொன்னார்கள் — அதாவது சர்வேக்காக ஆன செலவு நான்கு லட்சம். சரி என்று நாங்களும் ஒரு ஜெட்டி கட்ட எஸ்டிமேட் எல்லாம் போட்டு கவர்ன்மெண்ட்டுக்கு அனுப்பினோம். அனுப்பி ரெண்டு வருஷம் இருக்கும். அது இல்லாம இங்க இருக்கிற பெரிய மனிதர்கள் எல்லாம் சேர்ந்து அட்வைஸரி கமிட்டி மாதிரி சேர்ந்து தீர்மானங்கள் எல்லாம் போட்டு கவர்ன்மெண்ட்டுக்கு அனுப்பினோம். கவர்ன்மெண்ட்ல அந்த விஷயம் பெண்டிங்ல இருக்கு. எதனால அது லேட்டாகுதுன்னு கேட்டா... ஸாரி. (சிரிப்பு தொடர்கிறது) 85 — 86 ல கவர்ன்மெண்ட்ல சுமார் 17 லட்சம் சாங்ஷன் பண்ணாங்க. நாங்க அதை வெச்சு துறைமுகத்துக்கு ஒரு அப்ரோச் ரோடு போட்டோம். 86 — 87 ல ஏதாவது சாங்ஷன் ஆனா ஒரு சரக்கு கோடவுன் கட்டலாம்னு உத்தேசம். அந்த கோடவுன் கட்டினா தாது மணலை பாதுகாப்பா வைக்க உபயோகமா இருக்கும். படகுத்துறை வந்துட்டா பார்ஜ் (சிறு கப்பல்) கொண்டு வருவோம். லோடிங்கிற்கு வசதியா இருக்கும். இன்னும் என்னென்னமோ பண்ணலாம். ஆனா அதில பாருங்க... இந்த குளச்சல் துறைமுகத்திற்கு கண்ட்ரோல் ஆஃபீஸ் ராமேஸ்வரத்தில இருக்கு. நாங்க எது எழுதினாலும் ராமேஸ்வரத்துக்குத்தான் எழுதணும். நாங்க எழுதறது ராமேஸ்வரத்துக்குப் போய், அங்கேர்ந்து தமிழ்நாடு கவர்ன்மெண்ட்டுக்குப் போய்... உங்களுக்கே தெரியும். (மறுபடி சிரிப்பு.) தூத்துக்குடி துறைமுகம் போர்ட் ட்ரஸ்ட் ஆஃப் இண்டியா, ஸெண்ட்ரல் கவர்ன்மெண்ட் கண்ட்ரோல்ல இருக்கு. தூத்துக்குடி துறைமுக ட்ரஸ்ட் சேர்மன் எவ்வளவு செலவு வேணும்னாலும் செய்து, போர்ட் மீட்டிங் கூட்டி, 'நான் இவ்வளவு செய்ஞ்சேன்'னு சொல்லலாம். ஆனா நான் பைசா செலவு செய்யணும்னாலும் தமிழ்நாடு கவர்ன்மெண்ட் சாங்ஷன் வாங்கியாகணும்... ஸோ... அது அப்படித்தான்...'' என்றார். கடைசிவரை அந்தச் சிரிப்பு மாறவே இல்லை. மறுபடி கைகுலுக்கி விடையளித்தார்.

வெளியே வந்தோம். சமுத்திரக்கன்னி சீறிக் கொண்டிருந்தாள். ஒரு குடும்பம் முழுவதுமாகச் சேர்ந்து அந்தக் குடும்பத்துக் கன்னிப் பெண்ணை உதாசீனப்படுத்திவிட்ட மாதிரியான நிலையில் அந்தத் துறைமுகக் கன்னி இருந்தாள்.

இந்த சமுத்திரக்கன்னிக்குக் கல்யாணம் எப்போது?

புது வணிகம்
ரூ. 7,000 கோடியைத் தாண்டிவிட்டது.

எல்ஐஸி வெகுவாக முன்னேறிவிட்டது சாதனையிலும் சேவையிலும்.



இந்தியாவில் எல்ஐஸியால் 1985-86ல் முடிக்கப்பட்ட புது வணிகம் தனி நபர் காப்புறுதியின் கீழ் ரூ. 7,059.47 கோடி ஆகும். இது முந்தைய ஆண்டைவிட 31.3 சதவிகிதம் கூடுதலாகும். இந்தப் புது வணிகம் 32,82 லட்சம் புதிய பாலிஸிகளால் ஏற்பட்டது. இப்புதிய பாலிஸிகளின் எண்ணிக்கை முந்திய ஆண்டைக் காட்டிலும் 21.05 சதவீதம் கூடுதலாகும்.

குரூ இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின் கீழ், எல்ஐஸி 11.56 லட்சம் நபர்களை காப்புறுதி செய்து மொத்த குழு வணிகமாக 9,613.76 கோடி செய்தது. 2,832 புதிய குழு திட்டங்கள் 1985-86ல் உருவாயின. இது 1984-85ஐக் காட்டிலும் 20 சதவீதம் அதிகமாகும்.

தனி நபர், குழு இன்ஷ்யூரன்ஸ் இரண்டையும் சேர்த்து 1985-86ல் ரூ. 16,673.23 கோடி புது வணிகமாகக் கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் எல்ஐஸியால் செய்யப்பட்ட சாதனைகளில் இது மிகச் சிறந்தது.

இந்த ஆண்டில் சமூகத்தின் நலிந்த பகுதியைச் சேர்ந்தவர்களையும் ஆயுள் இன்ஷ்யூரன்ஸின் பாதுகாப்பின் கீழ் கொண்டு வருவதில் மிகுந்த முன்னேற்றமடைந்துள்ளோம். தமிழ் நாட்டு அரசுடன் கூட்டிணைந்து ஒரு பெரிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது இதன்கீழ் வரப்பட்ட 4 லட்சம் கிராமிய ஏழை மக்கள் ஒரு நிதியின் கீழ் அடங்காத் தொழிலாளர்களான சிகை திருத்துபவர்கள், சலவை செய்பவர்கள், கை வண்டி இழுப்பவர்கள், தச்சர்கள் மற்றும் வேளாண்மை செய்பவர்கள்.

எல்ஐஸியின் ஐந்து மண்டலங்களில் கிழக்கு மண்டலம் மிக உயர்ந்த வணிக வளர்ச்சியான 35 சதவீதம் காட்டியது.

43 பகுதி அலுவலகங்களில் கிழக்கு மண்டலத்திலுள்ள கட்டாக் பகுதி 64.6 சதவீதம் வளர்ச்சியைக் காட்டி முதலிடத்தைப் பெற்றது.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

RADEUS/LIC/3-86-1

சவுக்கு நுனியில் ஒரு சமாதானம்



அருள் தாஸ்



குளைதாயகம்: "இந்தக் கையைத்தாங்க போலீஸ் ரெண்டுக்கும் உதவாமப் பண்ணியிருக்கு."



ஜொனியஸ்

குளச்சலில் வாடகை சைக்கிள் எடுத்துக் கொண்டோம். மண்டைக்காடு போகும் சற்று இறக்கமான சாலை. ஆங்காங்கே போன வருடம் ஊற வைத்த தென்னை மட்டைகளை இப்போது மிஷினில் செலுத்தி நார் பிரித்து கயிறுகளாய்த் திரித்துக் கொண்டிருக்கும் காட்சி. இருமருங்கும் இயற்கையின் வனப்பு.

''கொட்டில்பாடு எங்கே இருக்குங்க?''

''போலீஸ்ல அநியாயமா அடிச்சுப் போட்டாங்களே, அந்த மீனவர்களைப் பார்க்க வந்தீங்களா? நான் அன்னிக்கு நேரடியா அந்தச் சம்பவத்தைப் பார்த்த சாட்சிங்க. என்னைக் கேளுங்க....''

''உங்க பேரு?''

''ஸ்டீபனுங்க....''

ஊருக்குள் செல்லும்போதே அந்த அசம்பாவிதத்தின் பின்னணி பற்றி விசாரித்துக் கொண்டே போனோம். அந்த முன் கதை வெகு சுவாரஸ்யம்! முடிவுதான் சோகம். இருபத்தி நான்கு வயதுப் பெண். இளமையின் ரகசியங்கள் பார்வைகளைப் புதுப்பித்த வயசு. பார்வையில் சிக்கிய பையனுக்குப் பதினேழு வயது. சங்க காலத்திலிருந்தே இருக்கும் வழக்கப்படி காதல் வயப்பட்டவுடன் ஜாதி, அந்தஸ்து, வயது வித்தியாசங்கள் காற்றோடு போய்விட்டன. பெண்ணைப் பெற்றவர்கள் அந்தஸ்தில் உயர்ந்தவர்கள். சம்பிரதாயப்படி காதலுக்குக் குறுக்கே முள் வேலி எழுப்பினார்கள். பெண் குட்டி புதினறுபடி பாய்ந்துவிட்டது. இருபத்து நான்கு வயதும், பதினேழு வயதும் சொல்லாமல் கொள்ளாமல் ஊரை விட்டு ஓடி விட, பெண்ணைச் சேர்ந்தவர்கள், அவர்களின் ஆதரவாளர்கள் ஒரு பக்கம். பையனுக்குப் பரிதாபம் தெரிவித்தவர்கள், அவர்களின் ஆதரவாளர்கள் மறு பக்கம். இரண்டு குரூப் பிரிந்தாயிற்று. இனி சோகமான க்ளைமாக்ஸ். ஓடிப் போன இளசுகளை இணையம் புத்தந்துறையில் கண்டு பிடித்து இழுத்து வந்தார்கள். பெண்ணை வேறு இடத்தில் கல்யாணம் செய்தார்கள்.

பையனுடைய அம்மாவைக் கயிற்றால் கட்டி வைத்தார்கள். அப்பாவை அடித்தார்கள். சாதாரண அடி இல்லை. வர்மக் கலை என்று சொல்லப்படும் ரகசிய அடி. பல நாள் சென்று மரணம் சம்பவிக்கும்படி

இன்று வர்மக் கலை அடி கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். இது எவ்வளவு தூரம் உண்மையோ தெரியாது. அது எப்படி யானாலும் அறுபத்தோராம் நாள் அப்பா ஆஸ்பத்திரியில் அமரரானார். அம்மா விதவை யானாள்.

இந்த வன்முறைகள் பூசலுக்கு நெருப்பு வைத்தன. பஞ்சாயத்துத் தேர்தல்கள் கனலில் பெட்ரோல் ஊற்றின. க்ரூப்கள் தி.மு.க. அ.தி.மு.க. என்று பிரிந்தன. அ.தி.மு.க.வின் யேசுராஜன் தேர்தலில் வெற்றி பெற்றதும் ஆரம்பமானது யுத்தம்.

கல்லெறிதல். அடிதடி. ஐந்தாறு பேர் ஆஸ்பத்திரியில். போலீஸிடம் பாதுகாப்புக் கோரியது அமைதிக் குழு. கிடைக்கவில்லை.

ஈஸ்டருக்கு முந்தின நாள். அ.தி.மு.க. க்ரூப்பின் முப்பத்தொரு பேர், தி.மு.க. க்ரூப்பின் முப்பத்து மூன்று பேர். மாறி மாறிக் கல்லெறிந்து கொண்டார்கள். விரட்டி விரட்டித் துரத்தினார்கள். கூச்சல்; பயம்; கூச்சல்.

ஈஸ்டர் விழாவிற்கு வந்திருந்த பாதிரியார், போலீஸுக்கு ஃபோன் செய்தார். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கந்தசாமி மற்றும் டி.எஸ்.பி. சுந்தரம் ஆஜரானார்கள்.

''ரெண்டு க்ரூப்பும் வேன்ல ஏறுங்க. ஸ்டேஷனுக்குப் போய் ஒரு காம்ப்ரமைஸ் பண்ணிக்குவோம்....''

நம்பினார்கள். வேனில் ஏறிக்கொண்டார்கள். அப்புறம்?

இதற்குள் எங்களைச் சுற்றி ஒரு பதினைந்து இருபது பேர் கூடிவிட்டார்கள். வேனில் ஏற்றிச் செல்லப்பட்ட க்ளாஷியஸ் என்பவர் கதையைத் தொடர்ந்தார்:

''ஸ்டேஷன்ல எங்களை ரெண்டு க்ரூப்பா நிக்க வச்சாங்க. உச்சி வெயில். ''யேசடிமை யாருடா?'' ன்னு கேட்டு உள்ளே இழுத்திட்டுப் போனாங்க. நீசத்தனமா அடிச்சாங்க. வெளில சத்தம் போட்டவங்களுக்கெல்லாம் அடி. டி.எஸ்.பி. கோஷ்டி இருபது பேர் லத்தி, கம்பு, சவுக்கு, பெல்ட்டுன்னு எல்லாத்தையும் வச்சு அடிச்சாங்க. அதுவும் எப்படி? டிரெஸ்ஸையெல்லாம் கழட்டச் சொல்லி அண்டர்வேரோட நிக்க வச்சு அடிச்சாங்க. அடிச்ச அடில போறக் கேடுக்கு (சாகும் நிலைமைக்கு) வந்த ஆளுங்களும் உண்டு. சார்லஸ்ங்கறவன் அப்புறம்கூட எத்தனை நாளைக்கு ரத்தமா வாந்தி எடுத்திட்டு இருந்தான் தெரியுமா?''

''போலீஸ்ல இவ்வளவு பயங்கரமா அடிப்பாங்களா என்ன?''

''அடிச்சது மட்டுமில்ல. ரெண்டு க்ரூப்பையும் வெயில்ல முட்டங்கால் போட்டு உக்காரச் சொன்னாங்க. அப்படியே முட்டங்கால் தேயத் தேய ரெண்டு க்ரூப்பையும் நடக்க வச்சாங்க. நீங்களே பாருங்க.''

கூடியிருந்தவர்களில் பெரும்பாலோர் கைலிகளைத் தூக்கிக் காட்ட இரண்டு முழங்கால்களும் தேய்ந்து தழும்பாய் மாறியிருந்த பரிதாபத்தைக் கண்கூடாய்ப் பார்த்தோம்.

''ஏரோனிமூஸ் வந்தாரு — வக்கீலோட வக்காலத்து வாங்கினாரு. ஆனா சர்க்கிள் வெளியே விட மாட்டேன்னிட்டாரு. சாயந்திரம் ஆறரை மணிக்கு இரணியல் கோர்ட்டுக்கு வேன்ல அழைச்சிட்டுப் போனாங்க. 'மாஜிஸ்ட்ரேட் கேக்கறப்ப, போலீஸ் அடிச்சதைப் பத்தி மூச்சு விடக் கூடாது'ன்னு மிரட்டி வச்சாங்க. போலீஸைக் கண்டிச்சு சர்வ கட்சிக் கண்டனக் கூட்டம் கூடப் போட்டாங்க...''

''போலீஸ்ல என்ன கேஸ் போட்டாங்க?'' என்றோம்.

''கேஸ் என்னன்னு தெரியலீங்க. ஆனா அப்புறம் எங்களுக்கு எதிர் க்ரூப்காரங்க திடீர்னு ஸைடு மாறிட்டாங்க. கோர்ட்ல ஆளுக்குப் பத்து ரூபா அபராதம் கட்டிட்டு வந்திட்டாங்க. நாங்க அபராதம் கட்டாததால இன்னும் கோர்ட்டுக்குப் போய் வந்திட்டிருக்கோம்....''

போலீஸைச் சேர்ந்தவர்களை விசாரித்த போது, ''எங்க பேரைப் போடாதீங்க'' என்று கேட்டுக் கொண்டு சம்பவத்தைப் பற்றிச் சொன்னார்கள்:

''போலீஸ்ல அடிச்சது நிஜந்தான். ஆனா டி.எஸ்.பி. காரணமில்லாம அடிக்கலை. கொட்டில்பாடுல தினம் சண்டை, தினம் அடிதடி. போலீஸால கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் போயிடிச்சு. ரெண்டு க்ரூப்புக்கும் ஒரு பாடம் கற்பிக்கணும்னுதான் அன்னிக்கு அடிச்சோம். இப்ப கொஞ்ச நாளா சண்டை சச்சரவு இல்லாம நிம்மதியா இருக்கோம்.''

போலீஸ் ஸ்டேஷனில் நுழைந்து அதிகார பூர்வமான தகவலை அறிந்து கொள்ள ஆசை.

''சப் இன்ஸ்பெக்டர் ராஜய்யனை வேணா பாருங்க. ஸ்டேஷன் பின்னாலதான் குவார்ட்டர்ஸ்.''

குவார்ட்டர்ஸ் வாசல் ரூமிலேயே படுத்து மதிய ஓய்வில் இருந்த எஸ்.ஐ., ''நான் இல்லன்னு சொல்லி திருப்பி அனுப்பிடுப்பா...'' என்று சொல்லிக் கொண்டிருக்கையிலேயே



ஸ்டீபன்: சட்டை போடாதவர் — ரத்த வாந்தி எடுத்த சார்லஸ்

நாங்கள் போய் எதிரே நின்றுவிட, தர்ம சங்கடமான முகத்துடன் எழுந்து கொண்டார். கொட்டில்பாடு பற்றி விசாரித்தோம்.

"கொட்டில்பாடுல ரெண்டு க்ரூப். எப்பவும் அடிதடி, தகராறு, கொலை, குத்துதான். படிப்பறிவில்லாத ஜனங்க. தொட்டதுக்கெல்லாம் ஒருத்தனை ஒருத்தன் அடிச்சப்பானுங்க. ஈஸ்டருக்கு முதல் நாள் ஃபோன் வந்து நாங்க போனபோது அங்க பாரத யுத்தமே நடந்திட்டிருந்தது. மீன் பிடிக்க உபயோகப்படுத்தற சாமானையெல்லாம் ஆயுதமா வச்சுக்கிட்டு ஒருத்தரை ஒருத்தர் அடிச்சிட்டிருந்தாங்க. போலீஸ் மட்டும் அங்கே தலையிடாம இருந்திருந்தா குறைஞ்சது பத்துக் கொலையாவது விழுந்திருக்கும்."

"இருந்தாலும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைச்சிட்டு வந்து ரெண்டு க்ரூப்களையும் முட்டி போட வச்சு நீங்க அடிச்சது முறையா?"

"நாங்க அடிச்சோமா?" முகத்தில் வருவித்துக் கொண்ட ஓர் ஆச்சரிய பாவம்.

"ஸ்டேஷனுக்கு அழைச்சிட்டு வந்து கேஸ் புக் பண்ணினோம். உடனே ஆஸ்பத்திரிக்கு அழைச்சிட்டுப் போனோம்."

"காயங்களை நாங்களே பார்த்தோமே?"

"அது அவங்களுக்குள்ளே அடிச்சுக்கிட்டதால வந்த காயம். கடல்ல கட்டுமரத்தைத் தள்ளிட்டுப் போய் ஏறப்ப மீனவர்களைப் பார்த்திருக்கீங்களா.... முட்டி போட்டுட்டுத்தான் போவாங்க. அந்த தழும்புதான் முழங்கால்ல நீங்க பார்த்த தழும்பு...."

"தி.மு.க. க்ரூப் உங்களுக்குச் சாதகமா கோர்ட்லே குற்றத்தை ஒப்புக்கிட்டாங்கன்னு சொல்றாங்களே.... அபராதத்தையும் போலீஸே கொடுத்துக் கட்டச் சொன்னதாகவும் பேசிக்கிறாங்க..."

"முப்பத்திரண்டு பேர் பத்துப் பத்து ரூவா அபராதம் கட்டிருங்க. அவங்க அத்தனை பேருக்கும் எங்களால பணம் தர முடியுமா? பொதுவா போலீஸுக்குப் பணம் கொடுத்துச் சமாளித்ததாகத்தான் குற்றம் சுமத்துவாங்க; நீங்க கதையையே மாத்தறீங்க! உண்மையைச் சொல்லப் போனா அந்த மீனவர்கள்கிட்டேருந்து போலீஸுக்குத்தான் பாதுகாப்புத் தேவை...."

ஃபோட்டோ எடுப்பதைத் தடுத்துவிட்ட சப் இன்ஸ்பெக்டர் ராஜய்யனுக்கு தன் டிபார்ட்மெண்ட்டின் மீதுதான் எத்தனை விசுவாசம்!

இந்தப் பிரச்னை தொடர்பாகச் சுற்றுப் பயண முடிவில் கல்கி, கலெக்டரைப் பேட்டி கண்டபோது:

கல்கி: கடந்த ஈஸ்டருக்கு முதல் நாளன்று கொட்டில்பாடு என்ற மீனவர் குடியிருப்பில் இரண்டு க்ரூப்களுக்கு ஏற்பட்ட சண்டை காரணமாக இரு தரப்பிலிருந்தும் அறுபத்து நான்கு பேரைக் குளச்சல் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூட்டிச் சென்று அனைவரையும் முட்டிக் கால் போட வைத்து போலீஸார் அடித்திருக்கிறார்கள். இப்படிப் போலீஸார் அடிக்கலாமா?

கலெக்டர்: போலீஸ் என்றால் லேசாக அடிக்கத்தான் செய்வார்கள்....

கல்கி: அது ஒன்றும் லேசான அடி அல்ல. சம்பந்தப்பட்டவர்களின் முட்டிக் கால்களில் இன்னமும் தழும்புகள் இருக்கின்றன. உடம்புகளிலுள்ள தழும்புகளையும் எங்களிடம் காட்டினார்கள். அப்படிப் பட்டதோர் கொடுமை. இதைக் குளச்சல் டி.எஸ்.பி. சுந்தரத்தின் கட்டளையின் பேரில் சர்க்கிள் கந்தசாமி தலைமை தாங்கி நடத்தியதாகச் சொன்னார்கள்.

கலெக்டர்: அது சம்பந்தமாக விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்த மாவட்டத்திலுமில்லாத விசேஷமான தண்ணீர்ப்பாலம் இருப்பதாக நிறைய கடிதங்கள் எங்களுக்குச் சொல்லின.

அதென்ன தண்ணீர்ப் பாலம்?

சிற்பாறை ரப்பர் எஸ்டேட்டிற்குப் போகும் வழியில் தாடிக்காரன் கோணம் (அதென்ன அப்படி ஒரு பெயர்?) என்னும் ஊரில் மேலே ஒரு சாலை போகிறது. சாலையை ஒட்டி சிறு கற்களில் மோதி மோதிச் சலசலத்துக் கொண்டே ஓர் ஆறும் போகிறது. இந்த இரண்டையும் ஒரு மேம்பாலம் வழியாக ஒரே தாவாகத் தாவி ஒரு வாய்க்கால் கடக்கிறது. வாய்க்கால் வழியோடு வரும் தண்ணீர் அந்தப் பாலத்தில் நுழைந்து சாலையையும் ஆற்றையும் கடந்து அடுத்த பக்கத்தில் இறங்கி ஜம்மென்று நடைபோடுமாம் தண்ணீர் உள்ள நாட்களில். மற்றபடி, நாங்கள் போன போது மேம்பாலத்தில் தண்ணீர் இல்லை. ஆட்டுப் புழுக்கைதான் இருந்தது. ஆனாலும் அந்த அமைப்பு விசித்திரமானதுதான்!





கொயந்தே! நாலுட்டம் நிக்காதே! எனக்கு எல்லாம் தெரியும். கேட்டுத் தெரிஞ்சுக்கோ! சொல்லித் தரேன்! உனக்கு ஒண்ணுமே தெரியலையே!
அருண் நேரு
அருண் சிங்
கமலாபதி திரிபாதி
வன்முறையாளர்கள்
வெங்கடராமையா கமிஷன்
பஞ்சாப்
மத்திய அரசு
ஹரியானா
வன்முறையாளர்கள்
நீ சொல்லு சார்!.. வேணும் நீ!.. காமன்வெல்த்துக்கு கூப்பிடுவேன்!.. சே! காமன்வெல்த் பேச்சே நான் பேசல்லியே!
அதுலத் முதலி
கொன்னுடுவேன் கொன்னு! வேணும் சமாதானம் பேசுவோம்! டாய்!.. கொன்னுடுவேன்!
ஜெயவர்த்தனா

கல்கி

1986 ஜூன் 8
மலர் 44 இதழ் 45
அக்ஷய வைகாசி 25



திரிக்கிறார் திரிபாதி!

அன்புள்ள ராஜீவ் கண்மணிக்குக் கமலபதி திரிபாதி தாத்தா கொஞ்சம் கோபத்தோடயும் ரொம்ப வருத்தத்தோடயும் எழுதியது.

என் செல்லமே! நீ எவ்வளவு சமத்து! ஆனா நீ கேட்பார் பேச்சைக் கேட்டுக் கெட்டுப் போறதைப் பார்த்தாத்தான் துக்கமாயிருக்கு! என் பேச்சை மட்டும் கேட்டு நீ கெட்டுப் போனா எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கும்! போனால் போறதுன்னு பிரணாப் முகர்ஜி பேச்சைக் கேட்டும் நீ கெட்டுப் போலாம். அதைப் பொறுத்துப்பேன். ஆனா உனக்கு ஜால்ரா தட்டறவா பேச்சையெல்லாம் கேட்டுக் கெட்டுப்போறியே, இது உனக்கே அழகா இருக்கா? ஏன், எனக்கு ஜால்ரா தட்டத் தெரியாதா? உன் அம்மாவுக்கு நான் எத்தனை கச்சிதமா தாளம் தப்பாம தட்டியிருக்கேன்னு உனக்கே நன்னாத் தெரியும். அப்படி இருக்கறச்சே ஜால்ரா தட்ட என்னைக் கூப்பிட்டுக்கக் கூடாதா? புதுசு புதுசா யார் யாரையோ கூப்பிட்டுக்கிறியே! எனக்குத் துக்கம் தொண்டையை அடைக்கிறது!

என் செல்லமே! ரொம்ப வருத்தத்தோட சில உண்மைகளை உனக்கு நான் உணர்த்தியாக வேண்டியிருக்கு! கட்சியிலும் சரி, ஆட்சியிலும் சரி, உன் போக்கு ஒண்ணும் எனக்குப் பிடிக்கலே. பஞ்சாப், அஸ்ஸாம் போன்ற கஷ்டமான பிரச்னைகளைத் தீர்த்து வைக்க நீ ரொம்ப அவசரப்பட்டே. கொஞ்சம் கூடப் பொறுமையே இல்லே, உனக்கு. உன் அம்மா எத்தனை நாள் பொறுமையா இதையெல்லாம் இழுக்கடிச்சுண்டு இருந்தா, யோசிச்சுப் பாரு! அவளுக்கு அந்த சாமர்த்தியம் எப்படி வந்தது? நாங்கள்ளாம் அவளுக்கு யோசனை சொல்லப் பக்கத்தில் இருந்ததுதான் காரணம். பிரச்னைகளை ரப்பரா இழுத்திண்டு இருக்காம, மள்மளன்னு தீர்வு கண்டுட்டா பிரதமருக்கு அப்புறம் என்ன வேலே? உனக்கு மதிப்பே இல்லாமப் போயிடும்.

என்னை யாருமே எதுவுமே கேட்கிறதில்லே. நான்தான் இ. காங்கிரஸின் வேலை செய்யற தலைவர்னு பேரு. ஆனா என்னைத் தவிர எல்லாரும் வேலை செய்யறா! அவாவா ஏதேதோ பண்ணிண்டு போறா. என்னைக் கலந்துக்கறதே இல்லே. இது ரொம்பத் தப்பு. நான் சொல்றதை மத்தவா செய்யணும். நான் ஒண்ணும் சொல்லலேன்னா இடிச்ச புளி மாதிரி எல்லாரும் 'கம்'முனு உட்கார்ந்திருக்கணும். அதை விட்டுவிட்டுக் கட்சியை வளர்க்கிறேன், அங்கத்தினர்களைச் சேர்க்கிறேன், உட்கட்சி ஜனநாயகத்துக்காகத் தேர்தல் நடத்தறேன்னு ஆரம்பிச்சா அது ஆபத்திலே போய் முடியும்! உன் அம்மா ஒரு தடவையாவது கட்சிக்குள் தேர்தல் நடத்தி நீ பார்த்திருக்கியா? அவ புத்திசாலி! என் பேச்சைக் கேட்டு நடந்துண்டா. நீ அவளுக்குப் பிறந்தும் அசடா இருக்கே. கட்சித் தேர்தல் நடத்தணும்னு ஆசைப்படறே. உன்னைத் தவிர கட்சிக்குள் வேறு தலைவர்களை வளர விடலாமா? பலம் பெற அனுமதிக்கலாமா? சே! ஜனநாயக சோஷலிஸம்கிறது சர்வாதிகாரத்துக்கு மறுபெயர் என்கிறதே உனக்குத் தெரியலே. உன் அம்மாதான் அதைச் சரியாப் புரிஞ்சுண்டு இருந்தா. அவளைப் பிடிக்காதவாளையெல்லாம் நீ சேர்த்துண்டு இருக்கே. நீ எப்படி உருப்படுவே? உன் கட்சியோ ஆட்சியோ எப்படி உருப்படும்?

21 ஆம் நூற்றாண்டுக்குத் தேசம் போகணும்கிற உன் எண்ணம் சரிதான். ஆனா எல்லாரையும் அழைச்சுண்டு போகணும். சில லட்சம் பேரையாவது 21 ஆம் நூற்றாண்டுக்குத் தயார்ப்படுத்துவோம்கிற உன் கருத்து சோஷலிஸம் இல்லே; படுமோசமான முதலாளித்துவம் அது. உன்னால முடியும்னா 70 கோடி பேரையும் 21 ஆம் நூற்றாண்டுக்கு அழைச்சுண்டு போ; இல்லேன்னா 70 கோடி பேரும் 18 ஆம் நூற்றாண்டிலேயே இருப்போம்.

உன் அம்மா காலத்தில் காங்கிரஸ் எப்பவும் ஜனங்களோட ஜனங்களா ஒன்றி இருந்தது. இப்ப ஜனங்க கிட்டேயிருந்து விலகிடுத்து. ஏன்? உன் அம்மா 'ஏழைமையை ஒழிப்பேன்'னு சொல்லிண்டே இருந்தாளேயொழிய செய்யலே. ஆனா நீ வி. பி. சிங்குங்கிற துர்மந்திரி பேச்சைக் கேட்டு நிஜமாவே ஏழைமையை ஒழிக்கப் பார்க்கறே. இது எப்பேர்ப்பட்ட தப்பு! நிஜமாவே ஏழைமை ஒழிஞ்சுட்டா அப்புறம் ஜனங்களோட ஜனங்களா இருந்து அவாகிட்ட போலி அனுதாபம் காட்டி கண்களைத் துடைச்சுக்க முடியுமா? பணம் கொடுத்தும், லோன் மேளா நடத்தியும் வோட்டுப் பெற முடியுமா? நீ தோத்துப் போயிடுவே. உபதேர்தல்கள் இதைத்தான் நிரூபிச்சிண்டிருக்கு!

இன்னும் எவ்வளவோ இருக்கு சொல்ல. இந்தக் கடிதாசு நான் எழுதியது யாருக்கும் தெரியப்படாது. ஆனா, எவனாவது 'ஜெராக்ஸ்' எடுத்துப் பத்திரிகைக்காராளுக்குத் தந்துட்டா நான் பொறுப்பில்லே. இன்னொண்ணும் சொல்லணும். நீ வந்து இதைப் படிச்சுட்டு 'இப்படியெல்லாம் ஒண்ணும் இல்லே தாத்தா; எல்லாம் சரியாத்தான் நடந்துண்டிருக்கு'ன்னு சொன்னியானா போறும். நானும் ஒப்புத்துக்கறேன். உன்னை மனசாரப் பாராட்டறேன். உன்னை மாதிரி ஈரேழு பதினாலு லோகத்திலேயும் யாரும் கிடையாதுன்னு சத்தியம் பண்ணத் தயாரா இருக்கேன். இப்படிக்கு, உனக்கு ஜால்ரா போட வாய்ப்பு மறுக்கப்படும் தாத்தா திரிபாதி.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.

கைவிடப்பட்ட கன்னியாகுமரி

— நிஸா' நிகள் தவிக்கிறார்கள

ஒரே இடத்தில் நின்று கொண்டு காலையில் கடலில் நிகழும் சூரிய உதயத்தையும், மாலையில் வர்ணக் கலவையாக நிகழும் சூரிய அஸ்தமனத்தையும், பௌர்ணமி நாட்களில் நிலாவின் உதயத்தையும் காண்பது வாழ்நாள் முழுமைக்கும் ஒரு மறக்க முடியாத அனுபவம். அந்த அனுபவம் இந்தியாவில் கிடைக்கும் ஒரே இடம் கன்னியாகுமரி. அரபிக் கடலும், வங்காள விரிகுடாவும், இந்தியப் பெருங்கடலும் சங்கமமாகும் புனித இடம் என்றெல்லாம் வர்ணிக்கப்படும் இந்தக் கன்னியாகுமரி, ஒரு காலத்தில் கேரள மாநிலத்துடன் இருந்தது. போராடி தமிழ் மாநிலத்துடன் சேர்க்கப்பட்டது என்ற பெருமை கொண்ட கன்னியாகுமரி.

கன்னியாகுமரி மாவட்ட மக்கள் இப்படியெல்லாம் மார் தட்டிக் கொள்ளும் கன்னியாகுமரிக்கு நாங்கள் போய்ச் சேர்ந்த நேரம் காலை ஏழு மணி. சுற்றிப் பார்த்தபின் எங்களுக்குத் தோன்றியது என்னவென்றால், இப்படிப்பட்ட பெருமைகள் கொண்ட கன்னியாகுமரியைச் சீரழிக்கவா அப்படிப் போராடினார்கள் என்பதுதான்!

கடற்கரையை ஒட்டி காந்திக்கு ஒரு நினைவாலயம் எழுப்பி இருக்கிறார்கள். வாசலிலேயே செருப்பைக் கழற்றி விடச் சொன்னார்கள். கழற்றினோம். 'அடடா, செருப்பைக் கழற்றாமலேயே இருந்திருக்கலாமே' என்று உடன் தோன்றியது. காரணம், மண்டபத்தில் எல்லா இடங்களிலும் உப்பு நீர் படிந்து பிச்சுக் பிச்சுக் என்று கால்களில் ஒட்டியது தான். கீழே இருக்கும் ஹால் அழகாக இருக்கிறது. காந்திஜியின் அஸ்தி வைக்கப் பெற்ற இடம் என்ற ஒரு குறிப்புடன் ஒரு துளசி மாட அமைப்பு. அமைதி இருந்தது. ஆனால் இரண்டு மாடிகள் கொண்ட அந்த மண்டபத்தில், முதல் மாடியில் சென்று பார்த்தால் சுவரா அது! சுவருக்கு யாரோ கறுப்புச் சுண்ணாம்பு பூசியிருந்தார்கள். வருகிறவர்கள், போகிறவர்கள் எல்லாம் அந்தச் சுவரை விசிட்டர் புத்தகமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். 'ராஜி, ஐ லவ் யூ' — முகுந்தன் — 17.1.84 என்று கல்வெட்டு வாசகங்கள்.



விவேகானந்தர் பாறைக்குச் செல்லும் ஸ்டீமர்

மண்டபத்தின் பால்கனியிலிருந்து கீழே ஒரு பறவைப் பார்வை பார்த்தோம். அவ்வளவு பெரிய கடற்கரை, கோயில் என்று இருந்தும் சாப்பிட ஒரு மண்டபம் என்று தனியாக இல்லாததாலோ என்னவோ, காந்தி மண்டபத்தின் வெளிப் பிராகாரத்தில் ஒரு குடும்பத்தின் சாப்பாட்டுக் கடை விரிக்கப்பட்டிருந்தது. பக்கத்தில் ஒரு நாயின் செல்லமான குசல விசாரிப்பு. கொஞ்சம் தள்ளி யாரோ ஓர் அரசியல்வாதி (?) நிறுவி விட்டுப் போன பாரதமாதா சிலை. நிறுவப் பட்ட நாளில் இருந்து தவம். 'என்னைக் கவனிப்பாரே இல்லையா? என்னைக் கவனிப் பாரே இல்லையா? என்னைக் கவனிப்பாரே இல்லையா?' காந்தி மண்டபத்தின் முகப்பில் சமாதானம், வாய்மை, அஹிம்சை என்று கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்த தால் அங்கே என்ன செய்தாலும் யாரும் ஒன்றும் சொல்லமாட்டார்கள் என்று எல் லோருக்கும் தைரியமோ என்னவோ!



* பாரமாதாவா? பரிதாப மாதாவா?



* நாயின் செல்லமான குசல விசாரிப்பு



* சுற்றுலா நாட்களில் விடுமுறை!

மண்டபத்தை விட்டு வெளியேறினோம். இடது பக்கம் கடற்கரைச் சாலை ஓடியது. ஏராள பஸ்கள் நின்றிருந்த கடற்கரைச் சாலை. சிறிது தூரம் நடந்ததும் 'பளிச்' என்று ஒரு கட்டிடம். வாசலில் கட்டணக் கழிப்பறைகள், குளிப்பறைகள் போர்டு. அந்தக் கட்டிடம் கன்னியாகுமரி நகரியத்தின் கீழ் இயங்கி வரும் ஒன்று. உள்ளே நுழைந்தோம். ஓர் அழகான வசனம் எங்களை வரவேற்றது:

'கொல்லைக்குப் போறதுக்கே தண்ணி யில்ல, குளிக்க வந்துட்டான் குளிக்க!'

கவுண்டரில் டிக்கெட் கிழித்துக் கொடுத்துக் கொண்டிருந்த ஆசாமியின் திருவாய் மொழி.

நாங்களும் இரண்டு டிக்கெட்டுகள் எடுத்தோம். குளிக்க முடியாது என்பதால் 'பாத் ரூம்' போக.

''சார்...லேடீஸ்னுபோர்டுபோட்டிருக்கிற பக்கம் போங்க'' என்று முதல் குண்டை வீசினார்.


''ஏங்க?''

''ஆண்கள் பகுதியில் தண்ணீர் வரதில லேங்க.... அதனால பெண்கள் பகுதியையே ரெண்டாப் பிரிச்சு விட்டோம். அங்கதான் லேட்டா தண்ணி வரும்.''

''அப்ப காசு கொடுத்தாக்கூட குளிக்க முடியாதா?''



• திறந்த வெளிக் குளியல்



• பார்வையிடுங்கள்: சிறுவர் பூங்காவாம்!

''இருக்கறது ஒரே ஒரு சின்ன மோட்டார் சார். அது ஆறு மணி நேரம் ஓடினாத்தான் டாங்க் ரொம்பும். குழாய்ங்களும் சின்னக் குழாய்ங்க. அதனால கக்கூஸ் போக மட்டுந் தான் விட முடியுது....''

''முக்கியமாக டூரிஸ்ட்டுகள் வருகிற ஏழு மணிக்கு மேல் மதியம் மூன்று மணி வரை கரெண்ட் கிடையாது'' என்றார் அவர்.

அதனால் பஸ் பஸ்ஸாக வருகிற டூரிஸ்ட்டுகள் எதிரில் சிறுவர் பூங்கா என்று போர்டு மாட்டியிருக்கும் வெறும் கட்டாந்தரை எல்லையில் (ஒரு புல் கூட இல்லை. அப்புறம்தானே சிறுவருக்கான மற்ற சறுக்கு மர, சீசாப் பலகை சமாசாரங்கள்) இருக்கும் ஒரு குழாயடியில் பெரியவர்கள் குளிக்கிறார்கள். ஜாக்கெட் இல்லாமல், இடை தழுவிய சேலையுடனும், முகம் தழுவிய வெட்கத்துடனும் குளிக்கும் பெண்மணிகளும் இதில் அடக்கம். காந்தி மண்டபத்திற்கு எதிரேயிருக்கும் முன்னாள் பூங்கா, இந்நாள் மண் மேட்டை கட்டணமற்ற கழிப்பிடங்களாகப் பயன்படுத்துகிறார்கள். நாற்றம் குடல் வரை ஊடுருவும் பிரதேசம் அது. பாவப்பட்ட ஜன்மங்கள் இந்தச் சுற்றுலாப் பயணிகள்.

மூக்கைப் பிடித்துக் கொண்டு சிறிது தூரம் நடந்தால் டூரிஸ்ட் இன்ஃபர்மேஷன் அலுவலகம் கண்களில் இடற நுழைந்தோம். நுழை வாசலில் போர்டு, டூரிஸ்ட்டுகள் முக்கியமாக வருகிற சனி, ஞாயிறுகள் அலுவலகத்திற்கு விடுமுறை என்றது. ஆனால் அங்கேயிருந்த ஓர் ஆசாமி ஏராள புத்தகங்களுக்குப் பின்னால் இருந்தார். 'போர்டில அப்படி எழுதியிருந்தாலும் நாங்க எல்லா நாட்களிலேயும் இங்கதான் இருக்கோம்' என்றார். அலுவலகத்திலேயே அவர்களுக்கு தண்ணீர், தங்குமிடம் ஆகியவை இருக்கின்றன என்பது அவர் பேச்சிலிருந்து வெளியான எக்ஸ்ட்ரா விஷயம். அதனால் அவர்களுக்கு அதுவே வாசஸ்தலமும்கூட என்று எங்களுக்குப் புரிந்தது.

''நாங்க வந்து கேட்கறவங்களுக்கு எல்லா இன்ஃபர்மேஷனும் கொடுப்போம் சார். ஆனா அச்சடிச்ச ஃபாம்ப்லெட்ஸ்தான் எல்லாருக்கும் கிடைக்காது. அது ஃபாரினர்ஸ் வந்தா அவங்களுக்குக் கொடுப்போம். எங்

களுக்கு ஃபாம்ப்லெட்ஸ் ஷார்ட்டேஜ்... என்று ஒரு கொத்து தகவல் விவரங்கள் அடங்கிய அழகான விதவித வண்ணங்களில் அச்சடிக்கப்பட்ட ஃபாம்ப்லெட்ஸ்களை எங்களுக்குக் கொடுத்தார். (பத்திரிகைக்காரர்கள் பாருங்கள்!)

இந்த ஃபாம்ப்லெட்ஸ்களுக்கு ஒரு விலை வைத்தால் அவசியமானவர்கள் மட்டும் விலை கொடுத்து வாங்கிப் போவார்கள். தமிழ்நாடு போக்குவரத்து ரிசர்வேஷன் கூப்பனுக்குப் பத்து பைசா விலை வைக்கும்போது இதற்கு வைக்கக் கூடாதா என்ன?

அடுத்தது கோயில். அந்தக் கடை வீதி. 1500 க்கு யாஷிகா காமிரா, ஜப்பான் முத்திரை போட்ட டூ இன் ஒன் செட்டுக்கள், செண்ட் பாட்டில்கள் எல்லாம் பிளாட்பார டேபிள்களில் இறைந்திருக்க, 'எல்லாம் டூப்ளி கேட்டுங்க...' என்று போகிற போக்கில் ஒரு குரல். சன்னிதானத்து வாசலில் சட்டையைக் கழற்றிவிட்டு உள்ளே நுழைந்தால், சன்னிதானத்தில் ஏகக் கும்பல். அத்தனைக்கும் நடுவில் குமரி அம்மனின் புன்னகை. டாலடித்த வைர மூக்குத்தி, லோலக். அந்த அம்மனையும் அரசியல் விட்டு வைக்கவில்லை! எப்படி?

கர்ப்பக்கிருகத்திற்கு அருகில் நின்றிருந்த அர்ச்சகரின் அஷ்டோத்திர அர்ச்சனை மொழியினைக் கேட்டால் தெரியும். அவர் அர்ச்சனை செய்தது அவருக்கு பதினைந்தடி தள்ளி நின்று தேங்காய்த் தட்டுகளை வாங்கிக் கொண்டிருந்த ஜூனியர் அர்ச்சகரைப் பார்த்து:


"வாசலோட தேங்காய்த் தட்டெல்லாம் வாங்கிண்டு என்னை மொட்டையடிக்கறியே. நான் ஒண்ணும் இங்க சும்மா வந்துடலை. பத்தாயிரம், பதினஞ்சாயிரம் குடுத்துட்டு வந்திருக்கேனே, நான் என்ன சரைக்கவா வந்திருக்கேன்!"

இந்த வார்த்தைகள் அவர் சொன்னது என்பது அந்த கன்னியாகுமரி அம்மன் சாட்சியாகச் சத்தியம். அவரை அணுகி, 'அது என்ன பத்தாயிரம், பதினைந்தாயிரம்?' என்று கேட்டபோது, சரியான பதில் சொல்லாமல் மழுப்பிவிட்டார்.

அங்கிருந்து நேரே விவேகானந்தர் பாறைக்குப் பயணிகளை அழைத்துச் செல்லும் படகுத் துறை. பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஏற்று நடத்தும் படகுத் துறையான இதில் பயணிகளை ஏற்றிச் செல்ல இரண்டு படகுகள். அதில் ஒன்று ரிப்பேர். எலும்பும் தோலுமாக அது காட்சியளித்தது. இப்போது உபயோகத்தில் இருப்பது ஒரே ஒரு ஸ்டீமர். அந்த ஸ்டீமரில் பணிபுரிபவர்களும் ஒருமுறை ஓவர் டைம் தகராறு காரணமாக ஸ்டிரைக் செய்தார்கள். எப்போது? படகு நிறைய மக்களை ஏற்றிக் கொண்டு, அவர்களை எல்லாம் விவேகானந்தர் மண்டபத்தில் விட்டு விட்டு ஸ்டிரைக். ரயிலுக்குப் போகிறவர்கள் தவிக்க, சின்னக் குழந்தைகள் பசியால் அழ, பெண்கள் ஒரு பாதுகாப்பற்ற பிரமையில் பீதியடைய, யாருக்கு என்ன போயிற்று. எங்களுக்கு வேண்டியது ஓவர் டைம்!

இந்த நிகழ்ச்சி நிகழ்ந்தது உண்மைதானும். அந்தத் தவித்த மக்களை அப்புறம் சிறு சிறு படகுகளில் விவேகானந்த மண்டப ஊழியர்கள் கொண்டு வந்து கரை சேர்த்தார்களாம். அதற்குப் பின்பு இன்று வரை எந்தவிதத் தகராறும் இல்லை என்றார்கள்.

ஒட்டு மொத்தமாகச் சொல்லப் போனால் கன்னியாகுமரியை ஆர்வத்துடன் காண வரும் டூரிஸ்ட்டுகள் கைவிடப்பட்டது போல் உணர்கிறார்கள். ஏன், கன்னியாகுமரியே கைவிடப்பட்டது போல்தான் காட்சி தருகிறது.





• ஊரும்.... எப்ப விடியுங்க.... எப்பத் தண்ணீர் வந்து—

கேரளத்தோடு உரசிக் கொண்டு நிற்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு பொதுவான பிரச்னை, தண்ணீர்ப் பற்றாக் குறை. போகின்ற ஊரிலெல்லாம் க்யூ நின்ற காலிக் குடங்கள். காத்திருந்த தாய்மார்கள். நீலத் திரை கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம் செய்யும் குமரிக்குக் கூட ஏன் இந்த நிலை? பார்த்த, சேகரித்த சில விவரங்களின் படி.....

மூன்று புறம் கடல் சூழ்ந்த இந்த மாவட்டத்திற்குத் தவறாமல் விஜயம் செய்த தென் மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவ மழையும் இப்போது போர்க் கொடி தூக்கி விட்டன. வருஷத்திற்கு எழுபது அங்குலம் மழை பெய்ததாய்ச் சொல்லப்படும் இந்தப் பிரதேசம் இப்போது காய்ந்து போய்விட்டது. ஏனாம்? ரப்பர் பயிரிடுவதற்காக இயற்கைக் காடுகளை வெகு வேகமாய் அழித்துவிட்டார்கள். வனப் பகுதியில் ஏற்பட்ட மண் அரிப்பினால் பேச்சிப் பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகளில் மெதுவாக மண் நிரம்பி வருகிறது. நீர் மட்டம் குறைந்துவிட்டது.

கோதையாறு நீர் மின் சக்தி நிலையம் அமைப்பதற்காக ஆயிரக்கணக்கான ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டதாம். மலையுச்சியின் மரங்கள் மொட்டையடிக்கப்பட்டதால் அரபிக் கடலிலிருந்து புறப்பட்ட காற்றைத் தடுத்து மழைக்கு வழி செய்ய இயற்கையால் முடியாமல் போய்விட்டது என்கிறார்கள். நீர்ப் பாசனமும், அதை நம்பிய விவசாயமும் இதனால் பெரும் பாதிப்புக்குள்ளாகிவிட்டன.

சொல்லுவதென்றால் ஒவ்வொரு ஊரின் அவல நிலை பற்றியும் சொல்லலாம். உதாரணத்திற்கு ஒன்றிரண்டு எடுத்துக் கொள்வோம்.

நாகர்கோவிலிலிருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் அம்மாண்டிவிளை. இந்த ஊரைச் சேர்ந்த பாலகிருஷ்ணனின் வார்த்தைகளில்:

"தண்ணிறைவுத்திட்டம்னு சொல்லி கோடி கோடியாப் பணத்தை விரயம் செய்யறாங்க. அதிகாரிங்க, ஒப்பந்தக்காரங்க, மடி எல்லாம் நிறைஞ்சு போச்சே தவிர, மக்களுக்கு எந்தப் புண்ணியமுமில்லை. வெட்டின கிணறுங்கள்லாம் 150 அடி ஆழத்துக்கு மேலே இருக்கு. அதில நிறைய வத்தியும் போச்சு. கிணறுங்களும் சரி, உயரத்தில கட்டப்படற நீர்த் தொட்டிங்களும் சரி, உருவாக்கப்பட்ட சில மாசங்களிலேயே படுத்துப் போயிடும். அம்மாண்டிவிளை தெக்கூர்ல, கிணற்றுல தண்ணியில்லாம போய் ரெண்டு வருஷமாகுது. திவண்டா கோட்டைல இருக்கிற கிணறுல தண்ணி ஊற்று ரொம்பக் குறைஞ்சு போச்சு. இராப்பகலா தண்ணி ஊற ஊறக் காத்திருந்து ஒண்ணு ரெண்டு குடம் எடுத்திட்டுப் போற மத்த ஊர் மக்களைப் பார்த்தாப் பரிதாபமா இருக்கும். இதே போல முகுந்தன் குளத்தில ஒரு கிணறு அமைச்சுக் குழாய் நீர் வழங்கற திட்டம் போட்டாங்க. ஆனா பக்கத்தில பம்பு செட் வச்சிருக்கிறவங்க முயற்சியாலயும், காண்ட்ராக்டரோட இயலாமையாலும் இந்தத் திட்டமே பாதியிலே நின்னு போச்சு. பேரூராட்சிகளைக் கேட்டா பணமில்லைன்னு சொல்லி தட்டிக் கழிக்கறாங்க. திட்டங்கள் போட்டா மட்டும் போறாது. செயல்படுத்தவும் வேணும்னு யார் எடுத்துச் சொல்லப் போறாங்க?"

மணவாளக் குறிச்சி முருகேசன்:

"பேச்சிப்பாறை அணை நீரை நம்பியிருக்கும் நிலங்கள் வறட்சிக் காலத்தில் வாடிப் போவதைத் தடுக்க முடியாமப் போகலாம். ஆனா மழை பெய்யற காலத்திலயும் தண்ணி வீணா கடல்ல கலந்து போகுது. வள்ளியாற்றில் தண்ணீரை மேலெழுப்பி (lift செய்து) இந்தப் பிரதேசங்களுக்கு விட்டா ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில பயிர் வாடாம இருக்கும்."

முட்டத்தைச் சேர்ந்த காலிஸ்ட்:

"அதோ பாருங்க. அங்கங்கே பூமில பொத்துக்கிட்டு உடைஞ்சு கெடக்குதே. இந்த பைப் லைன் நாப்பது வருஷத்துக்கு முன்னால போட்டது. துருப் பிடிச்சு இத்துப் போயிடிச்சு. புது லைன் போடவே இல்லை. எங்க ஊர் ஜனங்க பஸ் பிடிச்சுப் போய் ஏழு கிலோ மீட்டர் தள்ளியுள்ள எடத்திலேர்ந்து தினமும் தண்ணி எடுத்திட்டு வர வேண்டிய நிலைமை. இந்தமாதிரி தினத்துக்கும் இருநூறு பெண்கள் பஸ் பிடிச்சுப் போறாங்க. இதனால பின்னால ஒரு பிரச்னை உண்டாகிக் கலவரம் கூட வரலாம்கிறதை யாரும் புரிஞ்சுக்க மாட்டேங்கறாங்க...."

வாசகர் பங்கு

காதலி: நம் ஆபீஸில் அவ்வளவு பெண்கள் இருந்தும் நீங்கள் என்னை விரும்புவதற்கு அடிப்படைக் காரணம் என்ன?

காதலன்: எல்லாம் உன் அடிப்படைச் சம்பளம்தான் காரணம்.

— சீதா சம்பத், திருச்சி—14.

காதலி: அத்தான் உங்களைத் தொட்டதும் உடம்பில் மின்சாரம் பாய்வது போல் இருக்கிறது!

காதலன்: இருக்கும்! பேண்ட் பாக்கெட்டில் பாட்டரி செல் வாங்கிப் போட்டு வைத்திருக்கிறேன்.

— சாந்தா கருணாகரன், மதுரை—1.

காதலி: எங்க அப்பாவுக்கு நம் காதல் விஷயம் தெரிஞ்சு போச்சு!

காதலன்: ஐயோ! அப்படியா? என்ன சொன்னார்?

காதலி: பிடித்ததுதான் பிடித்தாய். நல்ல கெட்டிக்காரப் பையனாகப் பிடித்திருக்கக் கூடாதா என்று கோபிக்கிறார்.

— விமலா, தூத்துக்குடி—8.

காதலன்: கண்ணே, டார்லிங், உனக்காக நான் என் உயிரையே கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

காதலி: இப்போது வேண்டாம் சேகர். நம் கல்யாணம் நடக்கட்டும். அப்புறம் நானே அதை உங்களிடமிருந்து அவ்வப்போது வாங்கிக் கொள்கிறேன்.

— திருமதி கமலா சிவராமன்,
பம்பாய்—19.

காதலன்: முன்பு உன் பேச்சுத் திறமையைக் கேட்டு உனக்குக் காதலன் ஆனேன். ஆனா இப்போ.......

காதல் ஜோக்ஸ்





ஆசியாவிலேயே நீளமும் உயரமும் அதிகமான தொட்டிப் பாலம் பார்த்து விட்டீர்களா என்று கேட்டார்கள். ஆசை விட்டதா? வாடகைக் காரில் ஏறி வழியை விசாரித்துக் கொண்டு குலசேகரத்திலிருந்து புறப்பட்டோம். அங்கே ரைட், இங்கே லெஃப்ட் என்று ஆளுக்கு ஆள் கைநீட்டிக் கொண்டே போக கிட்டத்தட்ட ஆசியாவையே சுற்றிக் கொண்டு கடைசி ஓர் இரட்டையடிப் பாதையில் போய்க் கொண்டேஏஏஏ இருந்தோம். நல்லவேளை பெட்ரோல் தீருமுன் மாத்தூரின் தொட்டிப்பாலம் வந்து விட்டது: இறங்கி, பாலத்தில் நடந்து பார்த்தோம். குனிந்து பூமியைப் பார்த்தால் மேகத்திலிருந்து பார்க்கிறதுபோல் ஒரு உணர்வு. அவ்வளவு உயரம்! உயரத்தைப் பற்றி மூச்சுவிடாமல் நீளம் 1740 அடி என்று தகவல் கொடுத்தது அறிவிப்புப் பலகை. ஆமாம், உயரம் எத்தனை அடி?

காதலி: என்ன ஆகிவிட்டது?

காதலன்: உன்னுடைய ஓயாத பேச்சைக் கேட்டுக்கேட்டு 'காது இலன்' ஆகிவிட்டேன்.

— என். சித்தாலட்சுமி, விழுப்புரம்—2.

காதலி: அழகாக, அன்பாக, ஆசையாகப் பேசுகிறீர்களே, முன் காலத்தில் கவிஞராகப் பிறந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

காதலன்: அதெல்லாம் ஒன்றும் இல்லை. முன்பு பீச்சில் சுண்டல், முறுக்கு விற்றேன்.

— எஸ். சோமசுந்தரம், திருவள்ளூர்.

கல்லூரியிலிருந்து திரும்பிய கமலா தன் தந்தையிடம் சொன்னாள்: அப்பா இன்று மாலை என் நண்பன் ரமேஷ் நம் வீட்டுக்கு வரப் போகிறான்.

தந்தை: அப்படியா? அந்த ரமேஷுக்கு எவ்வளவு ஆஸ்தி இருக்கிறது கமலா?

கமலா: போங்கப்பா, இந்த ஆண் பிள்ளைகளே இப்படித்தான். ரமேஷும் இதே கேள்வியைத்தான் என்னிடம் கேட்டான்!

— வி. கோபால் ரத்னம், சென்னை—102.

காதலி: அன்பே நம் காதல் சமாச்சாரம் என் அப்பாவிடம் போய்விட்டது!

காதலன்: எப்படி டார்லிங்?

காதலி: நான் ஞாபகார்த்தமாக உங்கள் விரலில் போட்ட என்னுடைய மோதிரத்தை வட்டிக் கடை வைத்திருக்கும் எங்க அப்பா கிட்டேயே அடகு வச்சிட்டீங்களே!

— இரா. சுவாமிநாதன், சீர்காழி.

காதலன்: டார்லிங்! நீ என் வீட்டுக்கு வந்தால் கண்கலங்க வேண்டி வருமே!

காதலி: ஏன் டார்லிங்? எதுக்காக?

காதலன்: என் அப்பா என்ன சொல்லியும் வெங்காய வியாபாரத்தை விடமாட்டேன்னுட்டாரே!

— ம. திருமாறன், திருவில்லிபுத்தூர்.

"நம்ப செக்ஷன் ராஜாவுக்கும் ரேகாவுக்கும் திடீர்னு எப்படிக் காதல் ஏற்பட்டதாம்?

"ஆபீஸ் கான்டீனில் 'இன்ஸ்டன்ட்' காப்பி குடிக்கும்போது!"

— என். பட்டாபிராமன், சென்னை—17.

"காதலனைச் சந்திக்கப் போறேன்னு சொல்றே.... கூடவே இந்த ஏழெட்டுப் பெண்களையும் கூட்டிட்டுப் போறியே.... ஏண்டி?"


"நான் காதலிக்கிறது சினிமா ஹீரோவாச்சே! இந்தப் பொண்ணுகளெல்லாம் எங்களைச் சுத்தி டான்ஸ் ஆடிக்கிட்டு ஹம்மிங் பண்ணினாத்தான் அவருக்குக் 'காதல் மூடே' வருது.....!"

— பொ. மாரிமுத்துக்குமார், திருச்சி—20.

ப்ளோபிளாஸ்ட் வழங்கும் வி.ஐ.பி. ஸூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

என். சித்தாலட்சுமி,
க/பெ, C.R.N. ராஜன்,
தமிழக மின்வாரியம்,
(வருவாய்ப் பிரிவு),
திரு.வி.க. வீதி,
விழுப்புரம்—605 602.





Yes. We are money minded. For your sake entirely!

KCUB—where the finest traditions in banking are maintained with pride and care. Where every savings account and deposit is carefully nurtured, re-invested and developed to yield rich dividends.

Drop in at any one of our branches today.
Our services include:

- MONTHLY SAVINGS • CASH CERTIFICATES
- VAMANA VISWARUPA DEPOSIT • FIXED DEPOSIT.


KCUB

THE KUMBAKONAM CITY UNION BANK LTD.,

Registered Office: Kumbakonam 612 001

KCUB—The Bank that's committed to growth—your growth.

MCS/KCUB/194


அதை,
ஏன் செய்தாள்
சங்கீதா?
இராஜா பாலசந்தர்

திட்டுத் திட்டாக நின்று கிசுகிசுத்தனர் மாணவ, மாணவிகள்.

கல்லூரியின் பெரும்பான்மையான வகுப்புகள் கலைந்துவிட்டன. அனைவரும் பிரின்ஸிபாலின் அறையை நோக்கித் திரண்டனர்.

கல்லூரி முதல்வரின் மூடிய அறைக் கதவு திறக்கப்படும் விநாடி ஆவலோடு எதிர்பார்க்கப்பட்டது.

கதவுக்கு எதிரே படர்ந்திருந்த காரிடார் முழுவதும் கேள்விக்குறிகளுடன் மாணவர்கள்.

உள்ளே அழைத்துச் செல்லப்பட்ட சங்கீதா...?

"உட்காரும்மா அந்தச் சேர்ல..."

"பரவாயில்லே சார்," கண்களைக் கசக்கியபடி தேம்பினாள் சங்கீதா.

"ம்... சொல்லு எதையும் மறைக்காம," பிரின்ஸிபால் கனிவுடன் கேட்டார்.

உளவியலில் அறிவர் பட்டம் பெற்றவர் அவர். கல்லூரியில் பயிலும் அத்தனை மாணவ, மாணவிகளையும் தனித்தனியாகப் படித்து மனப்பாடம் செய்து வைத்திருந்தார்.

சங்கீதாவைப் பற்றி அவருக்கு மிக நல்ல அபிப்பிராயம் உண்டு.

அறைக்கு வெளியே —

"பார்க்கிறதுக்கு எப்படிச் சாதுவாட்டம் இருக்கா? அவ செய்திருக்கிற வேலையைப் பார்டா மச்சி!" அனைவரிடமும் கூறி மலைத்துப் போனான் சுரேஷ்.

"அப்படியேதான் இருக்கட்டுமேடா. இதப் போய் எல்லார்கிட்டயும் சொல்லணுமா? பாவம் அவ."

"என்னடா மச்சி, அவளுக்கு நீ சப்போர்ட்டா? ஆஹா... புரிஞ்சிடுச்சிடா கண்ணு," என்றபடி அடுத்தவனிடம் ஓடினான் சுரேஷ். "டேய் ரவி மச்சி, சேதி தெரியுமோ உனக்கு?"

பெண்கள் அறையில் —

"ஆமாண்டி, காலேலே கூட எங்கிட்டச் சொன்னாளே," என்று கும்பலைத் தன்னிடம் சேர்த்தாள் சுந்தரி.

"என்னடி சொன்னா?" அனைத்து மாணவிகளும் சுந்தரியை மையமாக்கி நின்றனர்.

"இன்னைக்குத்தான் எக்ஸாம் ஃபீஸ் கட்ட லாஸ்ட் டேட். பட், அவகிட்ட நாற்றைம்பது ரூபாய் குறையுதுன்னு சொன்னா. அதுக்குன்னு இப்படிச் செய்யலாமா? சீ... அவமானம்டி.

வேகமாக ஓடி வந்தாள் ராணி. "ஆமாண்டி, எங்கிட்ட கூட ஐம்பது ரூபாய் கேட்டாளே."

"எப்போடி?"

"ஜஸ்ட் நவ்டி."

"தந்தியா?"

"அதான் இல்லேயே," என்று நாக்கு சிக்கக் கூறினாள் ராணி.

மாணவர்களால் பாட்டியம்மா எனப் பட்டப் பெயர் சூட்டப்பட்ட பங்கஜம்: "அதுக்குத்தான் இந்த லோகத்துல எவளையுமே நம்பக்கூடாதுங்கறது."

அதே நேரம் முதல்வர் அறையில் —

தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள முயன்று தோல்வி கண்டாள் சங்கீதா. அவள் மேனி லேசாக நடுங்கியபடி இருந்தது.

நீண்ட நேரமாகப் பொறுமையைக் கடைப்பிடித்தார் முதல்வர். "ம்... என்ன சங்கீதா? இப்படிப் பேசாம இருந்தா எப்படி? என்னை உன் ஃபாதர் மாதிரி நெனச்சிச் சொல்லும்மா."

அவளை ஆழமாக ஊடுருவினார்.

"ம்... சொல்லும்மா."

"ம்..."

"......"

"ஸோ, நீ செய்திருக்கே. அப்படித்தானே?"

"......"

"ரீஸன்?"

கஷ்டப்பட்டுப் பேசினாள் சங்கீதா. "இன்னைக்கு எக்ஸாம் ஃபீஸ் கட்டக் கடைசி நாள் சார்."

அவள் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பது அவருக்குத் தெரியும். "ஏன், வீட்ல தரலையா?"

"......"

"ம்... க்விக்..."

"எப்பவோ தந்துட்டாங்க சார்."

"பின்ன, அத என்ன செய்தே? இத்தனை நாளா என்ன செய்தே?" புருவத்தைச் சுருக்கினார் முதல்வர்.

அன்று —

இடைவேளை நேரம். புத்தகத்தைத் திறந்தாள் சங்கீதா. உள்ளே சில பத்து ரூபாய் நோட்டுக்கள். தந்தை கடன் வாங்கித் தந்த பணம்.

தூரத்தில் இருந்தே இதைப் பார்த்துவிட்ட சுரேஷ் அருகே வந்தான். "என்ன சங்கீதா? நெறையப் பணம் வச்சிருக்கயே?"

புன்னகை செய்தாள். "எக்ஸாம் ஃபீஸ்."

"அதுக்கு இன்னும் ஒரு வாரம் டைம் இருக்கு இல்லையா?"

"ம்."

"ப்ளீஸ், எனக்கு ஒரு உதவி செய்யேன் சங்கீதா."

"என்ன?"

"அர்ஜண்ட்டா நூறு ரூபாய் தேவை. இன்னைக்கு லாபரட்டரியில ஃபைன் கட்டணும். லேட் பண்ணா அந்தாளு மொறைச்சுக்குவாரு. பின்னால, அசைன்மெண்ட்ல தகராறு பண்ணுவாரு. ப்ளீஸ்." கெஞ்சினான் சுரேஷ்.

அவன் நிலைமையும், அதில் இருந்த உண்மையும் அவளுக்குப் புரிந்தன.

"ஏன், வீட்ல கேக்கலையா சுரேஷ்?"

"ரெண்டு நாளாகும்னு சொல்லிட்டாங்க."

யோசித்தாள் சங்கீதா. "சரி, பணம் தரேன். பட், தவறாம ஒன் வீக்ல திருப்பிக் குடுத்துடணும், என்ன?"

"ஷ்யூர்," என வாங்கிக் கொண்டான் சுரேஷ்.

ஆக, இன்று பணம் கட்ட முடியாது. எனவே, மீதிப் பணத்தைப் புத்தகத்தினுள் வைத்தபோது.

''என்னடி, பணம் கட்டணும்னு சொன்னியே..'' என்றபடி வந்தாள் சுந்தரி.

''இல்லடி.''

''ஏன்?''

சொன்னாள்.

''அப்படின்னா, எனக்கு ஒரு இருபத்தஞ்சு குடுடி. நான் கட்டிடறேன். நாளைக்குத் தந்துடறேன்.''

''அப்படியே எனக்கும் இருபத்தஞ்சுடி. ''நாளைக்கே நானும் திருப்பிக் கொடுத்துடறேன்,'' என உரிமையுடன் கேட்டாள் ராணி.

இருவருமே இரண்டரை ஆண்டுகளாகத் தோழிகள். எனவே, அவர்கள் கேட்டதும் மறுப்பின்றித் தந்தாள் சங்கீதா. ''நாளைக்கே கூட வேண்டாம்டி. ஒரு வாரத்துக்குள்ள கொடுத்தாப் போதும், என்ன?''

வெகுளியாகப் பேசினாள் சங்கீதா.

''சுரேஷ்...இன்னைக்கு ஃபீஸ் கட்டலாமப் பேட்.''

''அச்சச்சோ, மறந்தே போச்சே. நேற்றே நீ ஞாபகப்படுத்தி இருக்கக் கூடாது சங்கீதா?''

''ஏன்?''

''இப்ப கையில பணம் இல்லையே ம்..'' —யோசித்தாள், யோசித்தாள், யோசித்தாள்.

''யேய் சுந்தரி, ராணி...''

''என்னடி?''

''பணம் கொடுத்தேனே.''

''நாளைக்குத்தான்டி தர முடியும், ஸாரிடி.'' என்றனர் இருவரும். கடந்த இரண்டு நாட்களாக இவர்களின் பதில் இதுதான்.

சங்கீதாவின் இதயம் அச்சத்தால் உறைந்து போனது.

''சங்கீதா, இந்தப் பணத்தைத் தெரட்ட நான் எவ்வளவு பாடுபட்டேன் தெரியுமா? மகளே! எப்படியோ, நீ நல்லாப் படிச்சி, பாஸ் செய். நீ சம்பாதிச்சுத்தான் நம்ம குடும்பம் தலையெடுக்கணும்மா. பணத்தப் பத்திரமாப் போய்க் கட்டிடு.''

அப்பா சொன்ன வார்த்தைகள் ஒலி பெருக்கி அறிவிப்பு போல் அச்சுறுத்தின. வேறு வழியே இல்லை...! பிரின்ஸிபாலிடம் போய் அவர் காலில் விழுந்துதான் கெஞ்ச வேண்டும். நண்பர்களையும் காட்டிக் கொடுக்காமல் இதை எப்படிச் செய்வது? அவர் புரிந்து கொள்ளக் கூடியவர்தான். இருந்தாலும் தன் ஒருத்திக்கு விதிவிலக்கு அளித்தால் பல பேர் கேட்பார்கள். மேலும், ஒருநாள் அவகாசம் கேட்டுப் பெற்றாலும் இந்த ராணியும் சுந்தரியும் சுரேஷும் நாளைக்கே பணத்தைத் திருப்பித் தந்துவிடுவார்கள் என்பது என்ன நிச்சயம்...?

யோசித்தபடி கெமிஸ்ட்ரிலாபைத்தாண்டியவள், ஜன்னலருகே நிதானித்தாள். அடுத்த கட்டிடத்தில் உள்ள பிரின்ஸிபாலின் அறையை எட்டுவதற்குள் மனத்துக்குள் ஓர் ஒத்திகை செய்து கொள்ள வேண்டும். தமிழில் பேசுவதா? இங்கிலீஷில் பேசுவதா? ஆங்கிலத்தில் வார்த்தைகளைத் துழாவித் தேட வேண்டும். பேசாமல் தமிழிலே... அட, இது என்ன?

கெமிஸ்ட்ரி லாபின் ஜன்னலை ஒட்டிய மேஜையில் கிடந்த சிவப்பு பர்ஸ் பளிச் சென்று கண்ணில் பட்டது. திறந்து கிடந்த அதன் வாயின் வழியே பத்தும், நூறுமாகப்



வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

நாகராக்ஷரம் — (Devanagari Script)

1. ரிக்வேத ஸம்ஹிதா — 10 மண்டலங்கள் — விலை ரூ. 160/—

2. ஸாமவேத அஷ்டப்ராம்மணம் — 3 பாகங்கள் — விலை ரூ. 210/—

முதல் பாகம் — தாண்டியம், ஷட்விம்சம், திருவிசநல்லூர் மஹா மஹோபாத்யாய ஸ்ரீ ராமஸுப்பா சாஸ்திரிகளால் இயற்றப்பட்ட ஸாமவேத உத்கர்ஷம், ஸாமவேத ஸ்வரமாத்ராதி தத்வவிலாஸம், மன்னார்குடி மஹா மஹோபாத்யாய ராஜூ சாஸ்திரிகளால் இயற்றப்பட்ட ஸாமவேத ஸ்வர விமர்சம்.

இரண்டாம் பாகம் — ஸாமவிதான ப்ராம்மணம், ஆர்ஷேய ப்ராம்மணம், ஸாமஸ்வரவிமர்சம், பாணிணீய சிக்ஷா, நாரதசிக்ஷா, லோமச சிக்ஷா, கௌதம சிக்ஷா, ஸாமகான சாஸ்த்ரீய ஸம்ப்ரதாயக்ரமம்.

மூன்றும் பாகம் — தேவதாத்யாயம், ஸம்ஹிதோபநிஷத், சாந்தோக்ய மந்த்ரோபநிஷத், வம்சப்ராம்மணம், உத்ஸர்ஜன கர்மதேவ தர்ப்பணம், காம்யப்ரயோகங்கள்.

3. ஸாமவேத ஸம்ஹிதா (ஸ்வரத்துடன்) 2 பாகங்கள் — விலை ரூ. 110/—

பூர்வபாகம் — ரிக் இல்லாமல் ஆக்னேய ஐந்த்ர கானங்கள் மட்டும்.

இரண்டாம் பாகம் — பாவமான ஆரண்ய சுக்ரீய கானங்கள் மட்டும்.

4. மனுசேச்லோக & ராமமந்த்ராசே ச்லோக — விலை ரூ 9/—

(மஹாராஷ்ட்ர பாஷையில் ஸமர்த்த ராமதாஸ் இயற்றியது. ஸ்ரீ பீமராவ் கோஸ்வாமி அவர்களின் அருமையான தமிழ் உரையுடன்.

5. ஸ்ரீ ராதாக்ருஷ்ண பூஜா விதானம் — விலை ரூ 10/—

பல புராணங்களிலிருந்து எடுத்து எழுதியது. ராதா கல்யாணம் செய்வோருக்கு அவசியம் தேவையானது.

6. நளோ தந்தம் (நைஷத காவ்யத்தின் சுருக்கம்) — விலை ரூ 9/—

7. வேத் பாட வழிமுறை (Syllabus) (ரிக், யஜுர், ஸாம) — விலை ரூ 8/—

வித்யார்த்திகளுக்கு அவரவர்களின் வேதத்தில் எந்த அளவு கற்பிக்கலாம் என்ற விளக்கத்துடன் கூடியது.

நாகராக்ஷரம் — நாகர பதத்திற்கு தமிழ் அர்த்தத்தோடு·

1. ஸ்ரீமத் பாகவதம் — 5 Volumes விலை ரூ. 415/—
2. ஸுந்தர காண்டம் — விலை ரூ. 80/—
3. ஸ்ரீ நாராயணீயம் — விலை ரூ. 55/—

க்ரந்தாக்ஷரம் — (Grantha Script)

1. ஸாமவேத ஸம்ஹிதா (ஸ்வரத்துடன்) — 2 பாகம் — விலை ரூ. 235/—

பூர்வ பாகம் — ரிக், ரிக்பதம், ஸ்தோபபதம், ஆக்னேய, ஐந்த்ர, பாவமான ஆரண்ய, சுக்ரீய கானங்கள்.

இரண்டாம் பாகம் — உத்தர ரிக், ஊஹ ரஹஸ்ய கானங்கள் மற்றும் சாஸ்த்ரீய ஸம்ப்ரதாய கான விளக்கங்களுடன்.

2. சாந்தி குஸுமாகரம் — 2 பாகம் — விலை ரூ. 75/—

3. யாஜுஷ மந்த்ர ப்ரச்னம் — ஏகாக்னி காண்டம் — விலை ரூ. 8/—

க்ரந்தாக்ஷரத்தில் ஸ்வரத்துடன் மணக்கால் ப்ரம்மஸ்ரீ முத்து ச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புகள் :

1. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் — விலை ரூ. 65/—
2. போதாயன பூர்வாபர ப்ரயோகம் — விலை ரூ. 70/—
3. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் — விலை ரூ. 60/—
4. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் — விலை ரூ. 25/—

V.P.P.யில் அனுப்புவதில்லை. பூராத்தொகையையும் M.O. (or) Draft மூலம் அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம்.

மேலும் விபரங்களுக்கு: அத்வைத வித்யாசார்ய மஹா ராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி, D — 76, மூன்றாவது கிராஸ், ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் — 612 001.



அருள்வாக்கு

வயதில் சிறியவனாயிருந்தாலும் தனக்குக் கற்பிப்பவனைப் பெரியவனாக மதிக்க வேண்டும் என்ற கருத்திலிருந்தே ஆசிரியரை (பெரியவர் என்று பொருள்படும்) 'குரு' என்று சொல்வதாக ஏற்பட்டது என்று தர்ம சாஸ்திரங்களிலிருந்து தெரிகிறது. இதிலிருந்து தன்னைவிட வயதில் சிறியவரிடமும் போதனை பெறலாமென்பது தெரிகிறது. அறிவையும் ஆத்மாபிவிருத்திக்கானதையும் பெறுவதில் வயதில் பெரியவர் சின்னவர் பார்க்கப்படாது என்ற உசந்த கொள்கை வெளிப்படுகிறது.

இதற்கு மநு ஒரு கதையே சொல்லியிருக்கிறார்.

அங்கிரஸ்மகரிஷியின்புத்ரன் அவருடைய (அங்கிரஸனுடைய) ஸஹோதரர்களுக்கே வித்யோபதேசம் செய்தார். அப்போது அவர்களை அவர், 'பிள்ளைகளே' என்று கூப்பிட்டாராம். உடனே அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டதாம். தேவர்களிடம் போய் 'கம்ப்ளெய்ன்ட்' கொடுத்தார்களாம்.

தேவர்கள் "நீங்கள் கம்ப்ளெய்ன்ட் பண்ணுவது சரியில்லை. உங்களுக்கு ஒரு வித்தை தெரியவில்லை, அதை உங்களுக்குப் பிள்ளை முறையாகிறவனிடம் சொல்லிக் கொள்கிறீர்கள் என்றால், அப்போது நீங்கள் தான் பாலர், அவர் வ்ருத்தர். வயஸு நிறைய ஆச்சு தலை நரைச்சுப் போச்சு என்பதால் வ்ருத்தராகிவிட முடியாது. நன்றாக வேதத்தை அப்பியாஸம் பண்ணியிருப்பவனே நமக்கு 'வ்ருத்தன்' என்று சொல்லி அனுப்பிவிட்டார்களாம்.

எலும்போடு தசை ஒட்டிப் போன மஹா கிழங்களான யோகி ச்ரேஷ்டர்கள் நித்ய யுவாவான ஆதி குரு தக்ஷிணாமூர்த்தியிடம் மௌனப் பாடம் கேட்கிறார்கள்! "ஆல மரத்தின் அடியிலே ஆச்சர்யத்தைப் பாருங்கள்! சிஷ்யர்கள் கிழவர்கள், குருவோ யுவா. அந்த வாலிப ப்ரொபஸர் எப்படி லெக்சர் கொடுக்கிறாரென்றால், மௌன பாஷை விளக்கும்! அப்படியிருந்தும் அந்த சிஷ்யர்களுடைய ஸந்தேகங்களெல்லாம் பொடியாகித் தீர்ந்து போய்விடுகின்றன" என்று ச்லோகமே இருக்கிறது:

சித்ரம் வட தரோர் மூலே வ்ருத்தா: சிஷ்யா:
குருர்யுவா!
குரோஸ்து மௌனம் வ்யாக்யானம்
சிஷ்யாஸ்து சிந்த ஸம்சயா:

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

புதிய நோட்டுகள் எட்டிப் பார்த்தன. சாப்பாட்டு நேரம் ஆதலால் வகுப்பே ஒட்டு மொத்தமாக கான்டீனையும் மரத்தடிகளையும் நாடிப் போயிருந்தது. அணைக்க மறந்து போயிருந்த மின்விசிறி மட்டும் சோம்பலுடன் மெள்ளச் சுழன்று கொண்டிருந்தது.

கெமிஸ்ட்ரி லாப் கல்லூரி காம்பவுண்டின் ஒரு மூலையில் இருந்தது. பிரின்ஸிபால் அறை வேறு பக்கத்தில் இருந்ததால் அங்கு நடமாட்டம் அதிகம் இல்லை.

சங்கீதா சுற்றும் முற்றும் பார்த்தாள். 'தப்பு! தப்பு!' என்று மனசு அலறிய போதே கைநீண்டு விட்டது. ஒரு நூறு ரூபாய் நோட்டும் ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்களும் இடம் மாறின. எக்ஸ்டென்ஷன் கவுண்டரை நோக்கி வேகமாக நடந்தாள். விட்டுச் சென்ற பர்ஸ் திடீரென்று ஞாபகத்துக்கு வர அவசர அவசரமாக எச்சில் கையோடு கெமிஸ்ட்ரி லாபுக்குள் நுழைந்த ஷைலஜாவை அவள் பார்க்கவில்லை.

"என்னதான் சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் காரணம் காட்டினாலும் நீ செஞ்ச தப்பு, தப்புதான் சங்கீதா. அதனால அதற்கான தண்டனையை நீ அனுபவிச்சுத்தான் ஆகணும். ஷைலஜாகிட்ட பகிரங்கமா மன்னிப்புக் கேட்டுக்கறதாலே உன் தப்புக்குப் பிராயச்சித்தம் பண்ணின மாதிரியும் ஆகும். அனாவசியமா அவள் மனசிலும் உன் சக மாணவ மாணவிகள் மனசிலும் ஏற்பட்ட மனக்கசப்பும் நீங்கும்."

"ஐ ஆம் வெரி ஸாரி ஷைலஜா" — பிரின்ஸிபாலின் அறை வாசலில், அவர் முன்னிலையிலும் கூடிநின்ற மாணவ, மாணவியர் முன்னிலையிலும் சங்கீதா மனம் விட்டு, வாய் விட்டே சொல்லிவிட்டாள்.

அதற்குள் தகவல் பலகையை நோக்கிப் பியூன் நடப்பதைப் பார்த்துக் கூட்டம் அந்தத் திசையில் நகர்ந்தது. மாணவர்கள் செய்யும் நல்லவை, கெட்டவைகளை உடனுக்குடன் தகவல் பலகையில் அரங்கேற்றி விடுவது முதல்வரின் வழக்கம்.

"அட, எட்டப் போங்கப்பா, நெருக்காத ஒட்டிட்டுப் போறவு பாருங்க ஜோம்பா... ஐய..."

காகிதத்தைத் தகவல் பலகையில் ஒட்டி விட்டுப் போக மிகவும் சிரமப்பட்டான் பியூன். அதனைப் படிக்க மாணவர்கள் முட்டி மோதினர். யாரும் எதிர்பாராத வகையில் இருந்தது அறிவிப்பு:

இன்று ஷைலஜாவின் கைப்பையிலிருந்து ரூ. 150/– களவாடப்படக் காரணமாய் இருந்தவர்கள், சுரேஷ், சுந்தரி, மற்றும் ராணி. இவர்கள் முறையே ரூ. 100, 25, 25 என்கிற தொகைகளை ஷைலஜாவிடம் நாளைக்குள் திருப்பித் தராவிட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒப்பம்,
கல்லூரி முதல்வர்.



நெருப்பாக நீ

அவினாஷ், தன்னெதிரில் நிற்கும் இன்பாவையே ஒருகணம் கண் கொட்டாமல் பார்க்கிறான்.

நந்துவின் அடி வயிற்றில் பயம் வட்டமிடுகிறது...

''வேண்டாம் இன்பா. வந்துடு.... இவனானு மேலே பாய்ஞ்சாலும் பாய்வான். சொல்றதுக்கில்லே!''

லோகநாதன், வார்த்தையே எழும்பாமல் நிற்கிறார்.

'என்ன பொண்ணு இவ.... கொஞ்சம்கூட பயமே இல்லாம.... அவன் பார்வையோ சரியாவே இல்லே.... எதையாவது செஞ்சு வைச்சா என்ன பண்றது. இவ, அப்பாவுக்கு நான் என்ன பதிலைச் சொல்லுவேன்.'

இன்பா தன்னைச் சுற்றி நிற்பவர்களின் பதற்றத்தைத் துளியும் லட்சியம் செய்யவே இல்லை.

அலங்கோலமாய், கால்களைப் பரப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்த அவினாஷை, தலையைச் சாய்த்துப் பார்க்கிறாள்.

''எதுக்கு இப்படி சத்தம் போடறீங்க...?''

''உம்...?''

''கத்திக்கிட்டே இருந்தா தொண்டை வலிக்கலே....''

''எனக்குப் பயமா இருக்கு. கத்தறேன்.''

அவினாஷ், தலையைப் பரபரவெனச் சொறிந்தபடி சொல்கிறான்.

''இது குகை. பாழடைஞ்ச கிணறு.... நான், என் தம்பியைத் தேடிட்டிருக்கேன். எங்க பெரியம்மாகூட இந்தக் கிணத்துக்குள்ளேதான் இருக்காங்க. என்னை வா, வா,ன்னு கூப்பிடறாங்க. பெரியம்மா நல்லவ. பாட்டுப் பாடுவா. நீ பாடுவியா?''

இன்பா அவன் முன் மண்டியிட்டு அமருகிறாள்.

''உங்க பெரியம்மா என்ன பாட்டுப் பாடுவாங்க?''

அவன், அவளது கேள்வியே காதில் விழாதது போல, விட்டத்தை வெறிக்கிறான். சம்பந்தமேயில்லாத உளறல் அவனது வாயிலிருந்து புறப்படுகிறது...

''டூரிங் டாக்கீஸ்ல புது சினிமா வந்திருக்கு. பாவ மன்னிப்பு. பாட்டுப் போடறான் பெரீம்மா.... அந்த நாள் முதல்.... இந்த நாள் வரை..... ஓ....ஓ.... ஓலேய்!

''எனக்கு அந்த நெக்லஸ், வளை எல்லாத்தையும் மாட்டிவிட்டா, நானும் பொம்பளையாயிடுவேன்....

''கொத்தனாரு கிட்டே சொல்லி, மாமரத்தடியில ஒரு பிள்ளையார் கோவில் கட்டச் சொல்லணும் டேய்.... நான்தான் பூசை பண்ணுவேன்....''

பேசிக் கொண்டே போனவன் சட்டென இன்பாவைப் பார்க்கிறான்.

பாவாடை தாவணியும், தலை நிறையப் பூவுமாய் நின்றவளைப் பார்த்ததும், 'சாமீ.... அங்காளப் பரமேஸ்வரீ....' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டு, விழுந்து கும்பிடுகிறான்.

''சாமீ.... எங்க அப்பா, சும்மா பெரியம்மாவைப் போட்டு அடிச்சிட்டே இருக்காரு. பெரியம்மா நல்லவ.... பாவம், எங்க அப்பாவுக்குப் புத்தி சொல்லு.''

லோகநாதன் அதற்கு மேல் அங்கு நிற்க விரும்பாதவராகச் சட்டென வெளியேறுகிறார்.

இன்பா வந்து நாலு நாட்களுக்கு மேலாகிறது. இன்றுதான் அவினாஷைப் பார்க்கிறாள்.

வந்த மறுநாளே, மாடியிலிருந்து அவினாஷின் அலறல் கேட்டவுடன் பரபரப்புடன் நந்துவைப் பார்த்தாள்.

அப்போது நந்துவும், லோகநாதனும், கல்யாணக் கூடத்துச் சுவரில் மாட்டியிருந்த பெரிய ஓவியங்களைக் காட்டி, ஒவ்வொருத்தர் பெயராகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

''இது எங்க அம்மாவோட பாட்டி. அவங்க காலத்துல ஜமீனுக்குச் சொந்தமா ஏராளமான கிராமங்கள் இருந்தன.

லோகநாதன் தனது பாட்டியின் பெருமைகளை எல்லாம் சொல்லியபடி, அடுத்த படத்துக்கு நகர்ந்தபோது —

''என்னை விட்டுடு.... என்னை விட்டுடு... ஐயய்யோ!''

இன்பா, அந்தக் கணத்தில் பதறிப் போய் விட்டாள். நந்துவையும், லோகநாதனையும் அதிர்ச்சியுடன் பார்த்தாள்.

ஆனால், அவர்களோ, இதனாலெல்லாம் பாதிக்கப்படாதவர்கள் போல, ஏன், அந்த அலறலே காதில் விழாதவர்களைப் போல இருந்தார்கள்.

''அது யாரு.... உங்க அண்ணாவா?''

''ஆமா.... அவன் இப்படித்தான் கத்துவான். அழுவான். ரகளை பண்ணுவான். எங்களுக்கெல்லாம் பழக்கமாகிப் போச்சு.''

நந்துவின் அலட்சியமான வார்த்தைகள், அவளுள் மெல்லிய கடுப்பை ஏற்ற —

'அவனைக் கண்டிக்கும் பாவனையில் அவள் சொன்னாள்.

''ஊருக்கு வந்ததுலேயிலிருந்து, அவரைப் போய்ப் பார்க்கவே இல்லையே நீ...''

''நான் பார்த்தாலும் அவனுக்கு என்னை அடையாளம் தெரியாதுன்னுதான் சொன்னேனே.''

''சரி, வா. இப்பப் போய்ப் பார்ப்போம்.''

''என்னது .....? நீயா.... வேண்டாம்மா,.. அவன் வெறியில் என்ன செய்வான்னு சொல்ல முடியாது. நாங்களே அவனை ஜன்னலுக்கு வெளியில இருந்துதான் பார்ப்போம். மாதையன் ஒருத்தனுக்குத்தான் அவன் அடங்குவான். கால்லே சங்கிலி போட்டுக் கட்டி வச்சிருக்கு.... எல்லாம் என் விதி.''

லோகநாதன் அவனைத் தடுத்துவிட்டார்.

அந்த நேரத்துக்கு இன்பா அவர் சொன்னதைக் கேட்டாலும், அவினாஷைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை மட்டும் அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.



அதற்குப் பின் நந்தகுமார், தன் அப்பாவின் மற்ற காலஞ்சென்ற மூதாதையர்களின் ஓவியங்களைக் காண்பித்தபோதுகூட, அவளால் பழைய உற்சாகத்துடன் அவைகளை விமர்சிக்க முடியவில்லை....

''ஏன் இன்பா டல்லாயிட்டே....?''

''ஒண்ணுமில்லே!''

அன்று மாலையே, இன்பா நந்துவிடம் கேட்டாள்: ''ஆமா, ராத்திரி எனக்குப் பேச்சுத்துணைக்கு ஆள் வேணும்னு சொல்லியிருந்தேனே.... நேத்து ராத்திரியே எதிர் பார்த்தேன். மறந்துட்டியா நந்து?''



''நீ கேட்கலையேன்னு காத்துட்டிருக்கேன். வீட்டுல மொத்தம் அஞ்சு வேலைக்காரிங்க இருக்காங்க. இதைத் தவிர நிலத்துல வேலை செய்யற பொம்பிளைங்களும் இருக்காங்க. உனக்கு எப்படிப்பட்ட துணை வேணும்?''

''எனக்குத் தூக்கம் வர்ற வரைக்கும் அலுப்புத் தட்டாம என்னோட பேசணும்.''

''சமையற்காரி லட்சுமி இருக்கா.... நிறையப் பேசுவா.''

''அவ, தன்னைப் பத்தியே இல்லே பேசறு. எனக்கு அப்படிப்பட்டவங்களைப் பிடிக்காதே!''

''கோவிந்தம்மாவைப் பார்த்திருக்கே இல்லே, ரொம்ப நல்லவ. வெகுளி.''

''யாரு, எப்பவும் புகையிலைய மென்னுட்டே இருக்குமே, அதுவா.... எனக்கு வேண்டாம். திடீர்னு யாரோ, என்னை, என்னவோ பண்ண வர்றாங்கன்னு வச்சுக்க. அவ, பயத்துலேயே பிராணனை விட்டுடுவா.''

நந்து, புருவங்களைச் சுருக்கிக் கொண்டு,

அவளைப் பார்த்தான்..

''என் வீட்டுல வந்து, உனக்கு எதுக்காக இந்த மாதிரி பைத்தியக்கார பயமெல்லாம். இது, சந்தோஷமான விஷயங்களை எதிர் பார்த்து ஏங்கிக்கிட்டிருக்கிற வீடு.''

''ஒத்துக்கறேன். ஆனா, இப்ப நீயே சொன்னே இல்லே? பைத்தியக்கார பயம்னு.. உன் அண்ணாவும் மாடியில. நானும் மாடியிலே தான் இருக்கேன். அவரோட ரூம் கதவை யாராவது பூட்ட மறந்து, பாதி ராத்திரியில் அவர் என் ரூம்லே வந்து நின்னாருன்னா...''

''அவனால ரூமை விட்டு வெளியில வர முடியாது இன்பா. காலுல சங்கிலி.... ஒரளவுக்கு ரூமுக்குள்ளேயேதான் நடமாட முடியும். மேலும், நாங்க எல்லாரும் இருக்கிறப்ப அப்படி எந்த அசம்பாவிதமும் உனக்கு நேர்ந்துடாது... நம்பலாம்....''

''எனக்கென்னமோ மாடி அட்மாஸ்ஃபியரே பிடிக்கல்லே. கீழே. அதோ.... அந்த ரூமைத் திறந்துவிடேன்....''

அவள் சுட்டிக்காட்டிய அறையைப் பார்த்து, நந்து ஒரு விநாடி தயங்கினான்.

''அது ரொம்ப வருஷமா பூட்டியே கிடக்கிற ரூம் இன்பா...''

''பரவாயில்லே.... அந்த ரூம்லேயிருந்து பார்த்தா பின்பக்கத்துல இருக்கிற வயல் வெளியும், பெருமாள் கோவில் கோபுரமும் தெரியும்னு நினைக்கிறேன்.''

நந்து, அவளை ஆச்சரியத்துடன் பார்த்தான்.

''எப்படி இவ்வளவு கரெக்டா...''

''ஒரு யூகம்தான். காலையில வீட்டை சுத்தி வந்தேன் இல்லேயா... அப்ப தோணிச்சு. இந்தப் பக்க ஜன்னலைத் திறந்துவிட்டா ஜோராயிருக்குமேன்னு....''

நந்து, லோகநாதனிடம் சொல்ல, அவரும் அவளிடம் நாசூக்காய் ஆட்சேபித்துப் பார்த்தார்.

''அது வந்தும்மா.... ரொம்ப பழைய கால ரூம்.... வசதி போதாது.''

''மொஸைக் தரைதானே...''

''ஆமா.''

''ஃபேன் இருக்கு இல்லே?''

''பெரிய ரூமு. ரெண்டு ஃபேன் இருக்கு.''

''அட்டாச் பாத்ரூம்....''

''அதுதான் இல்லே. அந்த ரூம் மங்களாம்பாளோடது.... ரூமுக்குள்ள பாத்ரூம் வச்சுக்கறது எல்லாம் அவளுக்குப் பிடிக்காது. அதோ எதிர்ப் பக்கம் அவ உபயோகத்துக்காகவே பாத்ரூம்.... ரூமுக்குள்ள சின்ன பூஜை அறையும், சமையக்கட்டும் இருக்கு... அவ போனதுக்கு அப்புறம், நாங்க அதைத் திறக்கிறதே இல்லே.... அவ சாமானுங்ககூட அங்கேயேதான் இன்னமும்....''

''நான் அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன் சார். எனக்கு அந்த ரூமையே ஒழிச்சுத்தாங்க...''

லோகநாதனிடம் இப்படிச் சொன்னவள், நந்துவிடம் ஒரு குண்டைத் தூக்கிப் போடுகிறாள்.

''எனக்குப் பேச்சுத் துணையா, மாதையன் ராத்திரி என் கூடத் தங்கட்டுமே....''

''என்னது....?''

நந்துவிற்கு ஒரு பக்கம் அதிர்ச்சி. இன்னொரு பக்கம் சிரிப்பு.

'உலகம்புரியாதபெண்ணாயிருக்கிறாளே..

லோகநாதனும், நரைத்த மீசைக்குள் சிக்கனமாய்ச் சிரித்தபடி, சொன்னார்.

''என்னதான் மாதையன் வயசான மனுஷன்தான்னாலும், அவனைத் துணைக்கு படுக்கச் சொன்னா.... வேலைக்காரங்களே சிரிப்பாங்கம்மா, பட்டணத்துல எப்படி வேணுமானாலும் இருக்கலாம். கிராமத்து ஜனங்களுக்குக் கற்பனை ஜாஸ்தி. யாரை, யார்கூட வேணுமானாலும் முடிச்சுப் போடுவாங்க....''

''நான் அதைப் பத்தியெல்லாம் அதிகமா அலட்டிக்காதவ. என்னைப் பத்தி உங்களுக்கு இன்னும் விவரமாத் தெரியாது. ஆனா நந்துவுக்குத் தெரியும். ஏன் நந்து, மாதையனோட தூக்கம் வர வரைக்கும் கதை பேசி, பாட்டு கேட்டுட்டிருந்தா, என் கற்பு பறிபோயிட்டதா நினைப்பியா என்ன?''

அவள் குறும்பாய் கண்களைச் சிமிட்டி கேட்க, மகனின் தர்மசங்கடத்தை, புன்னகையுடன் ரசித்த லோகநாதன், முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்....

அன்றிரவே மாதையன் மங்களாம்பாளின் அறையைச் சுத்தம் செய்து, கவரோரமாய்த் தன் பாயைக் கொண்டு விரித்து, அதில் குத்துக்காலிட்டு உட்கார்ந்துவிட்டான்.

அவன் மூலமாய், அவினாஷைப் பற்றிச் சகலத்தையும் அறிந்த இன்பா, அடுத்த இரண்டாவது நாள் — மாதையன் அவினாஷுக்குக் காலை உணவு கொடுக்கச் சென்ற போது, 'பொசுக்'கென அவளும் அந்த அறைக்குள் நுழைந்துவிட்டாள்.

''ஐயய்யோ.... இங்கே எதுக்கும்மா வந்தீங்க.... சின்னய்யா, ஓடியாங்க.''

மாதையன் அலற, அப்பொழுதுதான் அம்மாவைப் பார்த்துவிட்டு வெளியே வந்த நந்து, மாதையனின் குரல்கேட்டு அவினாஷின் அறைக்குள் எட்டிப் பார்க்க....

அங்கே இன்பாவைக் கண்டதும் அலறியே விட்டான்.

''நீ எதுக்கு இங்கே வந்தே இன்பா?''

''உஷ். சும்மாயிரேன். எதுக்குக் கத்தறே? எப்பவோ செத்துப் போன உன் தாத்தா, பாட்டி படத்தையெல்லாம் காமிச்சே. இந்த ரூமுக்குள்ள கொஞ்சம் கொஞ்சமா செத்துட்டிருக்கிற இவரை அறிமுகப்படுத்த மறந்துட்டியே....''

''இவனைப் பத்தி உனக்குத் தெரிய வேண்டாம் இன்பா.''

''அதெப்படி.... ஒருவேளை நான் இந்த வீட்டு மருமகளானா, இவரைப் பத்தித் தெரிஞ்சுக்கிட்டுத்தானே ஆகணும்....''


அவளது வார்த்தைகள் நந்தகுமாரை மட்டுமல்ல.... அவன் பின்னாலேயே வந்த லோகநாதனது நாவையும் கட்டிப் போட....

இன்பா, அவினாஷுடன் சினேகமாய்ப் பேசத் தொடங்குகிறாள்.

(தொடரும்)

புதிய மேம்படுத்தப்பட்ட கேர்ஃப்ரீ

கூடுதலான பாதுகாப்பு உணர்வுக்கு



இப்போது ஒப்பற்ற நீல நிற பிளாஸ்டி-ஷீல்டு அதிகரிக்கப்பட்டுள்ளது

அடுக்கின் அடியிலும் பக்கங்களிலும் சுற்றியுள்ள நீல நிற பிளாஸ்டி-ஷீல்டு இப்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. கறை ஏற்படாமல் தடுத்து கசிவு ஏற்படாத முழுமையான பாதுகாப்பு தருகிறது.

முழுமையான சுக உணர்வு, முழுமையான பாதுகாப்பு உணர்வு ஆகியவற்றைவிட வேறு ஒன்றும் அவ்வளவு முக்கியம் அல்ல.

கேர்ஃப்ரீ சானிடரி நாப்கின் ஒப்பற்ற மென்மையான ஒன்டர்ராப் கொண்டது இது ஈரத்தை உள் அடுக்கிற்குள் உறிஞ்சிக் கொண்டு உயர்வான சுகமான உணர்வைத் தருகிறது உங்களுக்கு—எப்பொழுதுமே. சரிப்படுத்தக்கூடிய டேப் முனைகள், நாப்கினை கச்சிதமாகவும், பாதுகாப்பு வசதியோடும் உங்களுக்கு பொருந்த வைக்கிறது.

கேர்ஃப்ரீ சுகம் மற்றும் கேர்ஃப்ரீ பாதுகாப்பு உணர்வைப் பெற்றிடுங்கள் இன்றே. உணர்ந்திடுங்கள் வேறுபாட்டுச் சிறப்பை.

Carefree*

சானிடரி நாப்கின்



முழுமையான சுகம், முழுமையான பாதுகாப்பு

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

10 உள்ள பேக்கிலும் சிக்கனமான 20 மற்றும் 30 உள்ள பேக்கிலும் கூட கிடைக்கின்றன. கேர்ஃப்ரீ ஸ்லெண்டர் வாரு 10 உள்ள பேக்கில் கிடைக்கிறது

OBM/6306/R-4/TAM

என்று விடியுமோ?

திருவனந்தபுரம் – நாகர்கோவில் பிரதான சாலையில் இருக்கும் தக்கலே அருகே புலியூர்க் குறிச்சி (பெயர் நன்றாயில்லே?)

ஒற்றைத்தெருவில்நுழைந்துவிசாரித்ததும், "ஓய் கிருஷ்ணய்யர், உம்மைத் தேடிண்டு யாரோ வந்திருக்கா'' என்று குரல் பறந்தது.

''வாங்கோ, வாங்கோ!''

கிருஷ்ணய்யர் அரையில் மலேயாளத் துண்டு கட்டியிருந்தார். முகத்தில் கொஞ்சம் கவலே தோய்ந்த தாடி. பேச்சில் கசண்டாய் ஒட்டிக் கொண்டிருக்கும் மலேயாளம்.

பெஞ்ச்சில் உட்கார்ந்ததும் சாய்வான மேல் கூரையில் – அட, சினிமாப் பத்திரிகைகளில் வரும் அத்தனே நட்சத்திரக் கும்பலின் போட்டோக்களும்!

''நான் ஒட்டலே. என் இரண்டாவது பொண்ணுகிருஷ்ணவேணி வேலே'' என்றார் கிருஷ்ணய்யர் சற்று லஜ்ஜையோடு. அந்தப் 'பொண்ணு'க்குக் கூட இருபத்தைந்து வயது ஆகிறது. கல்யாணத்திற்கு ரெடி. மூத்தபெண் லக்ஷ்மிக்கு, இருந்த ஒரு ஏக்கர் நிலத்தை விற்று, ரிடையரான போது கிடைத்த சொற்ப கிராஜுவிடியையும், கூட்டிக் கல்யாணம் செய்து கொடுத்தாயிற்று. ''அந்தப் பொண்ணுக்கு என் கைல கழுத்தில போட்டிருந்த உருப்படியெல்லாம் கழட்டிக் கொடுத்துட்டேன். இவளுக்குக் கொடுக்க ஒண்ணுமில்லே'' என்று குரல் வந்தது – உள்ளறையிலேயே நின்று விட்ட கிருஷ்ணய்யரின் மனேவி பகவதியம்மாள்.

சரி, எதற்கு இத்தனே கதை என்கிறீர்களா?

பாவம் சார், இந்த கிருஷ்ணய்யர். நான்கு வருடங்களுக்கு முன்னுல் ரிடையராகிவிட்டார். தக்கலே மேல்நிலேப் பள்ளியில் கடைநிலே ஊழியராக (Last Grade Servant) உழைத்ததற்கான பென்ஷனும், வர வேண்டிய கிராஜுவிடியும் முழுசாய்க் கிடைக்கவில்லே இன்னும்!

நான் பண்ணின ஒரே தப்பு முன்னுல கேரளா கவர்ன்மெண்ட்ல உத்யோகம் பார்த்ததுதான். 56ம் வருஷம் கன்னியாகுமரியைப் பிரிச்சு மெட்ராஸ் ஸ்டேட்டோடு சேர்த்தா இல்லியா, அப்ப நான் திருவாங்கூர் சமஸ்தானத்தில இருந்த பதவி மெட்ராஸ் கவர்ன்மெண்ட்ல இல்லாததால பழைய டெஸிக்னேஷன்லேயே இங்க தொடர்ந்து இருக்கறதுக்கு ஸ்பெஷல் பர்மிஷன் கொடுத்தா. முப்பத்தி நாலு வருஷ சர்வீஸ் முடிஞ்சு நான் 1982ம் வருஷம் ஜூன் கடைசில ரிடையர்ஆயிட்டேன். ரிடையராகறதுக்கு நாலு மாசம் முன்னுலேயே பென்ஷன் ஆர்டர் வந்தாச்சு. என் 'கடைசிச் சம்பளம் 375 ரூபா. மாசப் பென்ஷன் 167 ரூபாய், கிராஜுவிடி 5527 ரூபாய்னு ஆர்டர் வந்தாக்கூட ரிடையராகி ஒன்பது மாசத்துக்கு பென்ஷனே வரலே. அப்புறம் கம்ப்ளெயின்ட் செல்லில புகார் கொடுத்தேன். என்னேட சர்வீஸ் ரெக்கார்டைத் திருப்பி அனுப்பிக் கொடுத்தா. தக்கலே D.O. ஆபீஸர், டெம்பரரி பென்ஷன் 125 ரூபாயும், 2275 ரூபாய் கிராஜுவிடியும் கொடுத்தாரு....

''பென்ஷனேக் குறைச்சதுக்கு என்ன காரணம்னு கேட்டீங்களா?''

''கேரளா கவர்ன்மெண்ட்ல பத்து வருஷம் உத்தியோகம் பார்த்தேன்ல, அதை சர்வீஸ்ல எடுத்துக்கலேயாம். ஆனு ஆர்டர் படி கேரளா சர்வீஸேயும் சேர்த்துக்கணும். நீங்களே படிச்சுப் பாருங்கோ...''

சற்று பழுப்பேறிய காகிதத்தை நீட்டினுர்.

''இது சம்பந்தமா அரசாங்க அதிகாரி, மந்திரிமார், ஜட்ஜ்மார்னு அடியேன் பல தடவை மனு போட்டாச்சு. சுப்ரீம் கோர்ட்டுக்குக் கூட மேட்டர் போச்சு. அவங்க அதைப் பத்மனுபபுரம் கோர்ட்டுக்குத் திருப்பிணுங்க. அங்கேயிருந்து அது மெட்ராஸ் ஹை கோர்ட்டுக்கு போயிருக்கு. என்னே மாதிரி இன்னும் எழுபத்தொன்பது பேர் இந்த ஸ்டேட்களே பிரிச்சதால பாதிக்கப் பட்டிருக்கா...''

ஓர் ஏழைப் பள்ளி ஊழியரை அவருக்கு உரிய பென்ஷனேயே முழுமையாகக் கொடுக்காமல் தவிக்க விடும் நிர்வாகத்தை யார் தட்டிக் கேட்கப் போகிறுர்கள்?

* 'எனக்கு நிவாரணம் கிடைக்கணும் – இவளுக்கு ஒரு விடிவு காலம் பிறக்கணும்' – கிருஷ்ணய்யர், மனேவி, இரண்டாவது மகள்.





• வருடம் முழுதும் குற்றாலம்!



கமலா — 'குளிக்க ஆசைத



கன்னியாகுமரி மாவட்டத்துக் குல சேகரத்திலிருந்து கொஞ்சம் விலகி ஒரு ஐந்தாறு கி.மீ. பயணம் செய்தால் ஒரு பிரதேசம் வருகிறது. சுற்றிலும் நெடுக உயர்ந்த ரப்பர் மரங்கள். சில்லென்று வீசும் குளிர் காற்று. சரசரவென்று கீழே இறங்கும் கருங்கல் பாதை. அப்புறம்..... 'ஜோ' என்ற சத்தத்துடன் அந்த அருவி, பின்னணியில் மேகங்கள் தழுவி நிற்கும் மேற்குத் தொடர்ச்சி மலை.

அந்த அருவிதான் 'நான் பாடும் பாடல்', 'பகல் நிலவு', 'ஆண் பாவம்' சினிமாக்கள் புகழ் 'திற்பரப்பு' அருவி. அருவி,சாரலுடன்-ஒரு பசுங்கன்றின் உற்சாகத்துடன் — ஒரு விஷமக் குழந்தையின் குறும்புடன் — நீரைச் சொரிந்து கொண்டேயிருந்தது. பொதுவாக கார் வைத்திருப்பவர்கள் மட்டும் கட்டுச் சாதத்துடன் வந்து அருவிக் குளியலை அனுபவித்துவிட்டுப் போவார்களாம். வேறு யாரும் பார்க்கக் கூடாத அனுபவிக்கக் கூடாத விஷயங்களா என்று கேட்டு விடாதீர்கள்.

யாரும் எளிதில் போய்ப் பார்த்துவிடக் கூடாது என்றே கங்கணம் கட்டிக் கொண்ட மாதிரி, யாராவது போய்ப் பார்த்தால் அதன் புனிதத்துவம் கெட்டு விடும் என்கிற மாதிரி சில விஷயங்கள் இருக்கின்றன.



• பசுமைச் சூழலில் [illegible] அருவி

...கையாய் ஒரு ...லா மையம்



• ஆண் பாவம் படத்தில் இடம் பெறும் மண்டபம்

...ஆகுல் முடியவே...



உதாரணத்திற்கு அந்தச் சிற்றூரில் தங்குவதற்கு ஒரு லாட்ஜ் கூட கிடையாது. சாப்பிடுவதற்கு ஒரு நல்ல ஹோட்டல் கிடையாது. ஒரு சுமாரான ஹோட்டல் வேண்டுமென்றால் கூட குலசேகரத்திற்குத்தான் போக வேண்டும். நீர்வீழ்ச்சிக்குச் சற்றுத் தூரத்தில் சில மூடிய அறைக் கதவுகள் தெரிந்தன. டாய்லெட்டுகள் என்று சொன்னார்கள்.

நாங்கள் போன சமயத்தில் அருவியில் ஒரு சின்னப் பெண்ணும், ஒரு சிறுவனும் குளித்துக் கொண்டிருந்தார்கள். சற்று தள்ளி மாற்றுத்துணியுடன் இரண்டு பெண்மணிகள் நின்றிருந்தார்கள். அவர்களை அணுகினோம். ஒருவர் மட்டும் மிகுந்த நாணத்துடன் பேச சம்மதித்தார். 'கமலா' என்று பெயர் சொன்னார்.

"இங்க உங்களுக்கு இன்னும் என்ன வசதி இருந்தா நல்லா இருக்கும்னு நெனைக்கறீங்க?"

"இப்ப எங்ககூட வந்த குழந்தைங்க மட்டும் குளிக்கறாங்க. நாங்க குளிக்கலாம்னு பார்த்தா, மாத்துத் துணி கட்டிக்க ஒரு ரூம் கூட கிடையாது. அப்படி ஒரு ரூம் இருந்திருந்தா நாங்களும் குளிச்சிருப்போம்" என்றார்.

சரி. இந்த இடத்தை ஒரு சின்னக் குற்றாலமாக மாற்ற வசதி இருக்கிறதா? உள்ளூர் ஆசாமிகளைக் கேட்டால் தெரிந்து போகும். நான்கைந்து வாலிபர்கள் சரம் சொட்டிய தலையுடன் எங்களை நோக்கி வர அவர்களை நிறுத்தினோம்.

"இந்த அருவிக்கு சீசன் எப்போது?"

மலையாளம் கலந்த தமிழில் பதில்:

"கோதையாறு, பேச்சிப் பாறை, சித்தாறுன்

னு மூனு எடத்திலேர்ந்து தண்ணீர் வர்ற தால வருஷம் முழுக்க தண்ணி வரும்'' என்றார்கள்.


பக்கத்தில் நீளமாக ஓடிய மதில் சுவரைக் காட்டினார்கள். ''இது மஹாதேவர் கோயில். இந்தக் கோயில் கட்டியவர் ஒரு திருவாங்கூர் ராஜா. கோபுரம் கட்ட ஆரம்பிக்கிற நேரத்திலராஜா இறந்துட்டதாலகோபுரம்கட்டவே யில்ல. இல்லன்னு மதுரை மீனாட்சிக்கு இருக்கிற சைஸில ஒரு கோபுரம் இருந்திருக்கும். இந்தக் கோவில் சுவாமிக்கு நீர் அபிஷேகம் செய்ய இந்த நீர்வீழ்ச்சிக்குத்தான் வருவார்கள். கோவிலில் இருந்து நீர்வீழ்ச்சிக்கு வர் சுரங்க வழி ஒன்று இருக்கிறது. அதை இப்போது மூடிவிட்டார்கள். இந்தக் கோவில்ல பத்து நாட்கள் விஷேப் பண்டிகை நடக்கும். ஆராட்டு நடக்கும்... அப்பல்லாம் இங்க உள்ளூர் ஜனங்க நிறையப் பேர் வருவாங்க...''

''அது என்ன ஆராட்டு?''

''இங்கேர்ந்து சித்தாறு போகிற வழியிலே அரகநாடு கோயில் இருக்கு. அங்க இருக்கற மூலவர், இந்த மஹாதேவருடைய மகன்னு ஐதிகம். வருஷத்தில ஒரு நாள் அரக நாட்டு சுவாமி தகப்பனைப் பார்க்க இந்தக் கோவிலுக்கு வருவார். அது எப்படின்னு, ஒரு சாமியார் தலைக் கூடையில அரக நாட்டுச் சுவாமி சிலேயோட இங்கே நடந்தே வருவார். தகப்பனும்மகனும்சேர்ந்து குலாவ ஆரம்பிச்சுவிட்டால், ஊர் க்ஷேமங்களை கவனிக்க மாட்டார்களோ என்னவோன்னு, தகப்பன் சாமியைப் பார்க்கவிடாம ஒரு திரை போட்டு அவரை மறைச்சிடுவாங்க. அதனால அவரைப் பார்க்க வர்ற மகன், அவரைப் பார்க்க முடியாத வருத்தத்தில கோவில் குளத்தில குதிச்சுடுவாரு. அது எப்படின்னு, அந்த உருவச் சிலேயைக் கொண்டு வந்த சாமியார், உருவச் சிலேயோட கோவில் குளத்திலே குதிச்சுடுவாரு. மூர்ச்சையாயிடுவாரு. அப்புறம் அவரைக் கரையேத்தி மூர்ச்சை தெளிவிப்பாங்க. அந்தச் சாமி சிலேயை கண்டு பிடிக்கவே முடியாது. மாயமாய்டும். இதான் ஆராட்டு விழா. இந்த விழாவைப் பார்க்கக்கூட ஏகப்பட்ட ஜனங்க வருவாங்க. ஆனா அவங்களுக்கெல்லாம் இங்கே தங்கறதுக்கு லாட்ஜ் கிடையாது. சாப்பிட நல்ல ஹோட்டல் கிடையாது. கஷ்டந்தான்'' என்றார்கள்.

பட்சி ஒன்று 'டிரிக்' என்றது. கீழே தெரிந்த அருவியில் அந்தச் சிறுவனும் சிறுமியும் இன்னும் ஆசை தீராமல் குளித்தார்கள். பெண்கள் ஏக்கத்துடன், தங்களுடைய கடந்த காலத்தை நினைத்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பசுமைச் சூழலில் நாங்கள் எங்களை மறந்தோம். அந்த அருவி கொட்டும் இடத்தில் இன்னும் கொஞ்சம் பாதுகாப்புக் கம்பிகள் போட்டு (இப்போது இருப்பது போதாது) இன்னும் பல சிறிய விஷயங்களை (ஹோட்டல், லாட்ஜ், டாய்லெட், டிரெஸ் மாற்றும் அறை) அரசு கவனித்துச் செய்து விட்டால், அந்த திற்பரப்பு நிச்சயம் இன்னொரு குற்றாலமாகும். வருடம் முழுவதும் குற்றாலம்!

நாகர்கோவிலில் சமையல் காஸ் சிலிண்டர்களைச் சப்ளை செய்வதற்கு இண்டேன் காஸ், பாரத் காஸ் என்று இரண்டு ஏஜென்ஸிகள் இருக்கின்றன. இரண்டு ஏஜென்ஸிகளிடையிலும் ஏகப்பட்ட போட்டி! ஒரு ஏஜென்ஸியிலிருந்து சிலிண்டர்களை வாங்கிக் கொண்டிருப்பவர்களிடம் மற்றொரு ஏஜென்ஸி பையன்கள் சென்று, 'எல்லா ஏஜென்ஸியும் ஒன்றுதான். அதனால் உங்கள் சிலிண்டரில் காஸ் தீர்ந்ததும் சொல்லுங்கள். நாங்களே சப்ளை செய்கிறோம்' என்று கூறி சப்ளையும் செய்து விடுகிறார்களாம்! பிறகு மற்ற ஏஜென்ஸியினர் வந்து பார்க்கும் போது, 'அந்த ஏஜென்ஸியின் சிலிண்டர் எப்படி வந்தது? இது சட்டப்படி குற்றம் தெரியுமா? அதனால் இனி உங்களுக்கு காஸ் சப்ளை இல்லை!' என்று மிரட்டுகிறார்களாம்! ஆக, கடைசியில் மாட்டிக் கொண்டு முழிப்பவர்கள் உபயோகிப்பாளர்கள் தான் என்று நொந்து போய்ச் சொல்கிறார்கள் நாகர்கோவில் வாசிகள்!





என்.எஸ். கிருஷ்ணனை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அந்த நகைச்சுவை அரசனின் வீடு யாருடைய பராமரிப்புமின்றி, நாகர்கோவிலைச் சேர்ந்த ஒழுகின சேரியில் சிதைந்து காணப்படுகிறது.

நாகர்கோவில்

தாமஸ்.



வளரும் குழந்தைகள் நிறைந்த ஒரு வகுப்பிற்கு பாடம் சொல்லிக் கொடுப்பது, வழிகாட்டுவது... அவர்கள் முன்னேற்றத்தை கவனித்து வருவது... ஒரு முழு நேர வேலை!
ஆனால் ஒன்று. பள்ளியில் என் வகுப்பு சிறப்பிடம் பெற்றுவிடுவது மன நிறைவளிக்கிறது. எனக்குத் தெரியும். அவர்களை தெம்பாகவும் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் வைப்பது ஹார்லிக்ஸ் தான் என்று.
அதனால்தான் நானும் ஹார்லிக்ஸ் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டேன். இது போன்ற ஒரு வகுப்பை வைத்துக்கொண்டு நான் மட்டும் சுறுசுறுப்பில் குறைவாக இருக்க முடியுமா?
மால்டெட் பார்லி, முழு ஆடைப் பால் மற்றும் பொன்னிற கோதுமை கொண்ட ஹார்லிக்ஸ் ஒரு சுவையான, சத்தான பானம். ஊட்டச்சத்திற்கு மூலாதாரமான ஒரு லட்சிய பானமென்ற நம்பிக்கையை பெற்றது. எனவே, கடந்த நூறு வருடங்களாக கோடிக்கணக்கான குடும்பங்கள் உலகமெங்கும் ஹார்லிக்ஸின் மேல் நம்பிக்கை வைத்து வருகிறார்கள் என்பதில் ஆச்சரியமில்லை.
Horlicks
The Great Nourisher
இப்போது!
ஹார்லிக்ஸ் பிஸ்கட்ஸ்
ஹார்லிக்ஸின் நலமிக்க கரகர
மொறுமொறு பிஸ்கட்!
Horlicks
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

எட்டிப்பார்க்கும்

பிலோமினா கூறிய செய்தியைக் கேட்டதும் ரெஜினா பெரிதும் அதிர்ந்துவிட்டாள்.

அமைதியான அந்தச் சூழலில், காற்றின் ஓசையில் உலக ஜீவன்களின் உணர்வுகளைக் கண்டு, அவ்வப்போது அடிக்கும் சர்ச் மணியின் ஒலியில் — ஒருவித ஆயாசத்தோடு, நிம்மதியோடு—லயித்தவாறு, நாளை என்ன என்பதைத் தான் பரிசீலனை செய்யாமல் கர்த்தர் விட்ட வழியென்று நம்பி, சேவைகள் செய்வது ஒன்றே தனக்கு ஆத்ம திருப்தி; அதில் வெற்றி காண வேண்டும் என்ற ஆசையில் கர்த்தரை அன்றாடம் வணங்கி, மனத்தில் எந்தவிதமான ஆசாபாசங்களையும் அண்டவிடாமல், வெகுளியாய், எப்போதோ ஏற்பட்ட ரணத்தின் ஜில்லிப்பு உண்டானாலும் அதைச் சட்டை செய்யாமல், ஒரு நிலையோடு எதிர் நோக்கித் துணிவுடன் வாழ்ந்து வரும் அவளுக்கு அந்த விஷயம் மிக்க அதிர்ச்சியானதுதான்.

தான் எங்கேயோ தோற்றுப் போவது போல் உணர்ந்தாள். தன்னுடைய புறத்தோற்றம் தன் சன்னியாச வாழ்க்கைக்கு ஊறு விளைவிக்கிறதா? என்ற சந்தேகம் முதன் முறையாக அவள் மனத்தில் உண்டான போது கர்த்தரை நினைத்துக் கொண்டாள்.

ஆலயத்தினுள் சென்று, இயேசுவின் முன் மண்டியிட்டவாறு பிரார்த்தனை செய்தாள். அவள் உதடுகள் மெல்ல அசைந்தன. காலையில் பிலோமினாவிடம் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றாய் அவள் மனத்திரையில் வந்தன.

"உனக்கு யார் சொன்னது பிலோமினா?"

"தனபாக்கியம் அம்மா இருக்காங்களே, அவங்ககிட்ட பைபிள் புக்ஸெல்லாம் பிரிண்ட் ஆயிடிச்சான்னு கேட்கப்போனேன். அவங்களுக்கு டைரக்டர் செந்தில் குமார் பழக்கமாம். குடும்ப நண்பராம். கொடியேற்ற வந்தபோது உன்னைப் பார்த்திருக்கிறார். உடனே அவர் தனபாக்கியம் அம்மாவை விசாரிக்க, அவங்க என்னிடம் சொல்ல, நான் உன் அபிப்ராயத்தை எதிர்பார்த்து உன்னிடம் கூறுகிறேன்" என்று சிஸ்டர் பிலோமினா ரெஜினாவின் வயிற்றில் குத்தியவாறு சிரித்தாள்.

"என்ன பிலோமினா? இதில் அபிப்ராயம் என்ன வேண்டியிருக்கு? ஆக்சுவலா இதை நீ என் காதில் போட்டிருக்கவே கூடாது. என்னைப் பத்தி உனக்குத் தெரியும். நான் இந்த வெள்ளை கவுனை என்னிக்கு மாட்டினேனோ அன்னையிலிருந்தே இந்த உடுப்புக்கும், மனச்சாட்சிக்கும் கர்த்தருக்கும் உண்மையா இருந்திட்டு வர்றேன். அப்படிப்பட்ட நான் சினிமாவில் நடிப்பதா.... சே."

ரெஜினாவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது. "இயேசுவே" என்று அவள் வாய் முணுமுணுத்துக் கொண்டிருந்தது. நீண்ட நேரமாக மண்டியிட்டவாறிருந்தாள்.

அன்றும் — கல்யாணத்திற்கு முந்தின நாள் — இப்படித்தான் இருந்தாள். அன்றே இயேசு அவளிடம் பின்னால் வரப்போவதைக் கூறியிருக்கக் கூடாதா? அவள் கணவன் மூலம் அல்லவா அவளுக்குப் பல உண்மைகளை உணர்த்தினார். உலகு இதுதான், இப்படித்தான் என்று காண்பித்தார். மனிதனின் பண்புகளையும், உணர்ச்சிகளையும் அறியும் பக்குவத்தை அளித்தார். மன வேதனை என்னவென்பதை அதன் பிறகுதானே சொல்லிக் கொடுத்தார்.



சைத்தான்கள்

அதற்குத் தான் பலியாகிப் போனது உண்மைதான் என்றாலும், பலரிடமிருந்து தான் வெகுவாக விலகியிருக்கும் வித்தியாசம் பெரிதாகப் பட்டதென்றாலும், சுயமாய், அமைதியாய், நெருடல் – தூண்டல் இல்லாமல், நல்லதொரு வழியை, உலக அனுபவங்களுடன், எல்லாவற்றிற்கும் மேலாக, சஞ்சலப்படாத மனத்துடன் முடிவெடுக்க முடிகிறதென்றால், அவள் கடந்து போன தன் வாழ்க்கையைத் திருப்தியுடன்தான் பார்க்க வேண்டும்.

சின்னப் புன்முறுவலுடன் கைகூப்ப வேண்டும்! தூக்கில் தொங்கவிடப்பட்ட தன் கணவனுக்கும் கைகூப்ப வேண்டும்.

சி.நவீனகுமார்



அவனுக்கு அடுத்த பிறவியிலாவது நல்ல ஞானத்தையும், ஒழுக்கத்தையும் கொடு என்று கர்த்தரிடம் பிரார்த்திக்க வேண்டும்!

பரபரப்பு இல்லாமல், அமைதியாய்த் தெளிந்த நீரோட்டம் போல், சிறு குழந்தைகளை கவனித்துக்கொண்டு, பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டு, சமுதாயத்தின் மீது பெரியதாய் அக்கறை எடுத்துக் கொண்டு இன்று தன்னால் இருக்க முடிகிறதே! அந்த மனோபலத்தை ஏதோ ஒரு சக்தி உண்டாக்கியுள்ளது.

''அது நீதானே! பர லோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே! உனக்குத் தோத்திரம்! நன்றி! நன்றி! நன்றி!'' தன்னையும் மீறி உச்சரித்துக் கொண்டிருந்த ரெஜினா, பிலோமினா தன் தோள்பட்டையைத் தொட்டதும், கண் திறந்து அவளைப் பார்த்தாள்.

பிறகு கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து நின்றாள்.

''என்ன ரெஜினா இன்னிக்கு நீண்ட நேரம் பிரார்த்தனை போலிருக்கு. ரொம்ப சோகமான விஷயமோ?''

பதிலேதும் பேசாமல் தளர்ந்த நடையுடன் அவளைப் பின்தொடர்ந்தாள் ரெஜினா.

''கமான் ரெஜினா பி ஓபன்.... உனக்கென்ன கஷ்டம்? என்கிட்ட நீ சொல்லலாம் இல்லையா? உன் கஷ்டத்துல பங்கேத்துக்க எனக்கு நிச்சயமா உரிமை இருக்குங்கற எண்ணத்தோட கேட்கறேன்.... இதுவரையில நீ ஒருதரம்கூட கர்த்தரிடம் அழுததில்லை. ஐ திங்க் சம்திங் இஸ் ராங் வித் யூ.'' பிலோமினா அவள் தோள்பட்டையை ஆதரவாய்ப் பற்றினாள்.

''மறைக்க என்ன இருக்கு பிலோ. நீதானே இதை ஆரம்பிச்சு வச்சே.''

''நான் ஆரம்பிச்சு வச்சேனா? என்ன சொல்றே நீ?''

''டைரக்டர் செந்தில் குமார் நடிக்க அழைத்த விஷயத்தை நீதானே சொன்னே...''

''ஓ மை லார்ட்.... அதுக்காகவா நீ... அந்த விஷயமா....! நான் எப்பவோ அதை மறந்துட்டேனே! நீ அதை மனசில வச்சுகிட்டு உருகிண்டு இருக்கியா.... பைத்தியம், பைத்தியம்! நான் தனபாக்கியம் அம்மாகிட்ட அப்பவே சொல்லிட்டேன். ''அவ ஒத்துக்க மாட்டா. தயவு செய்து இனிமே இந்த விஷயத்தைக் கிளறாதீங்க. முக்கியமா அவளிடம் டைரக்டா கேட்காதீங்க''ன்னு சொல்லிட்டேனே. உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா?''

''அதுதான் என் மனசை காயப்படுத்திடுச்சு?''

''அது எப்படி உன் மனசைக் காயப்

படுத்தும்? அது உன்னைப் பத்தின பிறருடைய அபிப்ராயம்தானே?''

''அதில்ல பிலோமினா! என் உடம்புகூட மத்தவங்களுக்கு வேறு மாதிரியான எண்ணத்தை உண்டு பண்ணக் கூடாதுன்னு நினைக்கிறவதான். அப்படியிருக்கும்போது...''

''அதுக்காக உடம்பை அறுத்துப் போட்டுடப்போறியா என்ன? எல்லாருடைய எண்ணமும் உணர்வும் ஒரே மாதிரி இருக்குமா என்ன? அப்படி இருக்கணும்னு எதிர்பார்க்கிறதும் தப்பு ரெஜினா. அவர் 'டைரக்டர். கொடியேற்ற வரும்போது உன் தோற்றம் அவரைக் கவர்ந்திருக்கு. அதுல தப்பில்லையே. உன் மனசு போலவே அவர் மனசும் இருக்குமா? உன்னை நடிக்க அழைத்தது அவருடைய தொழில். அதுவும் உன்னுடைய நிலைக்கு மரியாதை கொடுத்து நேராகக் கேட்காமல் தனபாக்கியம் அம்மாவிடம் கேட்டது அவருடைய கண்ணியத்தைக் காட்டுது.

''நீ நடிக்க மாட்டேன்னு நானே அந்தம்மா கிட்ட சொல்லிட்டேன். அவ்வளவுதான். இனிமே செந்தில் இந்த முயற்சியைக் கை விட்டுவிடுவார்.''

''இந்த மாதிரியான அனுபவம் எனக்கு இப்பத்தான் முதல் முறையா ஏற்படுது. அது தான் அரண்டுட்டேன்'' என்று கூறுகையில் அவளிடம் தெளிவு இருந்தது. ஏதோ ஒரு சுமை இறங்கிவிட்ட நிம்மதி இருந்தது.

''ஒரு பணியை நாம் செய்யணும்னு எடுத்துக்கிட்டா, பல இடர்கள் வரத்தான் செய்யும். நம் கர்த்தருக்கு ஏற்படாத இடரா உனக்கு வந்துவிட்டது!''

இந்தப் பேச்சு அவளுக்கு ஆறுதலோடு, தன்னம்பிக்கையையும் அளிப்பதாகத் தோன்றியது.

ரெஜினா தன் அறைக்குத் திரும்பியதும் வழக்கம் போல் முகம் கழுவி பைபிள் படிக்க, உட்கார முற்பட்டாள். வாஷ் பேஸின் குழாயைத் திறந்து இரண்டு கைகளிலும் தண்ணீரை அள்ளி முகத்தில் தெளித்துக்கொண்டு நிமிர்ந்தவளின் பார்வை கண்ணாடியில் பிரதிபலித்த தன் முக பிம்பத்தில் பதிந்தது. பனிச் சென்று துடைத்துவிட்டது போன்ற முகத்தில் திருத்தமான நாசி; திருத்தாமலே கச்சிதமாய் வளைந்திருந்த புருவங்கள்; சொப்பு வாயை அழுந்த மூடிய சிவந்த அதரங்கள், உயிர் ததும்பும் கண்கள்... அந்த நிமிடத்தில் ஸிஸ்டர் ரெஜினா தன் பெயருக்கு முன் இருந்த அடைமொழியை மறந்தாள். கண்ணாடியில் தெரிந்த முகத்தில் நிலைகுத்தியிருந்த அவள் பார்வை மெல்லத் தாழ்ந்தது.... பாதம் வரை சென்று மீண்டும் நிலைக் கண்ணாடிக்குத் திரும்பியது.

அந்தக் கண்களின் இப்போது தெரிவது என்ன... கர்வத்தின் சாயலா? இதுவரை பார்த்தறியாத புதிய களை அல்லவா அது.

ஸிஸ்டர் ரெஜினாவுக்குச் 'சொரேர்' என்றது. தொடர்ந்து சம்மட்டியைக் கொண்டு யாரோ தலையில் ஓங்கி அடித்தது போன்ற உணர்வு.

''கர்த்தரே! என்ன காரியம் செய்துவிட்டேன்!'' திறந்த குழாயைக் கூட மூட மறந்து பாத்ரூமை விட்டு வெளியே வந்தவள், சிறிய மேஜையிலிருந்த சிலுவை அருகே வெலவெலத்துப் போய் உட்கார்ந்தாள். பைபிளை எடுத்துப் பிரித்தவளின் கைகள் பதறின. பரிச்சயமான அதன் எழுத்துக்கள் வெள்ளைத் தாளில் கறுப்பு மீன்களாகச் சுழன்று சுழன்று நீந்தின. மெதுவாகப் பைபிளை மூடி அதன் இடத்தில் வைத்தாள். குமுறிக் கொண்டு வந்த அழுகைக்கு தன் இரு கரங்களிலும் முகம் புதைத்து அடைக்கலம் கொடுத்தாள்.

நீண்ட நேரம் அழுது, ஓய்ந்து போனாள். வாஷ் பேஸின் குழாயிலிருந்து தண்ணீர் வெளிப்படும் ஓசை மட்டுமே அந்த அறையின் அமைதியைக் குலைத்தது. எழுந்து போய்க் குழாயை மூடினாள் ரெஜினா. அன்றிரவு அவள் தூங்கவில்லை.

விடிந்தும் விடியாத நேரத்தில் பெட்டியும் கையுமாகத் தன் அறை வாசலில் வந்து நின்ற ரெஜினாவை ஏற இறங்கப் பார்த்தாள் பிலோமினா. ''இது என்ன கோலம்?'' — ஆச்சரியத்துடன் வெடித்தவளை அமைதிப்படுத்தி அறைக்குள் அழைத்துச் சென்றாள் ரெஜினா. கதவைச் சாத்தித் தாழிட்டாள். இளசான பச்சை நிறத்தில் அவள் உடுத்தியிருந்த மெல்லிய வாயில் புடவை அவளுக்குப் பொருத்தமாகவே இருந்தது. இரவெல்லாம்

லக்கேஜ் பெட்டித் தயாரிப்புத்
தலைவர்களின் படைப்பு—


விஐபி
கன்கார்டு

வந்திறங்குது இப்போது—

இதோ, ஜெட் யுகக் கட்டழகுள்ள
புதிய விஐபி கன்கார்டு! காசிக
காம்போடிய அலாதி ஸ்டைலில்.
கண்டறியாத வர்ண வகைகள்:
பீச் க்ரீம் (செவ்விள மஞ்சள்),
டெஸர்ட் பிரவுன் (மணற் கபில
நிறம்), மிஸ்ட் க்ரே (பனிச்
சாம்பல்), க்ரீம் சாக்லேட்,
மேலும் பலப் பல. உட்புறமோ
இடவசதி மிகுதி.

ஓடோடிப் பார்வையிடுவீர்:
அருகிலுள்ள வியாபாரியிடம்...
சொகுசு லக்கேஜ் புதுவரவுகள்.

ஆகாயமெட்டும் எங்கள் அதிநவீனக் கற்பனை.



**தேர்ந்தெடுக்க மிகப் பல வகைகள்,
வருங்கால யோக வரவுகளோ மேலும் பலப்பல.**



நாகர்கோவிலுக்கு அடுத்தபடி பெரிய ஊர் மார்த்தாண்டம். திருவனந்தபுரம் போகும் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள இந்த ஊர் ஒரு சாலை ஜங்ஷன். நூறு பேருந்துகளாவது கடந்து போகும் இந்த மார்த்தாண்டத்தில் திட்டமிட்ட பேருந்து நிலையம் எதுவும் கிடையாது. வாடகைக்கார்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள், லாரிகள், பஸ்கள் இன்னும் சக்கரம் பொருந்திய அத்தனை வாகனங்களும் ஒரே சமயத்தில் 'ட்ரூ, ட்ரூ' என்று தெருவை அடைத்துக் கொண்டால் அவ்வளவுதான். டிராஃபிக்ஜாம்தான். மூச்சு முட்டல்தான்!

தூங்காமல் அழுது. சிந்தித்ததால் முகம் மட்டும் வீங்கியிருந்தது.

"நான் போறதுன்னு முடிவு பண்ணிட்டேன் பிலோ.....

பிலோமினா ஒரு நிமிடத்திற்கு ஒன்றும் பேசவில்லை.

அவள் பார்வையில் தெரிந்த சந்தேகம் "உனக்குமா சினிமா மோகம்?" என்று ரெஜினாவிடம் கேட்காமல் கேட்டது.

"நீ நினைக்கிற மாதிரி செந்தில் குமார் கொடுத்த சினிமா சான்ஸைத் தேடி நான் போகல்லே பிலோ. நேத்து ராத்திரி நான் ஒரு பெரிய தப்புப் பண்ணிட்டேன். என்னுடைய மன உறுதியில் நீ வச்சிருந்த நம்பிக்கை வீண் போயிடுச்சு. ஒரு நிமிஷத்துக்குத் தான்னாலும், எனக்கு வந்த 'சினிமா சான்ஸ' நான் பெருமையோட நினைச்சுப் பார்த்துட்டேன். என் முகமே எனக்கு அழகாத் தெரிஞ்சுது. மத்தவங்களைக் கவர்ந்திழுக்கிற ஏதோ ஒண்ணு என்கிட்ட இருக்குங்கற பெருமிதம் என் மனசுல எட்டிப் பார்த்திடுச்சு.... எப்ப நான் அதுக்கு இடம் கொடுத்துட்டேனோ, அந்த வினாடியிலேயிருந்து இந்த உடுப்பை அணியறதுக்கு லாயக்கில்லாதவளா ஆயிட்டேன்."

பிலோமினாவின் முக பாவம் ரெஜினாவின் பேச்சையொட்டி மாறிக் கொண்டே வந்தது. இறுதியாய் அவள் முடித்தபோது பிலோ பச்சாதாபத்தைப் பொழியத் தயாராய் இருந்தாள். ஆனால் அதற்குக் காத்திருக்காமல் விருட்டென்று வெளியேறிவிட்டாள் ரெஜினா.

மதர் சுபீரியர் அவளை லேசில் விடுவதாக இல்லை.

"ரெஜினா மை சைல்ட்! நீ பண்ணினது தப்புதான்ங்கறதை மறுக்கலை. ஆனா அதுக்காக நீ ஸொஸைடியை விட்டு விலகணும்ங்கற அவசியம் இல்லை. இந்தச் சலனங்களைக் கடந்து உன்னதமான பரிசுத்தமான நிலையை நீ எய்துவாய்னு எனக்கு நம்பிக்கை இருக்கும்மா."

"மதர் அந்த நம்பிக்கை என்னிக்கு என் மனசுல ஏற்படுதோ, அன்னிக்கே உங்ககிட்டே திரும்பவும் வரேன்".

"நீ சீக்கிரமே திரும்பி வருவாய் ரெஜினா."

தெருக் கோடி பஸ் ஸ்டாப்பில் நின்ற போது எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைகள் மூளையைக் குடைந்தாலும் மனசு லேசாகவே இருந்தது. கப்பல் கார் ஒன்று ஓசைப்படாமல் வழுக்கிக் கொண்டு அவள் அருகில் வந்து நின்றதும் சற்று திகைத்தாள்.

"என்ன ஸிஸ்டர் இந்த நேரத்துல இங்க, இந்த உடையிலே....?" ஆச்சரியத்துடன் கேள்விகளைத் தொடுத்தவர் டைரக்டர் செந்தில் குமாரேதான்.

"நான் ஸொஸைடியை விட்டு வெளியேறிட்டேன்" அதற்கு மேலாக எந்த விளக்கமும் அளிக்கத் தேவையில்லை என்ற உறுதியான எண்ணத்துடன் ரெஜினா அந்த ஒரு வரி பதிலைச் சொன்னாள்.

"ஓ வாட் எ பிடி! என்னுடைய லேட்டஸ்ட் புரொடக்ஷன்ல ஒரு 'நன்' பாத்திரம்.... மிக உயர்ந்த காரெக்டர். அந்தப் பாத்திரத்தில உங்களை நடிக்க வச்சா ரொம்பத் தத்ரூபமா இருக்கும்னு நினைச்சேன். அன்னிக்குக் கொடி ஏத்த கான்வெண்டுக்கு வந்தப்பவே நினைச்சேன், அந்த உன்னதமான பாத்திரத்துக்கு உங்களை மாதிரி வேற யாரும் கிடைக்க மாட்டாங்கன்னு...."

செந்தில் குமார் பேசப் பேச விதிர் விதிர்த்துப் போனாள் ரெஜினா.

"இப்பக் கூட இட் இஸ் நாட் டூ லேட். நீங்க விரும்பினா அந்த உன்னதமான பாத்திரத்தை ஏற்று நீங்க என் படத்துல நடிக்கலாம்...."

ரெஜினாவின் மண்டைக்குள் இடி இடித்து மழை பெய்தது. எங்கேயோ துளியூண்டாக ஒட்டிக் கொண்டிருந்த அகம்பாவம் அந்த அதிர்ச்சி மழையில் கரைந்து ஓடியது. மின்னல் போலப் பளீரென்று ஒருகணத்தில் தெளிவு பிறந்தது.

"மிஸ்டர் செந்தில் குமார்! நீங்க எனக்கு சினிமா சான்ஸ் தருவதாச் சொல்லியனுப்பிச்சப்ப என் தூய்மைக்கு ஒரு சோதனை ஏற்பட்டது. அதுல நான் தோற்றுத்தான் போயிட்டேன். ஆனால் நான் - ஒரு தூய பாத்திரமா நடிக்க விரும்பல. ஒரு தூய பாத்திரமா வாழ விரும்பறேன்! என் கர்வத்துக்கு நீங்கள் நன்றாகவே அடி கொடுத்திட்டீங்க. உங்களுக்கு நான் நன்றி சொல்லணும்."

பாதி புரிந்தும் பாதி புரியாமலும் செந்தில் குமார் வியப்போடு பார்த்துக் கொண்டே இருக்கையில், ரெஜினா கான்வென்டை நோக்கி, வந்த வழியே திரும்பிப் போய்க் கொண்டிருந்தாள்.

20

புதைந்து கிடக்கும் பொக்கிஷங்கள்

சிங்கப்பூரில் தனியாக ஊர் சுற்றிப் பார்ப்பது கஷ்டமேயில்லை. ரமா பிரஸாதுக்குப் பல வித அலுவல்கள் இருந்ததால் குறிப்பிட்ட பஸ் நிலையத்தில் என்னை இறக்கி விட்டு இன்னின்ன இடத்திற்கு இந்திந்த பஸ்ஸில் செல்ல வேண்டும் என்று சொல்வார். மாலை திரும்பியதும் பஸ் நிலையத்திலிருந்து வீட்டிற்கு டெலிபோன் செய்தால் நிலையத்திற்குக் காரில் வந்து அழைத்துச் செல்வார்.

இந்த ஏற்பாடு எனக்குச் சௌகர்யமாக இருந்தது. தன்னிச்சையாகப் பல இடங்களை ரசிக்கவும் உள்ளூர் ஜனங்களை நாளுகக் கணிக்கவும் முடிந்தது. மிக மிக நவீனமான ஊர். தெருக்களில் ஒரு சின்னக் குப்பை கூளம் இல்லை. குப்பை போடுபவர்களுக்கு ஐநூறு சிங்கப்பூர் டாலர் அபராதம் (ரூ 3000). பஸ் ஸர்வீஸ் முதல் தரம். தானுக மூடித் திறக்கும் கதவுகள். டிரைவருக்கருகில் இருக்கும் மெஷினில் சரியான சில்லறை போட்டால் டிக்கெட் கிடைக்கும். சில்லறை போட்ட பிறகே டிரைவர் பஸ்ஸைக் கிளப்புகிறார்.

சிங்கப்பூர் சீன வம்சா வழிப் பெண்கள் சின்ன உருவமாக—மிருதுவாக—சூதுவாதில்லாத அழகுடன் இருக்கிறார்கள். சிறுமிகளும் யுவதிகளும் கொள்ளை அழகு! புறு போல மிருதுத் தன்மை. இளஞ் சிவப்புக் கலந்த தந்த மேனி. ஒரு பஸ் பயணத்தின்போது அப்படிப்பட்ட ஒரு பெண் என்னுடன் கலகலப்பாகப் பேசிக் கொண்டு வந்தாள். நான் அவளுடைய சிறிய கைகளைப் பற்றி ''எத்தனை மிருதுவாக இருக்கிறது உங்கள் கைகள்!'' என்று பாராட்டினேன். அவள் வியப்புடன் என்னைப் பார்த்து, ''இத்தனை நேரம் உங்கள் மூக்கும் கண்களும் எத்தனை திருத்தமாக இருக்கின்றன என்று நான் ரசித்துக் கொண்டிருந்தேன்!'' என்று சிரித்தாள். இக்கரைக்கு அக்கரை பச்சை!

சிங்கப்பூர் பொட்டானிக்கல் பூங்காவை மிக நேர்த்தியாக வைத்திருக்கிறார்கள். கீழே குப்பை போடுபவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனை என்று பலகையில் அங்கங்கே எழுதப்பட்டிருக்கிறது. இங்கு ஆர்க்கிட் பூக்கள் பகுதி மிகச் சிறப்பாக இருக்கிறது. அங்குதான் அதிகக் கூட்டம். பூங்காவில் தோட்ட வேலையில் நிறையப் பெண் ஊழியர்கள் பாண்ட் ஷர்ட் அணிந்து ஈடுபட்டிருப்பதைக் கவனித்தேன்.

இந்தப் பயணங்களில் சந்தித்த பலர் எனக்கு உபயோகமான 'டிப்ஸ்' கொடுத்தார்கள். எந்தெந்தக் கடைகள் நம்பகமானவை, எந்த இடத்தில் என்ன சாமான் மலிவாகத் தரமாகக் கிடைக்கும்... இத்யாதி. ஆனால் அதையெல்லாம் வாங்கப் பணம் எங்கே கிடைக்கும் என்பதை மட்டும் யாரும் கூறவில்லை!

* பாங்காக்கில் உள்ள சலவைக் கல் ஆலயம்



அறுபது டாலர் விலை. நான் இருபதுக்குக் கேட்டேன். சற்று நேரம் பேரம் நடந்தது. கடைசியில் நான், "இதோ பாருங்கள். நான் ஒரு தமிழ் எழுத்தாளர். இருபதுக்குக் கொடுத்தீங்கன்னு சந்தோஷமா ஊருக்குப் போய் உங்களைப் பத்தி எழுதுவேன்" என்றேன்.

"தமிழ்லே எழுதறீங்களா? அப்பக் கொடுத்துட வேண்டியதுதான்" என்று சிரித்தபடி இருபது டாலருக்குக் கொடுத்து விட்டார் ஷா ஸ்போர்ட்ஸ் ஸெண்டர் ஷபீர் மஹம்மத்.



• சந்திரன்



• சிங்கப்பூர் டைகர்பாம் தோட்டம்.

சிங்கப்பூரின் புகழ்பெற்ற ஸெரங்கூன் தெரு தமிழ்நாட்டுக் கடைத் தெருவுக்குள் நுழைந்த பிரமையை ஏற்படுத்துகிறது. அத்தனை கடைகளிலும் தமிழ்ப் பேச்சு. ஜப்பான் புடைவைகளை மலை மலையாகக் குவித்திருக்கிறார்கள். அல்லது உருளைகளில் சுருட்டி வரிசை வரிசையாக அடுக்கி வைத்திருக்கிறார்கள். ஓரிரு புடைவைகளைப் பொறுக்குவதற்குள் பெண் ஜன்மம் ஏன் எடுத்தோம் என்று வைராக்கியம் ஏற்பட்டு விட்டது.

சுபாவமாகச் சாமான்கள் வாங்குவது எனக்கு அலுப்பூட்டும் விஷயம். என் பிள்ளை கேட்டிருந்த டென்னிஸ் ஷூ வாங்க ஒரு தமிழர் கடையில் நுழைந்தேன். இங்கெல்லாம் கண்ணை மூடிக் கொண்டு பேரம் செய்ய வேண்டும் என்று ரமாவின் மகன் சொல்லியிருந்தான்.

கடைக்காரர் ஒரு ஷூவைக் காண்பித்து, "இது ரொம்ப ஹை க்ளாஸ். 'போர்க்' இந்த ஷூவைத்தான் போட்டுக்கிட்டு விளையாடறாரு" என்றார்.

சிங்கப்பூர் ப்ராட் காஸ்டிங் சென்டரின் டி.வி. பகுதியில் தமிழ் நிகழ்ச்சிகளைக் கவனித்துக் கொள்ளும் சந்திரன் சிங்கப்பூர் ரேடியோ தமிழ் நிகழ்ச்சிக்காக என் பேட்டி ஒன்றுக்கு வெகு துரித காலத்திற்குள் ஏற்பாடு செய்தார்.

சந்திரன் தம்பதி இருவருமே அங்கு வேலை பார்க்கிறார்கள். மலேயாவில் பிறந்து ஆங்கிலம் மட்டுமே பேசத் தெரிந்திருந்த சந்திரனுக்குத் தமிழ் ஆர்வத்தை வளர்த்ததே 'கல்கி' தான் என்றார். பள்ளிப் படிப்பும் கல்லூரிப் படிப்பும் தமிழ்நாட்டில் முடித்து மலேயா திரும்பியதும் பல சிறுகதைப் போட்டிகளில் பரிசுப் பெற்று முழு நேர எழுத்தாளராகிவிட்டார். நிறைய நாடகங்களை எழுதி இயக்கியும் இருக்கிறார். கடந்த முப்பத்தியொரு ஆண்டுகளாகச் சிங்கப்பூர் ரேடியோவில் வேலை பார்க்கிறார். நிகழ்ச்சிகளில் பல புதிய அம்சங்களைப் புகுத்தியிருக்கிறார். கடந்த பத்தொன்பது ஆண்டுகளாக டெலிவிஷனில்



ஒருவன் : எங்க ஸ்கூல்லேயே நான்தான் முதல்!

நண்பன் : படிப்பிலேயா?

முதல்வன் : ஊஹூம், பெல் அடிச்சதும் வீட்டுக்கு ஓடறதுல!

— எஸ். முகம்மது யூசுப்

முழு நேரத் தயாரிப்பாளராகப் பணி புரிகிறார்.

அலுவலக வேலையைத் தவிர கலா மந்திர் என்னும் கலை நிறுவனத்தின் செயலாளராகப் பணியாற்றி வருகிறார். சிங்கப்பூரில் இருக்கும் இந்தியக் குழந்தைகளுக்கு இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட ஆசிரியர்களைக் கொண்டு நாட்டியமும் சங்கீதமும் வாத்திய இசையும் சொல்லிக் கொடுக்க கலா மந்திர் பாடுபடுகிறது. சென்ற ஆண்டு 'தத்தாத்திரேயா' என்ற நாட்டிய நாடகத்தை இவரே முழுப் பொறுப்பேற்று அரங்கேற்றினாராம்.

சிங்கப்பூரில் கால் வைத்த நிமிஷத்திலிருந்து தனியாகச் சுற்றிப் பழகிப் போன நான், கிளம்புகிற அன்று விமான நிலையத்துக்கு யாரும் உடன் வர வேண்டிய அவசியமில்லை என்று டாக்ஸி வரவழைத்துக் கிளம்பிச் சென்றேன். சிங்கப்பூர் விமான நிலையத்தைப்போன்ற குழப்பம் விளைவிக்காத விமான நிலையத்தை நான் எங்கும் பார்த்ததில்லை. சுத்தமும் கலையழகும் அங்கங்கே தெளிவான விளக்கங்களுமாக மனத்துக்குத் திருப்தியை அளிக்கிறது.

மீண்டும் பாங்க்காக் வழியாகப் பயணம். காலை பத்து மணிக்கு பாங்க்காக்கை அடைந்து இரவு பத்து மணிக்குத்தான் தில்லிக்கு மறுபடி விமானமேற வேண்டும். நான் விமான நிலையத்திலிருந்து திருமதி சாஸ்திரிக்கு நான் வந்திருப்பதாகத் தகவல் தெரிவித்தேன். ''அங்கேயே காத்திருங்கள். காரை அனுப்புகிறேன்'' என்றார்.

காருக்காகக் காத்திருந்த அந்த அரை மணிப் போதுக்குள் 'தாய்' டாக்ஸிக்காரர்கள் என் உயிரை எடுத்துவிட்டார்கள்.

சாஸ்திரியின் டிரைவர் மிக மிக சினேகிதமாக இருந்தார். தனது மகாக் கொச்சை ஆங்கிலத்தில் ஏக உபசாரம் செய்தார்.

''மேடம்முக்கு எங்கெல்லாம் போகவேண்டும் என்று சொல்லுங்கள். அங்கெல்லாம் அழைத்துப் போகிறேன்'' என்றார்.

நான் சென்ற முறை தங்க புத்தரையும் 'சலவைக்கல்' ஆலயத்தையும் பார்த்திருக்கவில்லை. அவையிரண்டையும் பார்க்க வேண்டும் என்றேன்.

''கண்டிப்பாக அழைத்துப் போகிறேன்'' என்றார் அவர் ஆர்வத்துடன்.

''இங்கு தங்கம் மலிவு மேடம், வாங்கிக் கொண்டு போகவில்லையா?'' என்றார்.

''இல்லை'' என்றேன்.

''இங்கு வரும் தென்னிந்தியப் பெண்கள் எல்லாம் நகைக் கடைக்குத்தான் முதலில் போகிறார்கள். தங்கம் வேண்டாம், புத்த விஹாரம் பார்க்கிறேன் என்று சொல்லும் முதல் பெண்மணி, உங்களைத்தான் பார்க்கிறேன்.''

எனக்குச் சிரிப்பு வந்தது.

''எனக்குத் தென்னிந்தியர்களை ரொம்பப் பிடிக்கும். சாஸ்திரி தம்பதிகளைப் போல நல்லவர்களை நான் பார்த்ததில்லை. அவர்களைத் தெய்வமாக மதிக்கிறேன்'' என்றார்.

நான் அசந்து போனேன். எப்பேர்ப்பட்ட பாராட்டு இது! அதுவும் யாரிடமிருந்து வருகிறது! என் மனம் நெகிழ்ந்திருந்தபோது, திருமதி சாஸ்திரி சொந்தச் சகோதரியை வரவேற்பது போல் என்னை வரவேற்றார். ''மாலை வரை காரை உபயோகித்துக் கொள்ளலாம்'' என்றார்.

நான் உற்சாகத்துடன் தங்க புத்தராலயத்துக்குச் சென்றேன். தங்க புத்தர் சிலை தங்கம் என்றே தெரியாமல் ரகசியமாக இருந்ததாம். மேல் கவசம் ஒருமுறை உடைந்து எதேச்சையாக உள்ளிருப்பது கட்டித் தங்கம் என்று கண்டுபிடித்தார்களாம். ஐநூறு டன் கட்டித் தங்க புத்தர் ஜகஜ்ஜோதியாய் அருள் சுரக்கிறார்.

அங்கிருந்து இன்னும் இரண்டு மூன்று புத்த விஹாரங்களுக்கு டிரைவர் உற்சாகத்துடன் அழைத்துச் சென்றார். மறுபடி வருவதற்கு எங்கே வாய்ப்பிருக்கப் போகிறது என்று மூலை முடுக்கு விடாமல் பார்த்துச் சந்தோஷப்பட்டேன். பூக்கடைகளில் விதவிதமாகப் பூ ஜோடனைகள் செய்யப்பட்டிருந்தன. கடைத் தெருவில் கைவினைஞர்களின் பலவித கலைப்பொருள்கள். எப்படிப்பட்ட கலாபூர்வமான கைகள் இந்தத் தாய்லாந்துக்காரர்களுக்கு என்று வியப்பேற்பட்டது.

இரவு பத்து மணிக்கு இந்தியாவுக்குச் செல்ல விமானமேறியபோது மனசு நிறைந்து போயிருந்தது.

ஊர் வந்து சேர்ந்ததும் பல நண்பர்கள் கேட்டார்கள். ''சிங்கப்பூர் வழியாக வந்தாயே, என்ன வாங்கிக் கொண்டு வந்தாய்? கலர் டீ.வி.? வீடியோ? கானன் காமிரா?''

''ஊஹூம் எதுவும் வாங்கவில்லை. வாங்க வேண்டும் என்று தோன்றக்கூட இல்லை.''

''எவ்வளவு பெரிய முட்டாள் நீ'' என்றார்கள்.

எனக்குள் நான் புதைத்துக் கொண்டிருக்கும் பொக்கிஷத்தைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது.

(முற்றிற்று)

இமயம் முதல் குமரி வரை.....

எத்தனே பொதுக் கூட்டங்களில் இந்தப் பிரயோகம் எதிரொலித்துவிட்டது! நமது ரயில்வே நிர்வாகம் கூட இதை விட்டு வைக்க வில்லே. ரயில் நீளத்திற்குத் திட்டங்கள் போட்டார்கள். அறிக்கைகள் விட்டார்கள். செயல்படுத்தினர்களா?

பிரச்னேகள் அதிகமானதும் ரயில் பயணிகள் ஒரு சங்கமே அமைத்துவிட்டனர், கன்னியாகுமரியில்.

'ரயிலேப் பற்றி?' என்று நாம் கேட்டால் போதும், குமுறிக் கொட்டுகிறர்கள். இந்தச் சங்கத்தைச் சேர்ந்த ராஜ்:

''அரசாங்கமும் சரி, அரசியல் அமைப்புகளும்.சரி, தமிழ்நாட்டை, ரயில் விஷயத்தில் அநியாயமா ஒதுக்கி வச்சிட்டாங்க. மெட்ராஸ் மெயில் கன்னியாகுமரி வரைக்கும் வரும்னு சொல்லி 1983ம் வருஷம் அட்டவணேல கூடப் போட்டாங்க. ஆனு இன்னி வரைக்கும் திருவனந்தபுரத்தோட வண்டி நின்னு போயிடுது. விவேகானந்தா எக்ஸ்பிரஸ்னு காவி கலர்லாம் அடிச்சுக் குமரி வரைக்கும் வந்த ரயில் அப்புறம் ஹௌகாட்டி எக்ஸ்பிரஸ்னு பேரை மாத்திக்கிட்டுத் திருவனந்தபுரத்தோட நின்னு போச்சு. ஆறு கோடி ரூபா செலவில நாகர்கோவில் ஜங்ஷன்ல இன்ஜின்களேப் பழுது பார்க்க ஒரு நிலேயம் ஆரம்பிக்கத் திட்டம் போட்டு இப்போ அது எர்ணுகுளத்துக்கு மாறிடுச்சு. எந்தத் திட்டம் போட்டாலும் அது தமிழ்நாட்டுக்குக் கெடைக்காம கேரளாவுக்கே போயிடுது. அந்த ஆபீஸர்ங்க கேரளாவைச் சேர்ந்தவங்கன்றதுதான் முக்கிய காரணம்....

''ஒரு விஷயத்தைக் கேளுங்க. இரணியல்லேர்ந்து திருவனந்தபுரத்துக்கு பாஸஞ்சர் வண்டி காலேல 7.38க்கு கௌம்புது. அதில கிளம்பி ஆபீஸ் போறவங்க, சாயந்திரம் திருவனந்தபுரத்தில 5.45க்குப் புறப்படற ரயிலேப் பிடிச்சா இரணியலுக்கு 7.25க்கு வரலாம். ஆனு இங்க சீஸன் டிக்கெட் கொடுக்கற நேரம் என்ன தெரியுமா? காலேல எட்டு மணிலேர்ந்து ராத்திரி ஏழு மணிவரைக்கும். அதாவது நாங்க ரயிலேறினப்புறம் திறப்பாங்க, திரும்பி வரதுக்குள்ள மூடிடுவாங்க. அதனுல சீஸன் டிக்கெட்டை திருவனந்தபுரத்தில வாங்க வேண்டிய அவசியமாகுது. இரணியலுக்கு கலெக்ஷன் கம்மியாயிடுது... அதைக் காரணம் காட்டி இங்கே ரயில்வே டெவலெப்மெண்ட்ஸ்லாம் நின்னு போகுது.

''ராத்திரி ஏழு மணிக்கு ஒரு ரயில் திருவனந்தபுரத்திலேர்ந்து புறப்பட்டு நாகர்கோவில் வந்திட்டிருந்தது. அதை இப்போ இரவு 8.40க்குன்னு மாத்திட்டாங்க. ரயில் நாகர்கோவில் வந்து சேர பதினெரு மணி ஆயிடும். அந்த நேரத்தில அக்கம்பக்கம் ஊர்களுக்குப் போய்ச் சேர வேண்டியவங்களுக்கு பஸ் வசதி கூடக் கிடையாது....''

''உங்க சங்கம் அரசாங்கத்துக்கு மனு கொடுக்க வேண்டியதுதானே?''

''அதைவிடச் செவிடன் காதில சங்கு ஊதலாம். கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் இரணியல் ஸ்டேஷன்ல நிக்கணும்னு கேட்டு எத்தனேயோ பெட்டிஷன் கொடுத்திட்டோம். இப்ப வண்டி நிக்கறது குழித்துறைலதான். பஸ் பிடிச்சு அந்த ஸ்டேஷன் போய் டயத்தில ரயிலேப் பிடிக்கணும்... இரணியல் பக்கத்தில எத்தனேயோ முக்கியமான இடங்கள், கேன்ஸர் சென்டரெல்லாம் இருக்கு; ஆனு இரணியல்லே ரயில் நிக்காது.....''

இன்னும் ஏராளக் குமுறல்கள் உண்டு, இவருக்கு.

''ரயில்களால் இன்னெரு புண்ணியம் உண்டு'' என்கிறர் தாமஸ். ''நாஞ்சில் நாட்டு கட்டிச் சம்பா அரிசி கேரள ஜனத்துக்கு ரொம்பப் பிடிக்கும். ஆனு அங்கே விலே அதிகம். அரிசி போக்குவரத்துக்கும் தடை உண்டு. அதனுல சின்னச் சின்னப் பைல அரிசியைத் திணிச்சு, ஸீட்டுக்கடில, லெட்ரின்ல கூட வச்சு கடத்திட்டுப் போவாங்க. குழித்துறை வெஸ்ட் ஸ்டேஷன் தாண்டினவுடனே எல்லாம் பெரிய பெரிய மூட்டையா மாறிடும். கோட்டாறு மார்க்கெட் சீரழிஞ்சு போனதுக்கு முக்கியக் காரணமே கேரளாக்காரர்கள் வந்து இங்கே அதிக சாமான் வாங்கி அவங்க ஊருக்கு எடுத்துப் போறதுதான்....''

இன்ஜின்களே விட சூடாகப் பெருமூச்சு விடும் இந்தப் பயணிகளின் பேச்சில் யாராவது ரயில்வே நிர்வாகத்துக்கு எடுத்துச் சொல்ல மாட்டார்களா என்ற ஆதங்கம் வழிகிறது.

நம்மால் முடிந்தது, சொல்லிவிட்டோம்!



* ராஜ்

தண்டவாளம் உண்டு; ரயில் எங்கே?



மாண்புமிகு முதலமைச்சர்

சருக்கம் 9

கபாலீச்கரன்

சேக்கிழார் விழிகளில் சேல் விழிகள் துன்னிச் செயலிழக்கச் செய்துவிட்டன.

''ஏன் சுவாமி, என் கண்களை அப்படி விழுங்குகிறீர்கள்? உங்கள் ஞானக் கண்களுக்கு முன்பு இவை ஊனக் கண்கள்!''

சேக்கிழார் செய்மையாய்ச் சிரிக்கிறார்.

''ஊனக் கண்கள் பேசிய பேச்சா இது?''

''எது?''

''தொட்டுவிட்டீர்களே என்று நீ சொன்ன தன் தோரணை!''

''பட்டுவிடாமல், கெட்டு விடாமல், விட்டு விடாமல் இருப்பதற்காக!''

சேக்கிழாரது பார்வையைப் புரிந்து கொண்டு ஜோதியே நாவாடினாள்:

''சுவாமி! என்னை நீங்கள் பூரணம் என்று சொல்லிவிட்ட பிறகு, பூஜ்யமாக்கிப் பார்ப்பதை நான் விரும்பவில்லை. என்னுள் உங்கள்....''

வாசலை நோக்குகிறாள்.

அங்கே அந்தக் கபாலிகன்....

''என்னுள் நீங்கள் எவ்வளவுக்கு வியாபித்து இருக்கிறீர்களோ, அவ்வளவுக்கு நான் பரிசுத்தமடைந்தவள். உங்கள் தெய்வத்திருக்கரம் என்னைத் தொட்டுவிட்ட பிறகு என்னை வளர்த்தது ஒரு தேவதாசியாயினும் நான் ஒழுக்க ரதத்தில் ஊர்வலம் வரவேண்டியவளாகிறேன்.

''சுவாமி! சுந்தரர் பெருமானின் திருத்தொண்டர் தொகையைப் பாடி ஆடினேன். பின்னால் திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் அடியெடுத்துக் கொடுக்க நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியை ஆடி மகிழ்ந்தேன். சுந்தரர் ஒரு வரியில் சொன்னார், நம்பிகள் ஒரு பாடலில் சொன்னார்; நீங்களோ இவர்களைப் பற்றி நன்கு ஆராய்ந்து வைத்திருக்கிறீர்கள். இந்தத்தில்லை ஈசன் அடியெடுத்துக்கொடுக்க ஒரு பெரிய புராணமே பாட வேண்டும். அதனை நான் ஆடி திக்கெட்டும் பரவச் செய்தல் வேண்டும். இதைவிட என்ன பேறு இருக்கப் போகிறது? நீங்கள் தொட்டதால் தான் எனது உடல் ஜோதியானது. தெய்வத்தின் தீண்டல் அல்லவா? நான் மனமாரக் காதலித்த ஒருவருடனேயே கடைசி வரை வாழ்ந்து கண் மூட வேண்டும் அல்லவா?''

''நீ ஒருவனைக் காதலிக்கிறாயா?''

''முன்னம் கூறினேனே, 'ஓர் உண்மை' என்று..... அந்த உண்மைதான் இது.''

''யாரவன்?''

''அறிமுகம் செய்கிறேன் சுவாமி!''

ஜோதி வாசல் பக்கம் நோக்கி, ''ஈசா'' என்றழைக்கிறாள்.

என்ன வேடிக்கை இது? ஈசா.....

வாசலில் நின்றிருந்த அந்தப் பயங்கர கபாலிகன் உள்ளே நுழைந்து வணங்கி நிற்கிறான்.

பிரமித்துப் போனார் சேக்கிழார். இவனா? பார்க்கவே குலை நடுங்கும் மண்டையோட்டு மாலை மனிதனா? இவனா இவளைக் கவர்ந்தான்? இவனா இவளது காதலன்?'

''ஏன் சுவாமி, ஏதோ மருட்சியுடன் கவனிக்கிறீர்கள்? இவர் பெயர் கபாலீச்சரன். நான் அந்த ஈசனாகவே எண்ணி ஈசா என்றழைக்கிறேன். என்னைப் பாதுகாத்து வரும் பரமசிவன் என்றே இவரைச் சொல்வேன். குன்றத்தூரின் குங்குமத் தமிழ், குன்றத்தூருடன் மறைந்து போகாமல், குவலயம் முழுவதும் பரவ வேண்டும் என்று ஆசைப்பட்ட பரிசுத்த ஜீவாத்மா இவர்! பார்க்கத்தான் அசிங்கம்; வீரத்தில் சிங்கம்! கபாலிகராய்த் திரிந்து வந்த இவரது கண்களில் நான் பட்டுவிட்டேன். இதயத்தை விட்டு விட்டேன். திருத்தொண்டர் சேவையை ஆடலால் செய்யும் எனது கண்களுக்கு இவர் மயிலாபுரிவாழ் கபாலீச்சரராகவே காட்சி தந்தார். என்னை வரித்துக் கொண்டார். ஆனால் ஒரு நிபந்தனையுடன் என்னை ஏற்றிருக்கிறார்.''

கோவி. மணிசேகரன்

"என்ன நிபந்தனை?"

சேக்கிழார் வெகுவாகவே குழம்பி வருகிறார் என்பது அவரது பேச்சின் தடுமாற்றத்திலிருந்து புரிகிறது.

ஜோதி விளக்கினாள்:

"உங்கள் திருக்கரத்து மூலம் திருத்தொண்டர் புராணம் எழ வேண்டும் என்பது இவரது ஆசை; முயற்சி என்பதைவிட தவம்! சிறுதொண்ட நாயனாரைச் சோதித்த கபால மூர்த்தியான ஈசன், இவர் கோலத்தில் என்னை ஆட்கொண்டு இப்படி ஓர் ஆக்ஞை பிறப்பிக்கிறாரோ என்று அன்றும் எண்ணினேன்; இன்றும் எண்ணுகிறேன். குன்றத்தூரில் இருந்து கொண்டு தொண்டர் மாக்கதை எழுதினால் அது அவ்வளவாகப் பிரசித்தமாகாது. ஆகவேதான் அசாதாரண மனிதராக்கி எழுதச் செய்ய எடுத்துக் கொண்ட முயற்சியின் திருவினைதான் இன்றைய உங்கள் மாண்புமிகு முதலமைச்சர் பதவி. இப்போது நீங்கள் எழுதினால் அது உலகமாப் புகழ் பெறும். எனவேதான் அன்றைக்கே நான் வெற்று ஓலைச் சுவடிகளைக் கொடுத்தேன். இவர் சோழ மாமன்னரைச் சந்தித்து எவ்வளவு ரகசியத் திருவிளையாடல் புரிந்திருக்கிறார் என்பதை நான் ஒருத்தியே அறிவேன்."

"அனபாயனை இவர் சந்தித்தாரா?"

"ஓர் இரகசியம் சொல்வேன். ஒட்டக்கூத்தர் சோழ மாமன்னருடைய தமிழாசான்; அவைக் குரவர். ஆனால் இவரோ ஞானாசான். இவர் அரண்மனை வாசலை மிதிக்கவில்லை. இவரது குகை வாசலைச் சோழ மாமன்னர்தான் மிதித்து வருகிறார்; மதித்தும் வருகிறார். இந்த இரகசியம் என் ஒருத்திக்கே தெரியும். நான் ஓர் எளிய தூண்டுகோலாக நின்றேன். ஆனால் உண்மையான ஜோதி நீங்கள்தாம்!"

"ஜோதி என்னை....."

"மறுக்க வேண்டாம். இது மாமன்னரின் விழுமிய விருப்பம். நீங்கள் ஓர் அடியவராகவே வாழ்ந்துவிட வேண்டும் என்று அடியார்களின் கதைகளை நாடு தோறும் சென்று ஆராய்ந்து தெளிந்தீர்கள். அவ்வாறில்லாமல் அந்த அடியவர்கள் வரலாற்றைப் பனுவல்களாகப் படைக்கவேண்டும் என்பது ஈசனின் கட்டளை. நான் குறிப்பிடுவது பரமேஸ்வரன்! அடுத்து நிகழ இருக்கும் பேரம்பலம் பொன்வேய்ந்த விழாவில் நீங்கள் தொண்டர்களைப் பாட ஆரம்பிக்கிறீர்கள்.





தூண்டுதலாக நானிருப்பேன் என்பதைவிட துணையாக நானிருந்து கற்பனைக்கு ஜோதி யாவேன்! புராணம் முடிகிறபோது முடியட்டும். முடிந்ததும் அந்தப் பெரிய புராணத்தை நீங்கள் பாட, நான் ஆட இந்த வையம் மகிழும்.''

''ஈசா!'' என்றுகூச்சலிடுகிறார்சேக்கிழார். மெய்யெல்லாம் ரோமாஞ்சலி.

''என்னை அழைத்தீர்களா?'' என்கிறான் கபாலீச்சுரன்.

அண்ணாந்து கவனித்த சேக்கிழார், அந்தக் கரகரத்த குரல் கேட்டு வியக்கிறார். இது குரலா? செவிகளே நாணுகின்றன என்றால் ஜோதி எப்படித்தான் ரசிக்கிறாளோ?

''ஆமாம், உன்னைத்தான் அழைத்ததாக வைத்துக் கொள். ஜோதி சொல்வது உண்மையா?''

''இவளுக்கு உண்மையைத் தவிர வேறு எதுவுமேதெரியாது அமைச்சர்பெருமானே!''

''அப்போது நீ பொய் சொல்வாயா?''

''புரை தீர்ந்த நன்மை பயக்குமாயின்!''

''திருக்குறளை நன்றாகவே படித்திருக்கிறாய்!''

''திருத் தமிழையே நன்றாகப் படித்து இருக்கிறேன்.''

''அப்போது தொண்டர் புராணத்தை நீ பாடலாமே?''


''படிப்பது வேறு; படைப்பது வேறு! முன்னது புலமை; பின்னது வரப்பிரசாதம்! இது எல்லாருக்கும் கிடைத்துவிட முடியாது.''

''ஒட்டக்கூத்தர் மிகச் சிறந்த படைப்பாளியாயிற்றே! அவரைக் கொண்டு பாட மன்னரைத் தூண்டியிருக்கலாமே!''

இப்போது ஜோதி தலையிட்டு மறுமொழி பகர்ந்தாள்:

''இங்கேகற்பனை அலங்காரம்வேண்டாம். கனிந்த தமிழில் கதை சொன்னால் போதும்.

பஸ் ஸ்டாண்டா? குளமா?



உருட்டிப் போட்ட சோழிகள் போல் குறுக்கும் நெடுக்குமாய் நிற்கும் பஸ்கள். குளத்து பஸ் ஸ்டாண்ட் என்று மக்களால் செல்லமாய் அழைக்கப்படும் இங்கே மழை பெய்தால் பஸ்களையும் பிரயாணிகளையும் படகில் ஏற்றித்தான் வெளியே கொண்டு வர வேண்டுமாம். பஸ் ஸ்டாண்டின் உட்புறம் முழுக்க முழுக்க கடைகள் நெருக்கமாய் நிறுவப் பட்டிருப்பதால் பிரயாணிகள் ஒதுங்கி நிற்க இடம் கிடையாது. இலவச நோய்த் திட்டத்தைச் செயல்படுத்த இருக்கவே இருக்கிறது பொதுக் கழிப்பிடம். மேற் கூறிய அத்தனை தலச் சிறப்புக்களையும் கொண்டது நாகர்கோவில் மத்தியில் உள்ள பிரதான பேருந்து நிலையம்.

எனவேதான் உங்களைத் தேர்ந்தெடுத்தார், இந்தக் கபாலிகச் சிவ பக்தர்.''

என்னே அற்புதமான விளக்கம்.

எப்படியெல்லாம் என்னை உருவாக்க இவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக் கிறார்கள்!

''ஆமாம்; ஒட்டக்கூத்தர் பெரிதாக என்னை விரும்பிக் குன்றத்தூர் வரை வந்து அழைத் தாரே!''

''மாமன்னர் கண்ணீர் விடாத குறையாகக் கேட்டுக் கொண்டதன் பயன். கூத்தர் மறுத் திருந்தால் மாமன்னரே வருகை தந்திருப் பார்.''

ஓ.... பிறவா யாக்கைப் பெரியோனே! இப்படி ஒரு திருவிளையாடலா?

''உன்னைச் சந்தித்ததில் பெருமைப்படு கிறேன், கபாலீச்கரா!''

''அந்தப் பெருமை ஜோதிக்கும் உரியது.''

''ஆமாம்; ஜோதியாகிய தில்லையம்பல வனுக்கே உரியது. நாம் உணவு கொள்ள லாமா?''

''ஆகா! உங்களுடன் அமர்ந்து உண்ணும் பாக்கியத்தை நான் பெற வேண்டாமா?'' என்றான் கபாலீச்கரன்.

சேக்கிழார் ஏதோ தட்டுப்பட, அதனை நினைவு கூர்ந்து கேட்கிறார்:

''ஜோதி! உங்கள் முயற்சிகளைப் பாராட்டு கிறேன்; ஏற்கிறேன். ஒரு சந்தேகம்.''

''கேட்கலாம் சுவாமி!''

'''பாவாய் எழுந்திரு என்று நான் சொன்னதும், 'நல்ல வேளை, மகளே எழுந் திரு என்று சொல்லாமல் போனீர்களே' என்றாயே, அதன் அர்த்தம்?''

''அவ்வாறு நீங்கள் மகளே என்று அழைத் திருந்தால், உங்களுக்கு மனைவி ஆசை இருப்பதாக அர்த்தம். எனவே இவ்வாறு சொல்லி, மகிழ்ந்து போற்றிக் கொண்டேன்.''

ஜோதி, இப்போது ஜெகஜ்ஜோதியாகக் கண்முன் காட்சி தருகிறாள்.

ஓ.... இவள் மானுடப் பெண்ணல்ல, தேவ மாது!

ஒருவேளை, அந்தச் சிவபெருமானும், பார்வதி தேவியும் இப்படி வந்து சோதனை புரிகிறார்களோ?

சேக்கிழாரது பக்தியுள்ளம் இவ்விதம் எண்ணிப் பார்க்கிறது.

பரிசாரகனை அழைக்கிறார்; உணவு பரி மாறக் கட்டளையிடுகிறார்.

நால்வரும் உண்டு முடித்து மகிழ்ந்தனர்.

''ஜோதி! நேரே கங்கை கொண்ட சோழ புரம்தானே?'' என்றார் சேக்கிழார்.

ஜோதி சொன்னாள்: ''எங்கள் இருக்கை, இனி உங்கள் நிழல்தானே?''

தொடர்ந்து சொன்னான் கபாலீச்கரன்: ''மாண்புமிகு முதலமைச்சர் நிழலைத் தவிர, வேறு குளிர் தரும் நிழலேது?''

''ஏனில்லை? சோழ மாமன்னர் நிழலை விடவா?''

''அதனினும் பெரிது தில்லையம்பல வாணருடைய நிழல்!''

கபாலீச்கரன் மறுமொழி கேட்டுக் கனிந்து நோக்குகிறார் சேக்கிழார்.

கபாலீச்கரனே தொடர்ந்து சொன்னான்: ''அந்தத் தில்லையம்பலவனுக்கு ஈடான நிழல், உங்கள் நிழல்! எனவேதான் ஜோதி இவ் வாறு சொன்னாள்.''

ஆ! இந்த இருவரும் எனது இரு கரங் களல்ல; இறக்கைகள்.....

இவ்வாறு மகிழ்ந்து போனார் சேக்கிழார்.

அன்று மாலையே அவர்களது பயணம் சோழர் தலைநகராம் கங்கை கொண்ட சோழ புரம் நோக்கி நீண்டது.

(தொடரும்)

நன்றி அறிவிப்பு




15.5.1986 — ம் தேதியில் வேலூரில் எங்கள் மகள் செல்வி: V. K. பிரேமகுமாரி, B. Sc க்கும், சென்னை TIDCO கணக்கு அலுவலர், செல்வன்: T. ஞானசேகர் B. Sc. (C.A.) க்கும் நடந்தேறிய திருமணவிழாவிற்கு நேரில் வருகை தந்தும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பியும் சிறப்பித்த நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும், சினிமா அதிபர்களுக்கும், வியாபாரப் பெருமக்களுக்கும், உயர் அதிகாரி களுக்கும், அமெரிக்காவிலிருந்து வருகை தந்து வாழ்த்திய நண்பர் களுக்கும், எங்கள் மனமுவந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள் கிறோம்.

திருமதி & திரு. V. M. K. சுவாமி,

சுவாமி ரேடியோ ஹவுஸ்,
வேலூர் — 632 004.



"இப்படி சுவரேறி குதிச்சுத்தான் சாக்க பள்ளிக் கூடம் போகணும்!"



வேசடிமை



அம்புரோஸ்



கணேசன்

"ஒரு வழி சொல்லிட்டுப் போங்கையா..."

காலனியில் சிறைப்பட்ட தலைமுறைகள்



பாலம் கண்டு பாதை இல்லை



மணவாளக்குறிச்சி பேரூராட்சியில், சேரமங்கலம் எனும் கிராமம். அங்கே கோடித் தோட்டம்விளை எனும் ஹரிஜனக் காலனியைப் பார்வையிட வருமாறு அழைப்பு வந்திருந்தது.

பஸ் ஸ்டாண்டிலேயே காலனியைச் சேர்ந்த கணேசன் காத்திருந்தார். "நல்ல வேளை நீங்க யாரும் அதிக குண்டு இல்லே" என்றார். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. "எங்க காலனிக்குப் போகிற வழியைப் பார்க்கலாம் வாங்க..." என்று கூறி நடந்தவரைப் பின்தொடர்ந்தோம்.

மார்பு உயரத்திற்கு ஒற்றைச் செங்கல் தடிமனுக்கு நின்றிருந்த ஒரு சுவர் அருகே நின்றார். "இப்படித்தான் போகணும், வாங்க....

நாங்களென்ன சித்து வேலைகள் தெரிந்தவர்களா என்ன. சுவரை ஊடுருவிக் கொண்டு போக? விழித்தோம்.

"வேற வழியில்லீங்க. ஓரமாக் கொஞ்சம் இடைவெளி தெரியுது பாருங்க. சைடா நின்னுக்கிட்டு வயித்தை எக்கிக்கிட்டு அப்படி நுழையலாம். இல்லே, இந்தச் சுவர் ஏறிக் குதிச்சாகணும்....

ஓர் ஒற்றையடிப் பாதை கூட இல்லாமல் அந்த ஹரிஜன் காலனி ஊரிலிருந்து ஒட்டு

மொத்தமாய வெட்டப்பட்டிருப்பதின் சோகக் கதை என்ன?

''நாங்க பரம்பரை பரம்பரையா உபயோகிச்சிட்டு வந்த பாதைல குறுக்கே ஒரு வாய்க்கால் வரும். அதைத் தாண்டிப் போகப் பாலமும், பக்கத்திலேயே குடிநீருக்கு ஒரு கிணறும் அரசாங்கம் அமைச்சுக் கொடுத்தது. ஆனா பாலத்தைத் தாண்டிப் போகிற பாதையை அந்த நிலச் சொந்தக்காரங்க காம்பவுண்ட் சுவர் எழுப்பி அடைச்சிட்டாங்க. வேற வழியில்லாம அரசாங்கத்தில் முறையிட்டோம். அவங்க வந்து பேசின பிறகு ரெண்டு நிலச் சொந்தக்காரங்களும் ஆளுக்கு மூன்றடி வீதம் மொத்தம் ஆறடிப் பாதையை எங்களுக்கு இலவசமாகக் கொடுப்பதாக அக்ரிமெண்ட் கூடப் போட்டார்கள்....''

''அப்புறம் என்ன பிரச்னை?''

''அப்புறம்தானே பிரச்னை. 7.3.80ல் பாலம் கட்டினாங்க. 11.11.80ல் இடத்தை சர்வே பண்ணினாங்க. 15.9.81ல் இந்த சொந்தக்காரர் பாதையை மறிச்சு சுவர் எழுப்பிட்டாரு. இன்னொரு சொந்தக்காரர் இலவசம்னு எழுதிக்கொடுத்த அக்ரிமெண்டையே கான்ஸல் பண்ணிட்டாரு. 83ல் கலெக்டர் கூட நேர்ல வந்து பார்வையிட்டாரு. பாலத்திலே இருந்து கொஞ்சம் தள்ளி இன்னொரு பாதை அமைக்கறதா ஏற்பாடு செஞ்சு, அதுவும் நின்னு போச்சு. இந்த நிலத்து வழியாத்தான் பாதை வேணும்னு நாங்க பிடிவாதம் பிடிக்கலே. ஓர் ஆள் போக வர இடம் கொடுங்க போதும்னுதான் கேக்கறோம்...''

தென்னந்தோப்பின் நடுவே ரம்மியமான சூழ்நிலையில் அமைதியாக வசித்து வரும் இந்த ஹரிஜனக் குடும்பங்களுக்கு ஊருக்குள் செல்ல ஒரு பாதை கூட இல்லாதது மகா அநியாயம். குழந்தைகள் பள்ளிகளுக்குப் போக வேண்டுமானால் சுவரேறிக் குதிக்க வேண்டும். பெண்கள் கடைக்குப் போக வேண்டுமென்றாலும் இதே கதிதான்! சைக்கிளில் வரும் போஸ்ட்மேனுக்கு காலனிக்குள் நுழையவே வழி இல்லாததால் சாலையில் இருக்கும் ஒரு கடையில் தபாலைப் போட்டுவிட்டுப் போவது வழக்கம். ஒரு தந்தி கூட நான்கு நாட்கள் கழித்துத்தான் இவர்கள் பார்வைக்கு வந்தது என்பது பரிதாபம். ஒரு நிறைமாதக் கர்ப்பிணி. அவசரமாய் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டிய நிலைமை. கட்டிலில் வைத்துத் தூக்கிக் கொண்டு காம்பவுண்டு சுவர் மீது வைத்து இந்தப்புறம்நான்குபேர் வாங்கிக்கொண்டு...

''சின்னப் புள்ளைங்கள்லேர்ந்து எல்லாரும் கண்ணீர் விட்டு அழுது கூடப் பார்த்தாச்சு. ஆனா யாருக்கும் பாதை கொடுக்க இரக்கமேயில்லே....''

வெறும் வாய் வார்த்தைகளோடு நிறுத்திக்கொள்ளவில்லை. அனுப்பிய மனுக்களின் நகல்கள், வேறு சில தஸ்தாவேஜுகளின் நகல்களைக் காண்பித்தார்கள்.

6.9.1983 தேதியிட்ட ஸ்பெஷல் தாசில்தாரின் கணிப்புகளின்படி, பாலத்திற்கு நேரெதிரே பாதை கொடுக்கப்பட வேண்டும் என்றும், காம்பவுண்ட் சுவர் அந்தப் பாதையை மறித்து வேண்டுமென்றே எழுப்பப்பட்டுள்ளது என்றும் எனவே அந்தப் பகுதியை அரசாங்கம் தன் வசப்படுத்திக் கொண்டு இந்த காலனிக்குப் பாதை ஏற்படுத்தித் தர வேண்டுமென்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்றுவரை இது கிடப்பில் போடப்பட்டுள்ளது.

''நேரடியா நிலச் சொந்தக்காரங்க கிட்டேயே நீங்க கேட்டுப் பார்த்தா என்ன?'' என்றோம்.

''அவங்க கிறிஸ்டியன்ஸ். நீங்க எங்க மதத்துக்கு மாறினா பாதை தரோம்னு சொல்றாங்க. அது எப்படிங்க மதம் மாற முடியும்?''

''அப்படியா சொன்னீர்கள்?'' என்று கேட்டோம், காம்பவுண்டு சுவர் எழுப்பிப் பாதையை மறித்திருக்கும் நிலச் சொந்தக்காரர் அம்புரோஸிடம்.

''இல்லவே இல்லே. இவர்களை மதம் மாற்றித்தான் எங்கள் மதம் வளர வேண்டும் என்ற அவசியமில்லை'' என்றார்.

''ஆளுக்கு மூணடி நிலம் இலவசமா கொடுக்கிறதா அக்ரிமெண்ட் போட்டுட்டு இப்ப தர மறுக்கறீங்களே, நியாயமா?''

''மூணடி பாதை விட்டுத்தான் நாங்க காம்பவுண்டு எழுப்பியிருக்கோம்'' என்று சாதித்தார்கள் அம்புரோஸும் அவர் சகோதரர் யேசடிமையும்.

''எங்கே காட்டுங்கள்?'' என்றோம் விடாமல்.

மிகுந்த தயக்கத்துடன் அம்புரோஸ் கூட வந்தார். ''இதோ இந்த இடம்தான்.''

அவர் சுட்டிக்காட்டிய இடத்தில் அடுத்த பகுதி நிலத்துக்காரர் காம்பவுண்டு எழுப்ப கற்களைக் கொட்டி வைத்து முள்வேலி போட்டிருக்க, வழியெங்கும் தென்னைகள் வேறு குறுக்காக நிற்கின்றன.

''இங்கே பாதையே இல்லையே?''

''அதுக்கு நாங்க என்ன பண்ண முடியும்?''

''நீங்க கொடுத்ததா சொல்ற இடத்தை க்ளியர் பண்ணிக் கொடுக்கலாமில்லே?''

''நாங்க ஏன் செய்யணும்?''

உண்மையில் அந்த ஹரிஜன காலனிக்கு தங்கள் நிலத்தில் பாதை ஒதுக்கிக் கொடுக்க மனசில்லாமல் அவர் பேசுவதாகவே தோன்றிற்று.

தனிப்பட்டவர்களை விடுங்கள். சமூக நலத்துறையும், ஹரிஜன் வெல்ஃபேர் போர்டும் என்ன செய்கிறார்கள்? என்ன செய்யப் போகிறார்கள்?

நாங்கள் பஸ்ஸுக்காகக் காத்திருந்த நேரம், ''எங்களுக்கு ஒரு வழி சொல்லிட்டுப் போங்கையா'' என்று அந்தக் காலனி மக்கள் சூழ்ந்து நின்று கேட்டுக் கொண்டபோது, 'கைலாச நாதா, பரமபிதாவே, அல்லாவே இந்த பாவப்பட்ட ஜனங்களுக்கு ஒரு வழி காட்டக் கூடாதா?' என்று பிரார்த்திக்கத்தான் தோன்றியது. வேறு என்ன செய்ய?

லஞ்ச் டைம்

6.

(ஆபீஸ் தொடங்க இன்னும் அரை மணி நேரம் இருக்கிறது. லஞ்ச் ரூமில் பியூன் மாடசாமி ஒரு கண்ணாடித் தம்ளரில் நுரை பொங்கும் திரவம் ஒன்றை ஊற்றி, இரண்டு 'கல்ப்' அடிக்கிறான். பிறகு தம்ளரையே வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருக்கிறான். அப்போது சட்டென்று உள்ளே நுழைகிறார் ராகவாச்சாரி.)

ராகவா (திடுக்கிட்டு): என்னடா இது கண்றாவி! சே! (முகம் சுளிக்கிறார்)


மாட: ஏன் சார்! குடிக்கக் கூடாதா?

ராகவா: என்னது! குடிக்கிறதையும் குடிச்சுப்பிட்டு, எதிர்த்து வேறே பேசறியா?

மாட: குடிச்சா இன்னு தப்புங்றேன்? ஊர் உலகம், பூராவும்தான் குடிக்குது. நான் என்ன திருட்டுத்தனமாவா இ(த்)தைச் செய்யறேன்? பப்ளிக்காத்தானே குடிக்கிறேன்?

ராகவா: அட மகாபாவி! மேலே மேலே பேசிட்டே போறியே! டேய்....! இது உன் வீடு இல்லே — ஆபீஸ்! ஞாபகம் வச்சுக்க! ஆபீஸ் கட்டடத்துக்குள்ளே குடிக்கிறது நம்ம ரூல்ஸ்படி தப்பு! குடி வேலையைக் கெடுக்கும்!

மாட: உன் ரூலைக் கொண்டு போய்க்



கூவத்திலே கடாசுய்யா! ரூல்ஸாம், ரூல்ஸு!

ராகவா: மாஜீசாமி! டயலாகுக்கு டயலாக் மரியாதை குறைஞ்சுக்கிட்டே வருது.... ஐ வார்ன் யூ! இதுக்குமேலேஏதாவதுபேசினே, சஸ்பெண்ட் பண்ணிடுவேன், ஜாக்கிரதை.

மாட: (திகைப் பணிவுடன்) சார்! சார்! அப்படி எதுவும் செஞ்சு தொலைச்சிடாதே சார்! நான் ஏற்கெனவே உடம்பும் மனசும் நொந்து வெந்து போய்க் கிடக்கிறேன்!

ராகவா: உடம்பு வெந்து போனவன்தான் சாராயத்தையும் சல்பேட்டாவையும் குடிச் சுட்டு உட்கார்ந்திருக்கியா?

மாட: (லேசாகச் சிரித்தபடி) இது நீ நினைக்கிற சரக்கு இல்லே சார்.... வெறும் ஜிஞ்சர் பீர்.... ரெண்டு நாளா வயிறு கடா புடாங்குது.... அதான்....

ராகவா: ஜிஞ்சர் பீரா! அதை அப்பவே சொல்லித் தொலைக்கிறதுக்கென்ன கேடு!

மாட: சும்மா ஒரு தமாஷுக்காக நான் மேலே மேலே எகிறிக்கிட்டே போனேன். என் நொந்த மனசுக்கு ஆறுதலா இருக் கட்டுமேன்னு.....

ராகவா: மனசு நொந்து போகும்படியா என்னடா ஆச்சு?

மாட: ஒண்ணும் தெரியாத மாதிரி கேக் கறியே சார்! அந்த நிர்மலா பொண்ணு அறுந்த செருப்பு கணக்கா என்னைத் தூக்கி எறிஞ்சிட்டதில்லே...:!

ராகவா: நீ இன்னும் பச்சைக் குழந்தை யாகவே இருக்கேடா.... புடவை, நகை களை மாத்தற மாதிரி காதலர்களையும் மாத் திக்கிறதுதான் இப்ப பெண்களுக்கு லேட் டஸ்ட் ஃபாஷன்..... சில துணிச்சல்காரக் கட்டைகள் புருஷனையே மாத்திக்கிறாங்க! நல்லவேளை, கல்யாணம் ஆனதுக்கு அப்புறம் அந்தச் சிங்கப்பூர்க்காரன் பின்னாலே போகா மல் நிர்மலா முன்னாடியே உன்னைக் கழட்டி விட்டாளே! அதை நினைச்சுச் சந்தோஷப் படு!

மாட: அந்த நிர்மலா கய்தே மூஞ்சியிலே தார் பூசணும் சார். அதுக்கு எதுனா ஒரு வழி சொல்லு!

ராகவா: எங்க தெருவிலே காய்கறிக் கடை போட்டிருக்கா ஒரு பொண்ணு.



கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து பலரையும் சந்தித்துக் கட்டுரைகள், தகவல் குறிப்புக்களை வழங்கி யிருப்பவர்கள்: சுரேஷ் — பாலா.

புகைப்படங்கள்: மனோ

மேலட்டை வண்ணப்படங்கள்: என். பிரபாகர்

கோமளான்னு பேரு. பார்க்கிறதுக்குப் பச்சுப் பச்சுன்னு இளசா இருப்பா.... அசப்பிலே உன் 'அலேக்'தான். அவளே வேணு உனக்கு முடிச்சு வைக்கட்டுமா, சொல்லு!

மாட: அதெல்லாம் எதுக்கு சார்? என் மாமனுக்கு மூனு பொண்ணுங்க இருக்கு... மாமன் காத்துக்கினு இருக்காரு, நான் சரின்னு சொல்ல மாட்டேனுன்னு!

ராகவா: அதிலே ஒண்ணைப் பிடி, நோட்டீஸை அடி, கல்யாணத்தை முடி! நிர்மலா அந்தப் பூராணோடு மாலை மாத்திக்கிறதுக்கு முன்னலே நீ மறுவீட்டுக்குப் போய்க் காட்டு!

மாட: என் உடம்பிலே ஓடற தமிழ் ரத்தத்தின் மேலே ஆணை! நான் விடற தமிழ் மூச்சின் மேல் ஆணை! செஞ்சு காட்டறேனு இல்லையா பாருங்க!

ராகவா: அரசியல்வாதி கணக்கா ஆணை வச்சிட்டியா! உருப்பட்ட மாதிரிதான், போ!

(வெறுப்புடன் எழுந்து செல்கிருர்.)

* * * * *

(அன்று லஞ்ச் டைமில் லஞ்ச் ரூம் வழக்கமான கதம்ப மணமும் கலகலப்புமாகக் காட்சி தருகிறது. முத்து பரபரப்புடன் உள்ளே நுழைகிருன். அவன் கையில் பெரிய ஒரு கவர் இருக்கிறது. ராகவாச்சாரியிடம் வந்து கவரை நீட்டுகிருன்.)

முத்து: சாக்லேட் எடுத்துக்குங்க சார்! எனக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கு!

ராகவா: ஒண்ணு, ரெண்டா?

முத்து: எத்தனை வேணும்னலும் எடுத்துக்குங்க சார்!

ராகவா: நான் இதைக் கேட்கல்லே.... பிறந்திருக்கிறது ஒண்ணு, ரெண்டா?

முத்து: ஆண்டவன் புண்ணியத்துலே ஒண்ணோட நிறுத்திக்கிட்டா சார்.... (சாம்பசிவத்தின் பக்கம் திரும்பி) நல்லா பயமுறுத்தி விட்டீங்களே அன்னிக்கு—ரெண்டு பிறக்கும்! மூனு பிறக்கும்னு!

ஆனந்த்: அதுக்கு ஸைக்கலாஜிகலா ஒரு காரணம் இருக்கு முத்து..... நம்ம சாம்பசிவம் சாருக்குப் பெரிய வீட்டிலே முக்கால் டஜன், சின்ன வீட்டிலே கால்.... மத்தவங்களுக்கும் அதே மாதிரி இருக்கட்டும்னு ஆசைப்படருர்!

(சுசீலா உள்ளே நுழைகிருள் வேகமாக)

ராகவா: வாம்மா! ஏன் லேட்டு?

சுசீலா: என்ன சார் இது! ஆபீசுக்கு லேட்டா வந்தால் கேட்கறீங்க—அது நியாயம்.... லஞ்சுக்கு லேட்டா வந்தால் கூடவா?

ராகவா: தர்மசங்கடமான 'கேள்வி கேட்கிற பத்திரிகை நிருபர் மேலே' அரசியல் வாதிங்க பாயற மாதிரி என்கிட்டே சீறி விழுறியேம்மா!

சுசீலா: நான் ஒண்ணும் அவ்வளவு கேவலமானவள் இல்லே! சொல்லப் போனல் நீங்கதான் ஜெயவர்த்தன மாதிரி இரட்டை வேஷம் போடறீங்க!

ராகவா: வாட் நான்ஸென்ஸ் ஆர் யு டாக்கிங்!

சுசீலா: எல்லாம் தெரியும் சார்..... இங்கே லஞ்ச் ரூம்லே ஸ்டாஃபுக்குச் சாதகமா பேசற மாதிரி பாவ்லா காட்டிட்டு, எம்.டி.கிட்டே போய் எங்களுக்கே வெடி வைக்கறீங்க!

ரகுவீர்: பொடி வச்சுப் பேசாதே சுசீ.... பாயிண்டைப் போட்டு உடை!

சுசீலா: எம்.டி. கொடுத்த ஒரு அர்ஜெண்ட் சர்க்குலரை இப்பத்தான் டைப் பண்ணிட்டு வரேன்.... அதான் கொஞ்சம் லேட்டா யிடுத்து....

பாண்டி: சர்க்குலரா?

சுசீலா: ஆமாம்.... நம்ம ஆபீஸ் நேரத்தை மாத்தறாங்க.... எட்டிலிருந்து மூணரை மணி வரைக்கும்தான் ஆபீஸ்! லஞ்ச் டைம் பதினென்றிலிருந்து பன்னிரண்டு வரை!

ஆனந்த்: மெட்ராஸ் ஆல் இண்டியா ரேடியோக்காரங்க காலை நிகழ்ச்சிகளைத் திடுதிடுப்புன்னு மாத்தி அமைச்சது மாதிரியில்லே இருக்கு! வருஷக் கணக்கா இருந்ததைத் திடீர்னு இப்ப மாத்துவானேன்?

ராகவா: வருஷக்கணக்கா இருந்தால் என்னய்யா? மாத்தக் கூடாதுன்னு சட்டமா என்ன? இப்ப மாத்துவோம். இது சரிப்பட்டு வரல்லேன்னு பழைய டைமிங்ஸையே வச்சுப் போம்.... இதுக்குப் போய்க் கூப்பாடு போடுவானேன்?

சிவரா: ரேடியோ நிலைய டைரக்டர் மாதிரியே பதில் சொல்றீங்க சார்!

ஆனந்த்: மொத்தத்திலே நம்ம லஞ்ச் டைம் கோவிந்தா!

பாண்டி: பதினொரு மணிக்குச் சாப்பாடு வரணும்னு, ஒன்பது மணிக்கே எங்க வீட்டிலே சாப்பாடு ரெடியாகணும். என் பெண்டாட்டி அப்பத்தான் காய்கறிக்காரனோடு

கட்டடம் கட்டுவோர், கட்டடக் கலைஞர்கள் மற்றும் காண்டிராக்டர்களுடன் அரசு தனது பிணைப்பை வலுப்படுத்துகிறது


நிரந்தரமான, எப்பொழுதும் மாறுதல் அடையாத உயர்ந்த தரமே அரசு சிமெண்டுகள் மீது அனைவரும் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருப்பதன் ரகசியம். அரசு போர்ட்லண்ட் சிமெண்டின் உன்னதத்தரம் கட்டடம் கட்டுவோர், கட்டடக் கலைஞர்கள் மற்றும் காண்டிராக்டர்கள் அதை உபயோகிப்பதில் பெருமிதம் கொள்ளச் செய்கிறது. குறிப்பிட்ட நிர்ணயங்களுக்கு ஏற்பத் தயாரிக்கப்படுவதால் அரசு சிமெண்ட் இன்று தேர்ந்தெடுத்து வாங்க மிகச் சிறந்ததாக இருக்கிறது.

TANCEM

தமிழ்நாடு சிமெண்ட்ஸ்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
எல் எல் ஏ பில்டிங், 735, அண்ணாசாலை,
சென்னை-600 002
போன்: 89161 (4 லைன்கள்)
டெலெக்ஸ்: MS 6080

ARASU

தொழிற்சாலை: ஆலங்குளம்-626127,
அரியலூர்-621704, மாயனூர்-636108
தமிழ்நாடு.
பெங்களூர் டிப்போ: 19E, மைசூர் பிரிவுச் சாலை பெங்களூர்-560823,
போன்: 357659
எர்ணாகுளம் டிப்போ:
மேற்பார்வை கேரளா ஸ்டேட் வேர்ஹவுசிங் கார்ப்பொரேஷன்,
திருப்புணித்துரா
(எர்ணாகுளம் மாவட்டம்) போன்: 7965.
புனலூர் டிப்போ: VIII/9 ரெயில்வே ரோடு,
ரெயில் நிலையத்திற்கு எதிரில், புனலூர்,
(கொல்லம் மாவட்டம்)



அரசு

போர்ட்லண்ட் சிமெண்ட்

உறுதியான வகையில் வலுப்படுத்துகிறது

"DIPR: 17422/363:86 – 37: Efficient."

பேரம் பண்ணிட்டிருப்பா!

சுசீலா: வெயிட்! வெயிட்! ஆபீஸ்டயத்தை மாத்தச் சொல்லி ஐடியா கொடுத்த புண்ணியவான் யார் தெரியுமா? மிஸ்டர் ராகவாச்சாரி தான்! எம்.டி. இத்தாலி போற அவசரத்திலே இருக்கிறபோது. இவர் ஓ.கே. வாங்கிட்டார்!

சிவரா: அடப்பாவி மனுஷா! தமிழ்நாடு அரசு திமுர் ஞானோதயத்திலே மேல்சபையை ஒழிக்கக் கட்டினது போல எங்க லஞ்ச் டயத்தையும் சுபளீகரம் பண்ணிட்டீரே! நீர் நன்னு இருப்பீரா?

பாண்டி: ராகவாச்சாரி! நீங்க டயாபடீஸ் கேஸ். பட்டினி கிடந்தால் உம்ம உடம்புக்கு நல்லது. உம்ம ஃபேவரிட் மைதிலியோ இளைக்கறதுக்காக டயட்டிலே இருக்கு.... லஞ்ச்டயத்தைஎப்படிமாத்தினாலும்அதுக்குப் பிரச்னை இல்லே.... இந்தத் துணிச்சல்லே தானே-எங்க சோத்துலே கை வச்சிருக்கீங்க!

ஆனந்: விநாச காலே விபரீத புத்தின்னு தெரியாமலா சொன்னாங்க!

முத்து: சார்! மிஸ்டர் சாரி! உங்களுக்கு நான் சாக்லேட் கொடுத்தது தப்பு.... வாயிலே போட்டிருக்கிறதைத் துப்புங்க, சொல்றேன்!

(வெடுக்கென்று ராகவாச்சாரியின் கையிலிருக்கும் இன்னொரு சாக்லேட் டைப் பறித்துக் கொள்கிறான்.)

ராகவா (தலைக்கு மேல் கைகளை உயர்த்திய படி): ஆளை விடுங்கய்யா! ஸம்மர் டயமா இருக்கே.... ஆபீஸைச் சீக்கிரமா ஆரம்பிச்சு முடிச்சா பீச்சுக்குக் கீச்சுக்குப் போக உங்களுக்கெல்லாம் சௌகரியமா இருக்குமேன்னுதான் இப்படி ஸஜெஷன் கொடுத்தேன்....

ஆனந்த்: நல்லாவே சாக்குச் சொல்றீங்க சார்!

பாண்டி: இன்னும் கொஞ்சம் விட்டால் எட்டு மாசத்துக்கு முன்னாலேயே இதைப் பற்றி முடிவெடுத்துட்டோம்னு கூடச் சொல்வீங்க!

ராகவா: இப்ப என்ன செய்யணும் கிறீங்க?

ஆனந்த்: அந்த சர்க்குலரை வாபஸ் வாங்கணும்!

ராகவா: சரி, செய்துடறேன்!

பாண்டி: உங்க வாக்குறுதியை நம்ப மாட்டோம்... எம்.டி. இப்ப ரூம்லேதான் லஞ்ச் சாப்பிட்டுக்கிட்டிருப்பார். உடனே போய், சர்க்குலரை கேன்ஸல் பண்ணிட்டு வாங்க... இல்லாட்டி....

ராகவா: என்னய்யா மிரட்டறே! என்ன செய்வீங்களாம்!

ஆனந்த்: எம்.டி. இத்தாலி போயிட்டு வர்ற வரைக்கும் நீங்கதானே இன்சார்ஜா இருப்பீங்க? ஒரு பேப்பரும் டிஸ்போஸ் ஆகாது. நங்கூரம் பாய்ச்சின கப்பல் மாதிரி, பிஸினஸ் ஸ்தம்பிச்சுப் போயிடும்!

ராகவா: ஒத்துழையாமை இயக்கம் நடத்துவீங்களாக்கும்! அதிலே கலந்துக்கிறவங்களுக்கெல்லாம் மெமோ கொடுப்பேன். சுபர்தார்!

சுசீலா: எந்த மெமோ வந்தாலும் நான் டைப் பண்ண மாட்டேன்!

மைதிலி: நானும்தான்!

ராகவா: (திடுக்கிட்டு): யூ டூ மைதிலி! நீயும் இவங்க கோஷ்டியிலே சேர்ந்துட்டியா?

பாண்டி: ஜி.எம். சாருக்கு மனசுக்குள்ளே ஜூலியஸ் சீஸர்னு நினைப்பு! யூ டூ மைதிலியாமே!

மைதிலி: ஏன் சார் இப்படி எல்லார் வாயிலும் விழறீங்க! உடனே போய் எம்.டி. கிட்டே பேசிட்டு வாங்க!

(முணுமுணுத்தபடி ராகவாச்சாரி எழுந்து போகிறார்.)

பாண்டி: என்யா ரகுவீர்? இந்த அசுவமேத யாகம் நடக்குமா நடக்காதா? ஒரே சஸ்பென்ஸா இருக்கே!

வெள்ளி சந்தனப் பேலா பரிசு!



நினைவூட்டுகிறோம்!

லஞ்ச் டைம் தொடரைக் கவனமாகப் படிப்பதுடன் பத்திரப்படுத்தியும் வைத்திருங்கள்!

12 வது கடைசி அத்தியாயத்தில் நீங்கள் பங்கேற்க ஒரு போட்டி அறிவிக்கப்படும்!

பரிசு: வெள்ளி சந்தனப் பேலா!

ஆறுதல் பரிசுகளும் உண்டு!

இப்போது பிரபலமாக விளம்பரப்படுத்தப் பட்டு வரும் இலவசக் கட்டாயக் கல்வித் திட்டம், 1942லேயே கன்னியா குமரி மாவட்டத்தில் ஸர் ஸி.பி. ராமசாமி ஐயர் அவர்களால் கொண்டு வரப்பட்டது. மாணவர்களுக்கு இலவச உணவும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு கிலோ மீட்டருக்கு இரண்டு ஆரம்பப் பள்ளிகளும் மூன்று கிலோ மீட்டருக்கு ஓர் உயர்நிலைப் பள்ளியும் ஏற்படக் காரணமாக இருந்தவர் அவரே.

சேந்தன் புதூர்.
வேலப்பன்.



ரகுவீர்: அதான் கிண்டியிலே பழையபடி குதிரைப் பந்தயம் நடக்கலாம்னு கோர்ட்லே தீர்ப்புச் சொல்லியிருக்காங்களாமே! நிச்சயமா அங்கே அசுவமேத யாகம் நடக்கும். நீயும் எட்டு வருஷமா சொல்லிண்டிருக்கிற ஜாக்பாட்டை அடிக்கலாம்!

பாண்டி: நான் கேட்டது கர்நாடகாவிலே சம்சாரியான ஒரு சாமியார் அசல் அசுவமேத யாகம் நடத்தி, குதிரையை வெட்டப் போறாராமே, அதை! ஆமாம், நிஜமாகவே குதிரையை வெட்டுவாராய்யா?

ஆனந்த்: டீ.வி.யிலே பி.ஸி. ஸர்கார் (ஜூனியர்) மாஜிக் ஷோவிலே ஒரு பெண்ணை இரண்டு துண்டாக வெட்டிட்டு, அப்புறம் அவளை உயிர் பிழைக்க வைச்சாரே, அதைப் போல இந்தச் சாமியாரும் ஏதாவது மாஜிக் செய்யலாம்!

(ராகவாச்சாரி திரும்பி வருகிறார்.)

பாண்டி: என்ன சார் ஆச்சு? எம்.டி. கிட்டே பேசிட்டீங்களா?

ராகவா: பேசியாச்சு.... ஆர்டரை வாபஸ் வாங்கியாச்சு....!

மைதிலி: இப்பத்தான் சார் உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!

ராகவா: இன்னொரு விஷயம். எம்.டி. ரூமுக்குப் போனேனா, அங்கே எனக்கு ஒரு அதிர்ச்சி!

ரகுவீர்: எம்.டி. உங்களை டிஸ்மிஸ் செய்துட்டாரா!

பாண்டி: போட்ட சர்க்குலரைக் கான்ஸல் பண்ணச் சொன்னதுக்காகக் கையை நீட்டச் சொல்லி, இரும்பு ஸ்கேலாலே ரெண்டு அடி வெச்சாரா?

ராகவா: என்ன ஆச்சு உங்க ரெண்டு பேருக்கும்? கத்திரி வெயில்லே பயித்தியம் கியித்தியம் பிடிச்சுடுத்தா?

ரகுவீர்: சார்! நாக்கை அடக்குங்க! இல்லாட்டி ஒத்துழையாமை இயக்....

ராகவா: வேணாம்பா! வேணாம்பா! அந்த விபரீதவிளையாட்டெல்லாம்வேணாம்... விஷயத்துக்கு வரேன்! நம்ப எம்.டி. ரூம்லே ரெண்டு ஏ.ஸி. யூனிட் இருந்ததில்லையா அதிலே ஒண்ணைக் காணோம்!

அனைவரும்: என்னது! ஏர்க் கண்டிஷனரைக் காணோமா?

ராகவா: யெஸ்.... நாமெல்லாம் லஞ்ச் ரூமுக்கு வந்த பிறகு கொஞ்ச நேரம் கழிச்சு எம்.டி. பாத்ரூமுக்குப் போனாராம். திரும்பி வந்து பார்த்தால், ஒரு யூனிட் மிஸ்ஸிங்!

ஆனந்த்: சுவாமிமலை கோவில் யானை காணமப் போயிடுச்சுன்னு சொன்னாங்க... அப்புறம் என்னடான்னா அந்த யானையை முன்னாலேயேவித்துட்டதாவிளக்கம்கொடுத்தார் அமைச்சர்.... அதைப் போல-இங்கேயும் நடந்திருக்கப் போகுது!

பாண்டி: நல்லா நினைவுபடுத்திப் பாருங்க சார்!

(ராகவாச்சாரி யோசனையில் மூழ்க, மாடசாமி வருகிறான்.)

மாட: ரகுவீர் சார்! உன்னைத் தேடிக்கிட்டு ஊர்லேருந்து ஒரு கிளவரு வந்திருக்காரு! சீக்கிரம் கைகழுவிட்டு வா சார்!

சுசீலா (கலவரத்துடன்): ரகு! நம்ம காதலுக்குக் குறுக்கே கரடியா?

மாட: அவரைப் பார்த்தாலும் கரடி மாதிரி தாம்மா இருக்கு! உடம்பெல்லாம் புசு புசுன்னு முடி!

ரகுவீர்: ஐயோ, எங்க அப்பா!

(கையை உதறிவிட்டு எழுந்து செல்கிறான்.)

ராகவா: (விஷமப் புன்னகையுடன்) சுசீ! சொல்ல மறந்துட்டேனே.... எம்.டி. ரூமுக்குப் போறதுக்கு முன்னாலே கரடியோடு நானும் ரெண்டு வார்த்தை பேசினேன். ரகுவீரோட அப்பா அவனுடைய கல்யாணத்தை நிச்சயம் பண்ணிட்டு வந்திருக்காராம்!

(சுசீலா மயங்கிச் சரிய மற்றவர்கள் உதவிக்கு விரைகிறார்கள்.)

(திரை)











...கவர்ச்சி?

அடித்தவன்...



வீரம், ரௌடித்தனம் —வேறுபாடு என்ன?

• கே. நாகராஜன், பாண்டிச்சேரி – 3.

? இன்றைய அரசியலில் எதிர்காலத்திட்டம் பற்றிச் சிந்திக்கும் அரசியல்வாதிகள் உண்டா?

! எல்லா அரசியல்வாதிகளுமே எதிர்காலத் திட்டம் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் தங்கள் சொந்த எதிர்காலம் பற்றிய திட்டம்!

• க. திவாகராஜன், நெய்வேலி – 2.

? வீரம், ரௌடித்தனம் — இரண்டுக்குமுள்ள வேறுபாடு என்ன?

! ஆபத்தான சூழ்நிலையைப் பொருட்படுத்தாது ரகசியமாகப் படகேறி இலங்கைக்குச் சென்று உண்மை நிலவரங்களை அறிந்து வருவதென்பது வீரம்! கையில் கழியை எடுத்துக் கொண்டு எம். எல். ஏ. ஹாஸ்டல் ஜன்னல் கண்ணாடிகளை உடைப்பதென்பது ரௌடித்தனம்.

• எஸ். எஸ். வாசன், தென்னலப்பாக்கம்.

? டி. ராஜேந்தரின் மகன் சிலம்பரசனுக்கு ரசிகர் மன்றம் உள்ளதாமே? மன்றம் என்றால் என்னவென்று கூடத் தெரியாத குழந்தைகளுக்கெல்லாம் மன்றங்களா?

! இதையெல்லாம் பார்க்கும்போது உண்மையில் இந்தத் தேசம் எப்படித்தான் உருப்படப் போகிறதோ என்ற கவலைதான் நெஞ்சை அடைக்கிறது.

• முத்து செந்தில்வாசன், திருமருகல்.

? அடுத்த முதலமைச்சர் ஜெயலலிதாவா அல்லது ஆர். எம். வீ.யா?"

! மூப்பனாருக்குக் கூட மூக்கில் வேர்ப்பதாகக் கேள்வி. யார் கண்டது?

• என். சீத்தாலட்சுமி, விழுப்புரம்.

? சுதந்திரத்திற்கு முன் ஆங்கிலேயருக்குக் கப்பம் கட்டி வந்தோமே அந்த நிலைமை தற்போது எப்படி மாறியுள்ளது பார்த்தீர்களா?

! அப்போது அதற்குப் பெயர் கப்பம். இப்போது மாமூல்!

• திருமதி அஞ்சலே மாரியப்பன், பிலாய்.

? தனக்கு மட்டும் சுதந்திரத்தை விரும்பும் மனிதன், மற்ற உயிர்ப் பிராணிகளைக் கூண்டில் அடைத்து வளர்ப்பது ஏன்?

! கொடூர மனத்தின் கோரமான வெளிப்பாடுகள்தான் அந்தச் செயல்கள். மனிதன் நாகரிக வளர்ச்சி அடைய அடைய இதை உணர்ந்து கொண்டதன் விளைவுதான் திறந்தவெளி மிருகக்காட்சி சாலைகளும் வனவிலங்கு சரணாலயங்களும்.

நீங்கள் கேட்டவை — தராசு

* ஜி. அர்ஜுனன், திருப்பூர்.*

? 'மாண்புமிகு' என்ற வார்த்தையை நமது அமைச்சர் பெருமக்களுக்கு முன் எதற்காகப் போடுகிறார்கள்? அவர்கள் அப்படி என்ன செயற்கரிய செயல்களைச் செய்து விட்டார்கள்?

! அமைச்சர் பதவி என்பது அந்த அளவுக்கு மாண்புமிக்க பதவி என்பதைக் குறிப்பதற்காகத்தான் அப்படிப் போடுகிறார்கள். ஆனால் அப்படிப்பட்டதோர் மாட்சிமை பொருந்திய பதவிக்கு நமது அமைச்சர்களில் எத்தனை பேர் தகுதியுடையவர்கள் என்பது, தான் சிந்தனைக்குரிய விஷயம். மேலும் ஜனநாயகம் என்று வந்துவிட்ட பிறகு, 'எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் ஓர் விலை, எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்றான பிறகு சிலரை மட்டும் உயர்த்தி வைத்து, மாண்புமிகு, மேதகு, மாண்பமை என்றெல்லாம் எழுதவும்பேசவும்செய்து,புதியஏற்றத்தாழ்வுகளை உருவாக்க அவசியமில்லை. அமெரிக்காவில் ஜனாதிபதிக்குக் கூட எல்லோருக்கும் பொதுவான 'மிஸ்டர்' மட்டும்தான்!

* இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

? அறுபடை வீடுகளில் தங்களின் மனம் லயிப்பது எந்த முருகனிடம்?

! அறுபடை முருகனென்ன, ஹரியும் சிவனும் மற்ற எல்லாத் தெய்வங்களும் அந்தப் பரப்பிரம்மத்தின் வெவ்வேறு வடிவங்கள்தான் என்றாலும் இந்த வறுத்தெடுக்கும் கோடைக்குக் கொடைக்கானலில் உள்ள குறிஞ்சி ஆண்டவர்தான் உத்தமம்! உத்தமம்!!

* எஸ். வி. ராஜசேகர், சென்னை—5.

? கதை இலாகா என்று ஒன்றுமில்லாமலேயே திரைக்கதையை அமைக்கிறார்களே?

! அட, நீங்கள் ஒன்று! அவனவன் கதையே இல்லாமல் கதை பண்ணிக் கொண்டிருக்கிறபோது, நீங்கள் கதை இலாகா இல்லாதது பற்றிப் பெரிதாகப் பேசுகிறீர்களே!

* சிவசேகர், மயிலாடுதுறை.

? மேலவை ஒழிப்பின் மூலம் எதிர்க்கட்சியை அடக்கிவிட்டதாக நினைக்கும் ஆளும் கட்சி பற்றி?

! பாவம்! சிப்பையொளித்து வைத்துவிட்டால் கல்யாணமே நின்றுபோய் விடும் என்று நினைத்துக் கொண்ட பாட்டி காலத்திலேயே இருக்கிறார்கள் ஆளும் கட்சியினர்! இந்தச் சிறுபிள்ளைத்தனம் பற்றி வேறு என்ன சொல்ல?

* குமரி ஜெய், சென்னை—5.

? சூப்பர் ஸ்டார் யாரையோ கன்னத்தில் விளாசி விட்டாராமே?

! ரஜினிகாந்த் அறைந்தது யாரையோ அல்ல; 'ஜெமினி சினிமா'வின் போட்டோகிராபர் எட்வர்ட் என்ற நண்பரைத்தான். சத்ருக்னன் சின்ஹாவைப் படமெடுத்த கையோடு, அனுமதி கேட்டு அருகிலிருந்த ரஜினியையும் எடுத்திருக்கிறார். ஒருவேளை, ரஜினி கவனிக்கவில்லையோ என்னவோ, சீறியிருக்கிறார். உடனே, 'உங்களுக்குப் பிடிக்கலைன்னா ஃபிலிமைக் கழற்றிக் கொடுத்து விடுகிறேன்' என்று சொல்லியிருக்கிறார் எட்வர்ட். அதற்குப் பிறகுதான் இந்த அறை! கடைசி நியூஸ்: ரஜினி, தான் அறைந்ததற்காக எட்வர்டிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாராம். எப்படி? பல பேர் முன்பு பகிரங்கமாக அடித்துவிட்டு, பின்னர் சத்ருக்னன் சின்ஹா எடுத்துச் சொன்னதன் பேரில் ரகசியமாக மேக்கப் ரூமில் கூப்பிட்டு, 'ஸாரி, மனசிலே வெச்சுக்காதப்பா' என்றாராம். லேட்டஸ்ட் நியூஸ்: இதற்காக என்று கூறாமல் அந்த போட்டோகிராபரை ராஜினாமா கடிதம் எழுதிக் கொடுக்குமாறு கேட்டிருக்கிறார்களாம் பத்திரிகை அதிபர்கள்! ஹரே ராமா! ஹரே கிருஷ்ணா! ஸ்ரீ ராகவேந்திராய நம:!

* அ. பட்சிராஜன், நாங்குனேரி.

? இடைத் தேர்தல்களின் முடிவினை வைத்து ஆளும் கட்சியின் திறமையை மதிப்பிட முடியுமா?

! இடைத் தேர்தல் என்பதெல்லாம் காலாண்டு, அரையாண்டுத் தேர்வுகள் மாதிரிதான். என்றாலும் இவையே முழு ஆண்டுத்தேர்வின் முன்னோடிகளாக இருந்து விடுவதுமுண்டு!

* முருகதாசன், ஸ்ரீரங்கம்.

? எம். ஜி. ஆர்.—கருணாநிதி ஆகிய இருவரில் பின்னவர் மட்டும் உங்களை அதிகம் கவரக் காரணம்?


! இப்போது கூட எம். ஜி. ஆரைப் பக்கம் பக்கமாகப் புகழ்ந்து தள்ள வேண்டும் என்ற தணியாத ஆசைதான். ஆனால் அதற்கொரு வாய்ப்பளிக்கும் வகையில் அவர் ஏதாவதொரு உருப்படியான காரியத்தைச் செய்து காட்ட வேண்டாமா? கல்கி, எம். ஜி. ஆரை மனப்பூர்வமாகப் பாராட்டிய கால கட்டங்களும் உண்டு; 'கல்கி வாங்கிப் படிக்காதீர்கள்' என்று கருணாநிதி உடன்பிறப்புக்களுக்கு முரசொலியில் 'அறிவுரை' வழங்கிய கால கட்டங்களும் உண்டு! தலைவர்களின் செயல்கள்தாம் அவ்வப்போது விமர்சனத்துக்கு உள்ளாகின்றனவே தவிர, நமக்கு யாரிடமும் பகையோ, பாசமோ; வெறுப்போ கவர்ச்சியோ கிடையாது.

* ரூ. 10 பரிசு பெறுபவர்:
ஜி. அர்ஜுனன்,
புதுராமகிருஷ்ணாபுரம் முதல் வீதி,
திருப்பூர் — 638 607.

குட்டிச் செய்திகள்...



கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டிப் பழம் என்று ஒரு வகைப் பழம் கிடைக்கிறது. இதென்ன பழம்? வாழைப் பழம்தான்! இந்த வாழைப் பழத்தில் என்ன விசேஷம் என்றால் நன்றாக முற்றின பழமே நமது கை கட்டை விரல் சைஸுக்குத்தான் இருக்கிறது. பருமன் — நீளம் எல்லாவற்றிலும். ஆனால் சுவையோ அபாரம்! 'மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது' என்னும் பழமொழி இந்தப் பழத்தைக் கொண்டுதான் வந்ததோ?



சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பு காலரா நோயால் மக்கள் பெருமளவில் இறந்தபோது, துணிச்சலுடன் இளநீரை ரத்தக் குழாய் மூலம் ஏற்றிப் பல உயிர்களைக் காப்பாற்றிய டாக்டர் எம்.ஈ. நாயுடு கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவர் மஹாத்மா காந்தியின் நெருங்கிய நண்பர்.

டாக்டர் என். கிருஷ்ணசுவாமி, பெங்களூர்.



குமரி மாவட்டத்தில் கேரளபுரம் என்னும் ஊரில் குடிகொண்டுள்ள மகாதேவர் கோயில் உட்பிராகாரத்தில் அமைந்த பிள்ளையார் விக்கிரகம் விசேட அமைப்புடன் விளங்குகிறது. இந்த விக்கிரகம் ஆறு மாத காலம் வெள்ளை நிறமாகவும், அடுத்த ஆறு மாத காலம் கரு நிறத்திலும் காட்சியளிக்கும்!

குமாரஸ்வாமி, வடிவீஸ்வரம், நாகர்கோவில்.



கற்றுவா, கண்ணும்மாமூடு, செருப்பாலூர், பயணம், ஈசல் தங்கு, ராணித்தோட்டம், ராஜாக்கமங்கலம் ஆகியவை இம்மாவட்டத்தில் உள்ள சில ஊர்களின் பெயர்கள். தமாஷாக இல்லை?

இப்ராஹிம், குளச்சல்.



வர்மக்கலை என்று சொல்லப்படும் ஒரு சிறப்பான யுத்தக் கலை கன்னியாகுமரி மாவட்டத்தில் வெகு பிரசித்தம். ஜூடோ, கராத்தே, குங்ஃபூ இவற்றிற்கெல்லாம் முன்பே இக்கலை தோன்றிவிட்டது. இக்கலையில் வல்லவர்கள் இன்றும் பலர் இம்மாவட்டத்தில் இருக்கிறார்கள்.

எம்.பி. சிங், தக்கலை.



வீதியில் வசிக்கும் விடுதி மாணவர்கள்

இன்றைக்கு நியூஸ் பேப்பர் படித்து விட்டீர்களா?

ஏதாவது ஒரு மூலையில் எந்தக் கட்சி அரசியல்வாதியாவது ஹரிஜன முன்னேற்றம் பற்றி மீசை துடிக்கப் பேசியிருப்பாரே? அவரைப் பிடியுங்கள். தரதரவென்று இழுத்துக் கொண்டு நாகர்கோவில் வாருங்கள். காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தை ஒட்டி இருக்கும் மாணவர் விடுதிக்குள் நுழையும்போதே தோளில் போட்ட துண்டை எடுத்து மூக்கைப் பொத்திக் கொள்வார் மனிதர்.

ஆதி திராவிட மாணவர்கள் தங்கும் அந்த விடுதியில் அடிப்படை வசதிகள்கூடக் கிடையாது. மொத்தம் இரண்டு கட்டிடங்கள். ஒன்று பள்ளி மாணவர்களுக்கு. இன்னொன்று கல்லூரி மாணவர்களுக்கு.

நாங்கள் போன நேரம், பொழுது சாய்கின்ற நேரம். எங்களைப் பார்த்ததும் வாசல் புறம் நின்றிருந்த மாணவர்கள் வந்து மொய்த்துக் கொண்டார்கள். ஒருவர் மட்டும் கொஞ்சம் விரோதமாகப் பார்த்தார். ''பத்திரிகைக்காரங்களா ஸார் நீங்க? நல்லது செய்யறேன்னு இருக்கறதை எழுதிடுவீங்க. உள்ள ஒண்ணு ரெண்டு வசதியும் அப்புறம் கட்டாயிடும் எங்களுக்கு''. சமீபத்திய ஓர் அனுபவம் அவர் குரலை நொந்து போக வைத்திருந்தது.

''மொத்தம் எத்தனை பேர் இங்கே தங்கியிருக்கீங்க?'' என்றேன், விடாமல்.

''நூறு பேர் இருக்க வேண்டிய இடத்தில் நூத்திப் பதினெட்டுப் பேர் இருக்கோம். மொத்தம் இருபது ரூம்கள். வார்டனுக்கு ஒன்று, சமையல் செய்ய ஒண்ணுன்னு ஒதுக்கிட்டு, மீதியிருக்கிறதில ரூமுக்கு ஏழு பேர் எட்டுப் பேர்ன்னு இருக்கோம். பெட்டி, புஸ்தகம் வச்சுக்கத்தான் இந்த ரூம். மத்தபடி எல்லாத்துக்கும் நாங்க வெளியேதான் போகணும்.''

''இவ்வளவு பெரிய விடுதியிலே வசதிகள் இல்லேங்கறீங்களா?''


''நாங்க என்ன சார் சொல்றது? நீங்களே நேரே பார்த்துக்குங்க. டேய், யாராவது ரூம்லேர்ந்து ஒரு பல்பைக் கழட்டிக் கொண்டாங்க...

''பல்பா, எதுக்கு?''


''எங்க லெட்ரீன்லாம் நீங்க பார்க்க வேண்டாமா? அங்கே லைட் கெடையாது. லைட் அவசியமும் இல்லே. அதை உபயோகப் படுத்தற மாதிரி இருந்தாத்தானே?''

இரவல் பல்பு போட்டு காரிடாரில் வெளிச்சம் விழுந்து கழிவறைகளில் எட்டிப் பார்த்தவுடன், 'வெடுக்'கென்று முகத்தை வெளியே இழுத்துக் கொண்டோம். ஆதாம் ஏவாள் காலத்திலேருந்து தண்ணீர் பார்க்காத பயங்கர அறைகள்!

''ஒருநாள்விட்டு ஒருநாள் நாகர்கோவில்ல தண்ணி வரும். நெனேச்சா எப்பவாச்சும் ஹாஸ்டலுக்கும் வரும். ஆனா இந்த பைப்பிலெல்லாம் வராது. ஹாஸ்டலுக்கு வர்ற தண்ணி எப்படியிருக்குன்னு பார்க்கலாம் வாங்க.''



* அடியில் அரை அங்குல நீருடன் தண்ணீர்த் தொட்டி தண்ணீரைத் தொட்டால் 'பிசுக்'!



* ஆதாம் ஏவாள் காலத்திலிருந்து தண்ணீர் காணாத கழிப்பறைகள்

பூமியில் பள்ளம் வெட்டிக் கட்டப்பட்ட சிமெண்ட் தொட்டி. அரையங்குலம் தண்ணீர் நின்றது. நீர் வாழ் சகல ஜீவராசிகள், சுயேச்சை வேட்பாளர்கள் போல இலக்கு இல்லாமல் அந்த நீரில் கொட்டமடித்துக் கொண்டிருந்தன.

''தண்ணியைத் தொட்டுப் பாருங்க. பிச்சக்குனு அப்படியே ஒட்டிக்கும். "இந்தத் தண்ணிலதான் எங்களுக்குச் சமையல்.... இது வராதபோது கிணத்திலேர்ந்து உப்புத் தண்ணி எடுத்துக்குவாங்க. குளிக்கறதுக்குக் கொள்றதுக்கு நாங்க கட்டாயம் வெளியே தான் போகணும். காலேல நாலு மணிக்கெல்லாம் எழுந்து மூணு கிலோ மீட்டர் நடந்து ஒழுகினசேரியாறு இல்லாட்டி தத்தையார் குளத்தில போய்க் குளிச்சுட்டு வருவோம். அதோ பாருங்க, அதுதான் எங்க பிளே கிரவுண்ட். விளையாடறதுக்கெல்லாம் உபயோகப்படுத்தறோம்னு தப்பித் தவறிக் கூட நெனேச்சுடாதீங்க. அதுதான் காமன் லெட்ரீன் — எங்களுக்கு மட்டுமல்ல, பொது மக்கள்ல சில பேருக்குக்கூட.....''

பார்த்தால் பற்றிக் கொண்டு வந்தது. இத்தனே சுகாதாரமற்ற சூழ்நிலேயில் ஒரு கல்லூரி விடுதியா?

''பக்கத்திலேயே போலீஸ் சூப்பிரண்டெண்டண்ட் ஆபீஸ் இருக்கே. அங்கே போய் கம்ப்ளெயிண்ட் செய்யக் கூடாதா நீங்க?'' என்று கேட்டவுடன், இந்த வருஷத்து மகா ஜோக் போல் பாவித்துச் சிரித்தார்கள்.

''நுழையறப்ப கேட் கிட்ட பார்த்தீங்களே அசிங்க அசிங்கமா... யார் வேலேன்னு நெனேக்கறீங்க? போலீஸ்காரங்களுக்கும் இதுதான் லெட்ரீன். இதுவாச்சும் பரவாயில்லே. வெகேஷன் டயத்தில இங்க விபச்சாரமே நடக்கும். சில நாள் காலேல பார்த்தீங்கன்னா வாசலாண்டே நெறைய நிரோத் உறைகள் இறைஞ்சு கெடக்கும்.''

அட அநியாயமே!

''ஹரிஜன் வெல்பேர் போர்டுல கம்ப்ளெயின் பண்ணினேம். 'ஏண்டா, ஓசிக் கஞ்சி குடிக்கறவன் சும்மா குடிச்சிட்டுப் போக வேண்டியததுதானே'ன்னு அந்த ஆபீஸ்ல இருக்கறவங்க எடுத்தெறிஞ்சு பேசினங்க. புதுசா காண்ட்ராக்ட் எடுத்து டியூப் லைட்டெல்லாம் போட்டாங்க. ஆறு மாசத்துக்குள்ள அத்தனேயும் செத்துப் போச்சு. பாக்கறீங்களே, இந்த மங்கலான சாதா பல்ப் வெளிச்சத்திலதான் ரூமுக்கு ஏழு பேர் படிக்கணும். அதுவும் இன்ஜினீயரிங் டிராயிங் வரையறவங்க பாடு பரிதாபம்.''


''சாப்பாடாவது நல்லா கெடைக்குதா?''

''நல்லா கேட்டீங்க... எட்டு வருஷத்துக்கு முன்னல ஒரு மாணவனுக்கு மாசத்துக்கு எண்பது ரூபாய்ன்னு சாப்பாட்டுக்கு ஒதுக்கினங்க. இன்னி தேதி வரைக்கும் அதே எண்பது ரூபாய்தான். கணக்குப் போட்டுப் பார்த்தா ஒரு நாளேக்கு ரெண்டு ரூபா அறுபத்தேழு பைசா — மூணு வேளேக்கும் சேர்த்து... சாப்பாடு எப்படியிருக்கும்னு நீங்களே யோசிச்சுக்குங்க.''

கொடுமை!

ஹாஸ்டலேச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்து வெகு நாளாயிற்று. ஆனல் அந்த விடுதியின் மகா நாற்றமும், மாணவர்களின் பரிதாப முகங்களும் இன்னும் நினேவில் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றன.

பிரதமருக்கு மட்டும் ஏன் புரியவில்லை?





* அஸ்ஸாம் முதல்வரின் பேட்டியில் அஸ்ஸாமின் இன்றைய நிதி நிலைமையையும், அதன் பழங்கால அருமை பெருமைகளையும் கூறி, அங்கு இன்றுள்ள ஏற்றத் தாழ்வுகளுக்கு என்ன காரணம் என்பதைப் படம் பிடித்துக் காட்டியது பாராட்டுக்குரிய விஷயம்!

ஒண்டிப்புதூர், கா. க. வேலாயுதம்.

* ஆறு ஆண்டு காலம் அஸ்ஸாம் மாநிலத்தை ஆட்டிப் படைத்தவரும், மத்திய அரசின் கண்களில் விரலை விட்டு ஆட்டியவரும், அஸ்ஸாம் மாநிலத்தின் விதியையே மாற்றி அமைத்தவரும், மாணவர் 'அரசை நிலைநாட்டிச்' சரித்திரம் படைத்தவருமான மஹந்தாவை அட்டையில் போட்டுச் சிறப்பித்த ஒரே தமிழ்ப் பத்திரிகை கல்கி தான்!

நெல்லிக்குப்பம்,
எஸ். ஜெ. சலீம் தமீஜுதீன்.

* இவ்வாரத் தராசு பதில்கள் நறுக்! நறுக்! நறுக்!

ஈரோடு – 6, கே. ரமேஷ்.

* அறுபத்திரண்டு வைதான மேலவையைக் கலைப்பதை நயமாகக் கண்டித்திருக்கும் தலையங்கம் வெகு அருமை!

மன்னார்குடி. பி. ஆர். சோபாலன்.

* மேலவை ஒழிப்பு பற்றித் துல்லியமாகத் தலையங்கம் எழுதிவிட்டீர்கள்... சரி! ஆனால் தூங்குபவனை எழுப்பலாம்; தூங்குவது போல நடிப்பவனை எழுப்ப முடியுமா? எல்லாமே வேஸ்ட்...

ஈரோடு. ஸ்ரீ ரேவதிப்ரியன்.

* 'எதிர்க்கட்சிகள் ஒழிப்பு!' என்ற புரட்சிகரமான இன்னொரு மசோதாவும் சட்டமன்றத்தில் நிறைவேறப் போகிறதா ...? வேண்டாம் சார், விளையாட்டு. உங்கள் வாக்கு பலித்தாலும் பலித்து விடும்!

திருச்சி – 20. ஆர். அப்துல் சலாம்.

* ரஷ்யாவில் நடந்த செர்னோபில் கதிரியக்க விபத்தைத் தொடர்ந்து கம்ப்யூட்டர் யுகக் கற்பனை கொண்டு பின்னப்பட்ட 'மழை விழும் நேரம்' கதை வெளி சூப்பர்! எப்படிப்பட்ட சட்டத்திற்கும் எச்சரிக்கைக்கும் அப்பாற்பட்டதே தாய்ப்பாசம் என்பதைக் காட்டியது.

அரியலூர். ஒ. நாகராஜ்.

* எளிய வார்த்தைகளின் மூலம் உள் மனத்தின் ஆழ்ந்த உணர்வுகளை நயமாகச் சித்திரித்த அற்புதமான சிறுகதை 'ஜோரா'வின் 'மௌன ஆயுதங்கள்!'

கும்பகோணம் – 1,
பி. கே. செல்விதாசன்.

* ஒரு பக்கம் சமரசப் பேச்சு வார்த்தையை நடத்திக்கொண்டே, மறுபக்கம் அப்பாவித் தமிழர்களை, இலங்கை ராணுவம் கொன்று குவிப்பதை அப்பட்டமான கார்ட்டூனாக வரைந்திருந்தார் உமாபதி. நமது பிரதமருக்கு மட்டும் ஏன் சார் இது புரியவே இல்லை?

நீடாமங்கலம்,
திருமதி ராணி கோவிந்தகுமார்.

* சோதனைகளையெல்லாம் சாதனைகளாக்கிக் கரும்புச் சக்கையிலிருந்து நியூஸ் பிரிண்ட் தயாரிக்கும் முயற்சியில் முழு வெற்றி பெற்று, உற்பத்தியைத் துவங்கியிருக்கும் தமிழ்நாடு நியூஸ் பிரிண்ட் காகிதத் தொழிற்சாலையையும் தமிழக ஆராய்ச்சியாளர்களின் சாதனைகளையும் நாம் நினைத்து நினைத்துப் பெருமைப் பட்டுக்கொள்ளலாம்.

பண்ருட்டி. எஸ். தமீஜுதீன்.

* கல்கியில் வெளியாகும் நகைச்சுவைத் துணுக்குகளைத் தூக்கிச் சாப்பிட்டுவிட்டது வாசகர்கள் பங்கேற்ற 'சந்தர்ப்பச் சிரிப்பு!'

திருமுதுகுன்றம். சித்ராப்ரியன்.

* உலக சமாதான ஆன்மீக வேள்வியில் குடியரசுத் தலைவர் நிகழ்த்திய சொற்பொழிவைத் தமிழில் உணர்ச்சியுற மொழி பெயர்த்ததாக ஒருவரைப் பாராட்டினீர்களே, அவர் யார் என்று சொல்லவில்லையே! அவர்தான் சென்னைப் பல்கலைக்கழக இந்திப் பேராசிரியர் டாக்டர் த. க. குப்புசாமி. இவர் சங்க இலக்கியத்தோடு இந்திப் பாடல்களை ஒப்பிட்டு ஆய்ந்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

சென்னை – 5.
பூவிளை கருப்பையன்

* குப்புசாமி



வட்டமேஜை

நாகர்கோவில்



நகர் வலம்...

"அதிகாரிகளெல்லாம் பணத்தை மிஸ் யூஸ்செய்துவிட்டார்கள். அதனால்இப்போது முனிசிபாலிடியில் பணமே இல்லை!" இது தான் பல நகர்மன்றத் தலைவர்கள் தாங்கள் பதவியேற்றதும் முதலில் வெளியிட்ட அறிக்கை. உங்கள் நகராட்சியில் எப்படி?" என்று நாகர்கோவில் நகர் மன்றத் தலைவர் தர்மராஜிடம் (தி.மு.க) கேட்டோம்.

"இங்கு அப்படிச் செய்துவிட்டார்கள் என்று சொல்லிவிட முடியாது. அப்படியே இருந்தாலும் இப்போது நான் அதுபற்றி யெல்லாம் தோண்டித் துருவி ஆராயவும் விரும்பவில்லை. மக்கள் பிரச்னைகளைத் தீர்ப்பதில்தான் முழு கவனத்தையும் செலுத்திக் கொண்டிருக்கிறேன்."

"இதுவரை அப்படி என்ன பிரச்னைகளைத் தீர்த்திருக்கிறீர்கள்?"

"ஏறத்தாழ நாகர்கோவிலில் குடிநீர்ப் பிரச்னை என்பதே இல்லை என்று சொல்லலாம். அந்த அளவுக்குத் துரிதமாகச் செயல்பட்டிருக்கிறோம். எரியாமல் கிடந்த வீதி விளக்குகளையெல்லாம் சரி பார்த்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் இரண்டே மாதங்களில் அதையும் நிறைவேற்றி விடுவோம். இவற்றோடு பாதாளச் சாக்கடை, சுரங்கப் பாதை போன்ற திட்டங்களும் இருக்கின்றன...."

"இவையெல்லாம் சரிதான். நாங்கள் நாகர்கோவிலைச் சுற்றிப் பார்த்தபோது பள்ளிக் கூடங்களின் முன்னாலேயே ஆபாச சினிமா போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருப்பதைப் பார்த்தோம். இதைத் தடுக்க வேண்டாமா?"

"நிச்சயமாகத் தடுப்போம்!"

"நாகர்கோவில் பஸ் ஸ்டாண்டு பற்றி நாங்கள் சொல்லவே தேவையில்லை...."

"உண்மைதான். அதன் தற்காலிகத் தீர்வுக்காக விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். பிறகு அதுவேறு இடத்திற்கு இட மாற்றம் செய்யப்படவும் இருக்கிறது. பஸ்ஸ்டாண்டில்இரண்டுமாடிகள் அமைத்து, கீழே வெளியூர் பஸ்களும் மேலே டவுன் பஸ்களும் நிற்க வசதி செய்ய முடியுமா என்றும் யோசித்துக் கொண்டிருக்கிறோம்!"

"அருமையான யோசனைதான். ஆனால் அதைக் கட்டும் காண்ட்ராக்டர்கள் சிமெண்டைச் சரியான விகிதத்தில்தான் கலந்து கட்டுகிறார்களா என்பதை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். இல்லையென்றால் அந்தமாடி பஸ்ஸ்டாண்டே ஒருநாள் நூற்றுக் கணக்கான உயிர்களைப் பலி வாங்கிவிடக் கூடும்!" என்று நாங்கள் கூறியபோது "உண்மைதான்" என்று வாய்விட்டுச் சிரித்தார் தர்மராஜ்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032. (Phone: 431543)
Assistant Editor: P. S. Mani. Editor: K. Rajendran.


வேறெந்த துணிதான் இப்பெயரை அணிந்துவர முடியும்?
ஸ்டேன்ரோஸ்®
• சூட்டிங் • ஷர்ட்டிங்
• சேலைகள் • டிரெஸ் மெட்டீரியல்
• படுக்கை விரிப்பு • ஃபர்னிஷிங்
• ஷர்ட்டுகள் • ஃப்யூஸிபிள் லைனிங்


எனது கூந்தலை சுத்தம் செய்து கண்டிஷன் செய்ய...
எனது மேனி நிறம் காத்திட... அங்கமெங்கும் பொங்கும்
எழில் பேணிட... எனதருமை க்ரௌனிங் க்ளோரி!
Dimple Kapadia
Godrej
கூந்தலுக்கும்,
சாதன சோப்